பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 28 திங்கட்கிழமை (14.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 018

# அதிகாரப் பகிர்வுத் திட்ட அடிப்படையை இந்தியாவிடம் கையளித்தது இலங்கை அரசு

## மூவர் உயர்மட்டக் குழுவின் புதுடில்லி விஜயத்தின் போது

கொழும்பு, டிசெம்பர் 14

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வென்று மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர், அவர் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் அதி காரப் பகிர்வுத் திட்டத்தின் அடிப்படை விடயங்கள் அடங்கிய ஆவணம் ஒன்றை இலங்கை அரசு இந்தியாவிடம் கையளித்திருப்பதாக நம்பிக்கையாக அறியவந்தது.**

இலங்கை அரசின் உயர்மட்டக்குழு கடந்த வாரத்தில் - புதன், வியாழக் கிழமைகளில்- புதுடில்லிக்கு விஜயத்தை மேற்கொண்ட வேளையிலேயே இந்த இரண்டு பக்க ஆவணம் புதுடில்லி அதிகார வர்க்கத்திடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் அவரின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ, மற்றொரு சகோதரரும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதி

(20ஆம் பக்கம் பார்க்க)

## சகல பல்கலைக் கழகங்களிலும் ஒரே தினத்தில் மாணவர் அனுமதி

கொழும்பு, டிசெ. 14

கடந்த முறை நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்களை ஒரே தினத்தில் நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவிக்கின்றது.

ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க இது குறித்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

இவ்விடயம் குறித்து சகல பல்கலைக் கழகங்களினதும் நிர்வாகிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று வாரங்களுக்குள் பல்கலைக்கழக விண்ணப்பத்திற்கான பிரவேசக் கைநூல் வெளியிடப்படும்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைய முன்வந்த புலிகளைக் கொல்ல களத் தளபதிகளுக்கு உத்தரவிட்டவர் கோத்தாவே

### ஜெனரல் பொன்சேகா அதிர்ச்சித் தகவல்



கொழும்பு, டிசெ. 14

விடுதலைப் புலிகளுடனான மோதலில் இறுதித் தருணங்களில் சரணடைய முன் வந்த அந்த அமைப்பின் சிரேஷ்ட உறுப் பினர்களான நடேசன், புலித்தேவன், ரமேஷ் போன்றவர்களைச் சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே உத்தரவிட்டார். - இப்படி முன்னாள் இராணுவத் தளபதியும் எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்திருக்கின்றாராம்.

'த சண்டே லீடர்' வாரப் பத்திரிகைகு அவர் அளித்துள்ள பேட்டியிலேயே - அரசியல் ரீதியில் கடும் சர்ச்சைகளை உருவாக்கக்கூடிய - இந்த விவரத்தை ஜெனரல் சரத் பொன்சேகா வெளியிட்டிருக்கின்றார்.

கோத்தபாய ராஜபக்ஷ, விடுதலைப்புலி

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 14

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு சலுகைகள் வழங்கப்படக்கூடாது என்றும், அது தேர்தல் சட்டத்திற்குப் புறம்பானது என்றும் தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டி அறிவுறுத்தி உள்ளார். குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் ஊடாகவே தேர்தல் ஆணையாளர் இந்த விடயங்களை ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் மதிய போசன விருந்து அளிக்கப்படவிருந்தது எனவும், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேர்தல் ஆணையாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் துறைமுக அதிகாரிகள் சந்திப்பு ஒன்றை நடத்த வேண்டும் எனவும், அந்தச் சந்திப்பு கட்டாயமானது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிடப் படுகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவின் குற்றச்சாட்டை மறுக்கிறார் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

### பாராட்டு விழாவில் பேசியதற்கு முற்றிலும் முரண் என்கிறார்



கொழும்பு,டிசெ.14

வன்னியில் நடைபெற்ற போரின் இறுதித் தருணத்தில் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அனைவரையும் சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பிரிகேடியர் சவேந்திர சில்வாவுக்கு உத்தரவிட்டார் என்று முன்னாள் இராணுவத்தளபதி தெரிவித்த குற்றச்சாட்டை மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க அடியோடு மறுத்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

'த சண்டே லீடர்' பத்திரிகைக்கு சரத் பொன்சேகா வழங்கிய பேட்டியில் குறிப்பிடப்பட்ட விடயம் குறித்து அமைச்சர் சமரசிங்கா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இப்போது ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கி இருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி தெரிவித்திருப்பது முழு நாட்டுக்கும் அதற்கு மேலாக மக்களுக்கும் இந்தப் போர்க்களத்தில் அருகருகே நின்று களமாடித் தமது உயிர்களை அர்ப்பணித்த மற்றும் காயமுற்ற அவரது சகாக்களுக்கு இழைக்கும் நம்பிக்கைத் துரோகம் ஆகும்.

போரில் வெற்றிபெற்றதைப் பாராட்டி அம்பாலங்கொடையில் ஜூலை மாதம் நடை

(20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கை நோக்கி 'வார்ட்' புயல்; இன்று திருமலையிலிருந்து நகரும் சாத்தியம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

திருகோணமலைக்குக் கிழக்கே 250 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ள வார்ட் (WARD) என்ற புயல் காற்று, வடமாகாணத்தை நோக்கி 80 மைல் வேகத்தில் நகரக் கூடுமென கொழும்பு வானிலை அவதான நிலையம் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு அறிவித்திருந்தது.

இதனால் வடமாகாணம், வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் , வடமேல் மாகாணம்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு சுதந்திரமாகச் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.14

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு நாளை 15 ஆம் திகதி முதல் பக்தர்கள் எவ்வித சோதனை நடவடிக்கைக்கும் முகம் கொடுக்காது, சுதந்திரமாகச் சென்று வழிபட அனுமதிக்கப்பட்வுள்ளனர் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ உதயனுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அரசின் உத்தியோக பூர்வ அறிவிப்பு இன்று வெள வருமென எதிர்பார்க்கப்படுகின்றது . (அ - 04)

## பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா பதவிகளைத் துறந்து ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடுவார்

அம்பாறை, டிசெ. 14

உயர்கல்வித்துறைப் பிரதி அமைச்சரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயோன் முஸ்தபா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடு வதற்கு தயாராகி வருகிறார்.

இது குறித்து சாய்ந்தமருது, பரடைஸ் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் சூசகமாகத் தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் பிடிபட்ட விமானம் இலங்கையை நோக்கி வரவில்லை

### மறுக்கின்றனர் கொழும்பு அதிகாரிகள்

கொழும்பு, டிச. 14

வட கொரியாவிலிருந்து இலங்கைக்கு ஆயுதங்களுடன் வந்த விமானமே தாய்லாந்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுவதை இலங்கை அரசு நிராகரித்துள்ள அதேவேளை, இந்தச் சம்பவம் ஆசிய நாடுகள் மத்தியில் பதற்றத்தை

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியுடன் பகிரங்க விவாதம் நடத்துவதற்கு பொன்சேகா தயாராம்

கொழும்பு, டிச. 14

அரசின் கொள்கை மற்றும் அதன் ஊழல், மோசடிகள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பகிரங்கத் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் ஈடுபடத் தான் தயார் என்று ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுக் கூறினார்.

கொழும்பில் நேற்று சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் கட்சிகள் நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜனாதிபதியுடனான பகிரங்க விவாதத்திற்கு பொன்சேகா இணக்கம் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பொன்சேகா கூறியவை வருமாறு:-

அனைத்துக் கட்சிகளின் வேண்டுகோள்களுக்கு இணங்க நான் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகிறேன். ஊழல், மோசடிகளை இல்லாதொழித்தல், ஜனநாயகத்தை நிலைநாட்டுதல், நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குதல் மற்றும் அனைவரும் நிம்மதியாக வாழக்கூடிய நாடொன்றை உருவாக்குதல் போன்ற கொள்கைகளின் அடிப்படையில் தான் நான் தேர்தலில் குதித்துள்ளேன்.

மக்கள் இப்போது அனுபவிக்கும் பொருளாதாரப் பிரச்சினையில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். இப்பிரச்சினைக்கு நாம் முற்றுப்புள்ளி வைப்போம். ஊழல், மோசடிகள் காரணமாகப் பொருள்கள் மீதான வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இன்று யுத்த வெற்றி 'கட்-அவுட்'களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மின்சாரக் கம்பத்திலும் யுத்த வெற்றியைத் தெரிவிக்கும் 'கட்- அவுட்'கள்தான் காணப்படுகின்றன. - என்றார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அரசின் கொள்கை, கோட்பாட்டு விடயங்கள் தொடர்பாக பொன்சேகாவுடன் பகிரங்க தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் ஈடுபட வருமாறு ஜனாதிபதிக்குச் சவால் விடுத்தார்.

அப்போது அமர்ந்திருந்த சரத் பொன்சேகா ஜனாதிபதியுடனான விவாதத்திற்குத் தான் எப்போதும் தயார் என்றார்.



எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுடன் இணைந்து அக்கட்சிகளின் தலைவர்கள் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது...

# இராணுவத்திற்கு விசுவாசமாக இருங்கள்; தனி நபர்களுக்கு அல்ல என்கிறார் தளபதி

## முப்படை அதிகாரிகளுக்கு ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய உபதேசம்

கொழும்பு, டிசெ. 14

இராணுவத்தில் உள்ளவர்கள் தனிநபர்களுக்கு விசுவாசமாக இருக்கக்கூடாது. இராணுவக் கட்டமைப்பிற்கே விசுவாசமாக இருக்கவேண்டும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய தெரிவித்திருக்கிறார்.

பட்டலந்த இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெறும் முப்படைகளின் மூத்த அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

இராணுவம் என்ற கட்டமைப்பிற்கு விசுவாசமாக இருக்க மறுப்பது துரோகமாகக் கருதப்படும் என்றும் குறிப்பிட்டுள்ள அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுடனான மூன்று தசாப்த கால யுத்தத்தின்போது இராணுவம் தனது 842 அதிகாரிகளையும், 19 ஆயிரத்து 44 ஆண், பெண் சிப்பாய்களையும் இழந்துள்ளது.

இது தவிர, 124 அதிகாரிகளும், 3 ஆயிரத்து 362 சிப்பாய்களும் காணாமற் போயுள்ளனர். இது தவிர, யுத்தத்தின்போது 81 ஆயிரத்து 199 பேர் காயமடைந்துள்ளனர்.

302 பேர் வாழ்நாள் முழுவதும் பராமரிக்கவேண்டியளவிற்கு அங்கவீனர்களாகியுள்ளனர்.

எனினும், சில வட்டாரங்களில் கடந்த மூன்று வருட யுத்தத்தைப் பற்றியே பேசும் நிலை காணப்படுகின்றது.

இந்த யுத்தம் 30 வருடகாலமாக இடம்பெற்றமை மறுக்கப்படுவதுடன், துணிகரம் மிக்க ஆண், பெண் சிப்பாய்களின் தியாகமும் மறுதலிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று வருடத்திற்கு முன்பும் கொல்லப்பட்ட - காயமடைந்த படையினர் உள்ளனர்.

இராணுவத்தைப் பற்றி பல மேடைகளிலும் ஊடகங்களிலும் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இராணுவத் தளபதி என்ற வகையில் எனது அமைப்பு மற்றும் எனது படையினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்துத் திருத்தும் கடப்பாடு எனக்குள்ளது.

இந்த இராணுவம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக சில தனிநபர்கள் சில வேளைகளில் அர்த்தப்படுத்துகின்றனர்.

இவ்வாறான ஊகங்கள் இராணுவத்தைப் பாதிக்காது.

விடுதலைப் புலிகளை நாங்கள் தோற்கடித்துள்ள போதிலும், நாடு எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் இன்னமும் அகலவில்லை. நாங்கள் தகவல்களால் தாக்கப்படலாம்; வளங்களால் தாக்கப்படலாம்; மிக முக்கியமாக எமது விசுவாசம் மீது தாக்குதல் இடம்பெறலாம்.

எமக்குள்ளேயே உள்ள தமது நலன்களை மையமாகக் கொண்டு செயற்படும் தரப்புகளாலோ அல்லது வெளிநாட்டு சக்திகளாலோ இது இடம்பெறலாம். இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் இது நடைபெறலாம்.

உங்களுடைய விசுவாசம் இராணுவ அமைப்பிற்கானதாக இருக்கவேண்டும். தனிநபருக்கல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இராணுவம் போன்ற அமைப்பில் சேவையில் நீங்கள் பல விசுவாசத்தினைக் கொண்டிருக்க முடியாது. நாட்டினதும், இராணுவத்தினதும் நலனை அடிப்படையாக வைத்தே செயற்படவேண்டும்.

தனிநபருக்கும் அமைப்புக்கும் இடையில் யாருக்கு விசுவாசமாக இருப்பது என்ற கேள்விக்கே இடமில்லை.

தனிநபர்கள் வரலாம்; போகலாம்.

ஆனால், இராணுவம் என்ற கட்டமைப்பு யாருக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என்ற மோதலின்றி செயற்படவேண்டும்.

அப்படியில்லாவிட்டால், அது இராணுவ அமைப்பைச் சிதறடித்துவிடும். அதன் போரிடும் திறனை அது பாதிக்கும். எனவே, இவ்விடயம் குறித்து அவதானமாக இருக்க வேண்டும். விசுவாசமின்மை என்பது தேசத்துரோகமாகும் - எனத் தெரிவித்துள்ளார்.

# மகாஜனா புதிய கட்டடம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.14

'நிக்கொட்' திட்டத்தின்கீழ் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மூன்று அலகுகளைக் கொண்ட புதிய கட்டடத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் திறந்து வைத்தார். கல்லூரி அதிபர் திருமதி எஸ்.அனந்தசயனன் தலைமையில் இடம்பெற்ற பொதுகூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சியினால் கடந்த யுத்த காலங்களில் நிலவி வந்த துன்ப சூழல்கள் நீங்கி, தற்போது அமைதி வாழ்விற்கான முன் ஏற்பாடுகள் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் கல்விசார் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஜனாதிபதியின் வழிகாட்டலில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலம் மேலும்பல முன்னேற்றங்களுக்கு நாமே வழி சமைக்க முடியும் என்றுதெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின்செயலாளர் எஸ். இளங்கோவன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் இராசையா, யாழ்.மேலதிக கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், கல்வி அமைச்சின் ஆலோசகர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை, உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் நடராசா ஆகியோருடன் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஒ)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. சதானந்தன் செல்வானந்தன்
(B.A,Dip.in Ed.)

எமது வித்தியாலய அதிபர் திரு.சதானந்தன் செல்வானந்தன் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2.II இற்கு பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு அவருக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, அவர் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்.
(90996)



## கண்ணீர் அஞ்சலி



பூபாலசிங்கம் குலராஜசிங்கம்
(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்)

நீர்வேலி ப.நோ.கூ.சங்கத்தில் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அமரர் பூபாலசிங்கம் குலராஜசிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

வலி.கிழக்கு நீர்வேலி ப.நோ.கூ.சங்க பணியாள நண்பர்கள்.
(சி/563253)



## A/L 2010 கலை, வர்த்தக, கணித, உயிரியல் மாணவர்களுக்கான

GITவழிகாட்டல் கருத்தரங்கு

எதிர்வரும் 20.12.2009 அன்று நடைபெறவுள்ள பொதுத்தகவல் தொழில் நுட்பப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு.
Lectured By: N.அம்பி(B.Sc.Dip. in Ed.MEd)
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் I.C.T)
பின்வரும் நிறுவனங்களில் ஆரம்பமாகின்றன.

பொருளியற் கல்லூரி - இணுவில்
15-12-2009 செவ்வாய் 2P.M.

பொருளியற்கல்லூரி-யாழ்ப்பாணம்
16-12-2009 - புதன் 8.30 A.M.

BARATHY - சித்தன்கேணி
16-12-2009, புதன் 11.30 A.M.

*மூன்று நாள்கள் நடைபெறும்.
*கையேடுகள் வழங்கவுள்ளதால் உங்கள் அனுமதிகளை 15-12-2009 இற்கு முன் பெற்றுக் கொள்ளவும்.


## மரண அறிவித்தல்கள்

### கதிரிப்பிள்ளை இராமலிங்கம் (ஆவரங்கால்)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை இராமலிங்கம் நேற்று (13-12-2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - வேதாத்தை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சிவசம்பு - காமாட்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திலகேஸ்வரியின் அன்புக் கணவரும் கந்தசாமி, பாலசிங்கம், தனேஸ்வரன், சிவேஸ்வரி, அருனேந்திரன், யோகேஸ்வரி, உருத்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுசீலா, புஸ்பராணி, லோகாம்பிகை, ஜெயக்குமார், மணிமேகலை, சிறிஸ்கந்தராசா, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், மீராஜினி, ஜனன், சௌமியா, தர்மிகா, டினேஸ், லக்சனா, சுகிர்தா, ஜெனுசன், ஜெயபிரகாஷ், ரவிவர்மன், நிவேதிகா, யதுசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
ஆவரங்கால்,புத்தூர். (சி/563257)
தகவல் : மகன் (கந்தசாமி).

### அன்ரனி கந்தையா திரேசம்மா



பெரிய கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி கந்தையா திரேசம்மா நேற்று (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பிரான்சிஸ் - வெரோணிக்கா தம்பதியினரின் அன்பு மகளும் அன்ரனி கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகராசா மற்றும் ராணி (பிரான்ஸ்), வவா, அருள்செல்வரட்ணம் (இரசாயனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற ஜெயா, ரதி, சாள்ஸ் (கனடா), யோண்சன்(கொலண்ட்) ஆகியோரின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15/6, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (91447)
தகவல்: தாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கூத்தமைப்பாகும் கூட்டமைப்பு!

தமிழர் தேசம் மீது - தாயகம் மீது - இவ்வாண்டின் முதல் ஐந்து மாதங்களில் தொடுக்கப்பட்ட ஈவிரக்கமற்ற - குரூர - கொடூர - யுத்தத்தின்போது அரங்கேறிய மிக மோசமான சம்பவங்களின், அட்டூழியங்களின் பின்னால் புதைந்து கிடக்கும் இரகசியங்கள் மெல்ல மெல்ல வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

முறையற்ற போரை மூர்க்கமாக முன்னெடுத்த இராணுவ - அரசியல் தலைமைகளுக்கு இடையில், யுத்த வெற்றியின் பின்னர் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, இப்படிக் கூட்டுச் சேர்ந்து புரிந்த அராஜகங்களின் ஒளிவு, மறைவான பக்கங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

அந்த எதிர்பார்ப்பு சாத்தியமாகத் தொடங்கியிருக்கின்றது. இவ்வரிசையில் முதல் துப்பை எதிரணியின் பொதுவேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியிருக்கும் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகா போட்டுடைத்திருக்கின்றார்.

மே மாதத்தில் - யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில்தான் - வன்னியில் தமிழர்கள் மீது மிக மோசமானதும், மூர்க்கமானதுமான பேரழிவு யுத்தம் கொழும்பால் திணிக்கப்பட்டது. பல்லாயிரக் கணக்கில் தமிழரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டமை அப்போதுதான்.

ஆனால், யுத்தத்தின் இறுதி நாள்களில் இவ்விடயங்களில் தமக்கு எந்தத் தொடர்பாடலும் தரப்படவேயில்லை என்று அப்போது இராணுவத் தளபதியாக இருந்த இப்போதைய எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் பொன்சேகா கூறியிருக்கின்றார்.

அச்சமயத்தில்தான், சரணடையும் நோக்கோடு வெள்ளைக் கொடி தாங்கி வந்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் போன்றோர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

''இவ்வாறு சரணடைய வரும் புலிகளின் எந்தத் தலைவரையும் ஏற்கவேண்டாம். அத்தகையோரின் கதையை முடித்து விடுங்கள்!'' - என்ற உத்தரவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவினால் - தம்மை மீறி - நேரடியாகக் களமுனைத் தளபதிகளுக்கு வழங்கப்பட்டது என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகா இப்போது விடயத்தைப் போட்டுடைத்துக் கூறியிருக்கின்றார்.

இதில் உண்மையும் இருக்கலாம். பொய்யும் இருக்கலாம். படுகொலை நடவடிக்கைகளை அரசுத் தலைமையோடு சேர்ந்து முன்னெடுத்துவிட்டு இப்போது தாம் நல்ல பிள்ளை போலவும் ஜெனரல் பொன்சேகா பேசக்கூடும்.

ஜெனரல் பொன்சேகா இராணுவத் தளபதி போன்ற படைச் சேவைப் பொறுப்பில் இருந்து விலகும் வரை, இவ்விடயத்தைப் பகிரங்கப்படுத்தும் வாய்ப்பு அவருக்கு இருந்திருக்காது, இப்போதுதான் அந்த வாய்ப்பு வந்திருக்கின்றது, அதனால் அந்தச் சந்தர்ப்பத்தை அது கிடைத்ததும் பயன்படுத்தி உண்மைகளை வெளியிடுகின்றார் பொன்சேகா என்று அவர் தரப்பில் கூறப்படும் நியாயமும் கவனிக்கத்தக்கதே.

ஆகவே, இவ்விடயத்தில் நீதி முறையான விசாரணை நடந்தால்தான் உண்மை அம்பலத்துக்கு வரும் என்பது தெளிவானது. இத்தகைய குற்றச்சாட்டு, சம்பந்தப்பட்ட தரப்பால் பகிரங்கப் படுத்தப்பட்ட பிறகும் இது விடயத்தில் சமாளிப்புகள் சரிவரா. நீதி விசாரணை நிச்சயம் அவசியம்.

சரணடைய முற்பட்ட புலிகளின் தளபதிகள் மற்றும் உறுப்பினர்களின் கதையை முடித்து விடுமாறு உத்தரவிட்டு அதனைச் செயற்படுத்தியமை உண்மை என்றால், இவ்விடயம் சர்வதேச யுத்தக் குற்றமாகவும் விசாரிக்கப்படக்கூடியது.

இந்த விடயத்தில் இன்னொரு முக்கிய - பிரதான - அம்சமும் உண்டு.

தமது சரணடைவுத் திட்டம் குறித்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசனும் ஏனையோரும் அந்தக் கடைசி நாள்களில் அரசுத் தரப்போடு தொடர்பாடலை வைத்திருப்பதற்கு இடையில் முக்கியமான நபர்களாகச் செயற்பட்டவர்கள் என்று சிலரின் பெயர்கள் அடிபடுகின்றன. அவர்களில் முக்கியமானவர் மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசத்தக்க ஒரு தமிழ் எம்.பி. என்றும் கூறப்படுகின்றது. 'வெள்ளைக் கொடியை ஏந்தியபடி நம்பிப் போங்கள். எதுவும் நடக்காது' - என்று நடேசனுக்கும் ஏனையோருக்கும் அரசுத் தலைமை சார்பில் உறுதி பெற்றவர் போலத் தம்மைக்காட்டி, அவர்களுக்குக் கயிறு கொடுத்தவர் இந்தத் தமிழ் எம்.பியே என்று கூறப்படுகின்றது.

நடேசன், புலித்தேவன் ஆகியோரின் படுகொலையுடன் அச்சாதனைக்கான 'பெருமையோடு' நாட்டைவிட்டே காணாமற் போய், தலைமறைவான அந்த எம்.பி. மீண்டும் தேர்தல் சமயம் என்றதும் - ஆறு மாதம் கழித்து - இப்போது நாடு மீண்டு ஆங்காங்கே தலையைக் காட்டுகின்றார் என்று கேள்வி. யுத்த சமயத்தில் - தக்க வேளையில் - தாம் செய்த 'பேருதவி'க்குக் கைம்மாறாக இம்முறை சம்பந்தப்பட்ட தரப்பால் நியமனப் பதவி கிடைக்கும் என்ற நப்பாசையில், அதற்கான காரியங்களைத் தற்போது தாம் உள்ள தரப்பு என்று வெளியே காட்டிக்கொள்ளும் தமிழர் பக்கத்தில் ஆற்றி, அங்கு குழப்பத்தை ஒப்பேற்றும் திட்டத்துடன்தான் வந்திருக்கின்றாரோ என்னவோ.....?

எது, எப்படியென்றாலும் இந்த விவகாரத்தில் விசாரணை என்று வரும்போது இவர் எல்லாம் கூண்டில் ஏறவேண்டி வருவது தவிர்க்க முடியாததாக இருக்கும். அப்போது தன்னும் உண்மை சொல்வாரா, அமுக்கப்பட்ட விடயங்களை அம்பலப் படுத்தத் துணிவாரா, தனது இனத்துக்கு இழைக்கப்பட்ட இந்தப் பெரும் அநியாயத்தை உலகின் முன் கொண்டுவர மனச்சாட்சியுடன் செயற்படுவாரா என்பவையெல்லாம் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

இதில் இன்னொரு முக்கிய அம்சமும் உண்டு. இறுதிச் சமர் காலத்தில் முள்ளிவாய்க்காலிலும், புதுமாத்தளனிலும் எத்தனை தமிழர்களின் உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்பட, அவர்களின் சடலங்கள் அங்கு மண்ணோடு மண்ணாகிப் புதையுண்டன என்பது தமிழர்களுக்குத் தெரியும். தமிழர்களின் இரத்த உறவுகள் புதையுண்ட அந்த மண்ணிலேயே இன்று போர் வெற்றிச் சின்னத்தை எழுப்பித் திறந்து வைத்து மகிழ்ந்திருக்கின்றார் நாட்டின் தலைவர்.

அதற்காக அவருக்கு அடுத்த எட்டு ஆண்டுகள் நாட்டின் தலைமைப் பதவியைத் தொடர்ந்து உறுதிப்படுத்தத் துடியாய்த் துடிக்கின்றனர் நமது தமிழ் எம்.பிக்கள் சிலர். 'கொள்கைகள்', 'கோட்பாடுகள்', 'பகிஷ்கரிப்புகள்', பொது வேட்பாளர்', 'தன்மானம்' என்ற தத்துவங்களைப் பேசி எப்படியாயினும் ஆட்சித் தலைவரின் வெற்றியை உறுதிப்படுத்தத் தலையால் கிடங்கு கிண்டுகின்றார்கள் அவர்கள்.

பெற்ற கையூட்டுக்கு நன்றிக்கடன் செலுத்தவும், தங்களுக்கு எதிரான வழக்குகள் - சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவும் அதற்காகத் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவு செய்வதற்காகவும், அவர்களுக்கு உள்ள வழி இதுதான்! அதனால், வேறு என்னதான் செய்வார்கள்? பாவம்! 'கூட்டமைப்பை' ஒருமாதிரி 'கூத்தமைப்பு' ஆக்கி, தமிழர்களுக்கு இருக்கக்கூடிய எச்சசொச்ச வலிமையையும் மண்ணாக்கித் தங்களை - தங்கள் சுயநலத்தை - காப்பாற்றத் துடிக்கிறார்கள், பொறுத்த சமயத்தில் மக்களை விட்டு ஓடி ஒளிந்துவிட்டு இப்போது தேர்தல் என்றதும் தமிழ் மக்கள் மீது அதீத பாசம் கொள்ளும் இந்தப் பிரகிருதிகள்!

# ஊடகங்கள் மீதான தாக்குதல் ரகசியம்; படிப்படியாகக் கதை கட்டவிழ்கின்றது

## சம்பந்தமே இல்லை-ஜெனரல்பொன்சேகா தெரிந்தும் மௌனம் காத்தோம்-கோத்தபாய

சமீப காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க ஒபாமா நிர்வாகத்தின் உயர் அதிகாரியும் தெற்கு, மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சருமான றொபேர்ட் பிளேக், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வாரம் சந்தித்துப் பேசினார்.

> 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் நேற்று 13.12.2009 அன்று வெளியான அரசியல் விமரிசனத்திலிருந்து....

''நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறீர்களா'' என்று பிளேக் ஜனாதிபதியிடம் கேட்டார். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ''நம்பிக்கையுடன் இல்லாதிருந்தால் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கமாட்டேன்'' என்றார். ''மீண்டும் வந்து என்னைப் பாருங்கள், தேர்தலில் நான் வெற்றி பெற்றதன் பிறகு'' என்று அவர் மேலும் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய அமெரிக்க உதவி அமைச்சர் பல விடயங்கள் பற்றியும் விவாதித்தபோது, ''தற்போது அமுலில் இருக்கும் அவசரகால சட்டத்தை எப்பொழுது அகற்றப் போகிறீர்கள்'' என்றும் கேட்டுவைக்கத் தவறவில்லை. இது சரியான தருணமல்ல. பொருத்தமான தருணம் வரும்போது அது அகற்றப்படும் என்று பதிலளித்தார் மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கை அரசுடன் ஒரு நேசப் பான்மையான, அணுகுமுறையைக் கைக்கொள்ள வேண்டுமென அமெரிக்க செனட் சபையின் வெளியுறவுக் குழுவினர் ஒரு தீர்மானத்தின் மூலம் அறிவுறுத்தியிருந்த போதிலும், பிளேக் தமது வழியிலேயே செயற்பட்டதை அறியமுடிந்தது. ஒபாமா நிர்வாகத்துக்குரிய எல்லாவித அக்கறையான விடயங்கள் பற்றியும் அவர் கேள்விகளை எழுப்பியிருந்தார். பின்னர் ஊடகங்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். கடந்த வியாழனன்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த பிளேக், ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த அறிக்கையொன்றை வெளியிட்டார்.

### இலங்கை மக்களின் உரிமைகளின் பாதுகாப்பு

''இணக்கப்பாட்டுக்கான மிக முக்கிய அம்சம் என்னவென்றால் சகல இலங்கையரினதும் உரிமைகளைப் பாதுகாப்பதும் காபந்து செய்வதுமாகும். இது நடைமுறையில் செயற்பட வேண்டும். இதன் கருத்து என்னவென்றால் பத்திரிகையாளர்கள் நிகழ்வுகள் பற்றிய தமது கருத்துக்களையும் விவரணங்களையும் சுதந்திரமாக எழுத உரிமை இருக்க வேண்டும். அச்சமோ, திருப்பித் தாக்கப்படுதலோ இல்லாமல் அவர்கள் செயற்பட வேண்டும். நபர்கள் தமது கருத்து வேறுபாடுகளை பகிரங்கமாக வெளியிடக்கூடியதாக இருக்க வேண்டும். ஏனையவர்களின் உரிமைகளை மீறி செயற்பட்டவர்கள் தமது செயற்பாடுகளுக்குப் பொறுப்பேற்கும்படி செய்தாக வேண்டும்.'' இவ்வாறு பிளேக் தனது அறிக்கையில் கூறினார்.

அமெரிக்க அரசின் அதிகாரப் பூர்வமான கருத்தாகும் இது. தற்போது உள்ள நிலையில் இது அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

அதிபர் தேர்தலில் போட்டியிடும் ஜெனரல் பொன்சேகா தொடர்ந்தும் கொலைகள்; தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், இடைஞ்சல்கள் மற்றும் வெள்ளைவான் கடத்தல்கள் எவற்றுக்குமே தமக்கு சம்பந்தம் இல்லை என்று வலியுறுத்தி வருகின்றார்.

குறிப்பாக கடந்த நவம்பர் 27ஆம் திகதி தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தில் பேசியபோது சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கும் தமக்கும் தொடர்பே கிடையாது என்ற கூறினார்.

### பொன்சேகா - கோத்தபாய கருத்துமோதல்

ஆனால் இப்போது இக்கொலை தொடர்பான புலனாய்வைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர், ஜெனரல் பொன்சேகாவையும் விசாரணைக்குட்படுத்தவிருக்கிறார்கள் என்று தெரிய வந்துள்ளது.

பொன்சேகாவின் கருத்துக்களுக்குப் பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இப்போது பதில் கருத்து தெரிவித்துள்ளார். சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கியுள்ள நீண்டதோர் நேர்காணலில், ''அவர் 'ஓய்வுபெற்ற ஜெனரல் பொன்சேகா' இப்போது வேறு என்னவோ சொல்கின்றார். அவர் ஊடக சுதந்திரம் பற்றி காலம் கடந்து பேசுகிறார்'' என்று கூறியுள்ளார்.

ஊடகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டபோது ஏன் மௌனமாக இருந்தீர்கள் என்று கேட்டபோது, ''அதைத் தெரிந்துகொண்டு நாம் வாளாவிருக்கவில்லை. இப்பொழுதுவரை நாங்கள் அதைக் கூறாமல் இருந்துள்ளோம். இப்போது கூறுகிறோம் என்றால், அவர் (ஜெனரல் பொன்சேகா) ஊடக சுதந்திரம் பற்றிப் பேசுகிறார் என்பதால். இவைகளை எனது இணையத்தளத்தில் நாங்கள் வெளியிடவும் இல்லை'' என்றார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது: நாம் அதை இப்போது கூறுகிறோம். ஏனென்றால் ஜெனரல் பொன்சேகா இந்தக் காலகட்டத்தில் அதைக் கூறுகிறார். நான் ஊடகங்கள் கூறிய குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டேன். நான் தொடர்ந்து மௌனம் சாதித்தேன். ஆயுதப் படைகளின் தலைவர்களைப் பாதுகாக்க நான் விரும்பினேன். எமக்குப் பொதுநோக்கம் இருந்தமையால் தனிப்பட்ட விடயங்கள் பற்றி யோசிக்கவில்லை. லசந்த விக்கிரமதுங்கவின் கொலை மற்றும் பிரச்சினைகள் பற்றி நான் மௌனம் சாதித்தமை குற்றச்சாட்டை என்மீது சுமத்துவதற்கு வாய்ப்பாகிவிட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதுதான் எனது குறிக்கோளாக இருந்தது'' என்று.

கோத்தபாயவின் கருத்துக்கள் அவர் வேறு ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணல்களிலும் திரும்பக் கூறப்பட்டுள்ளது. இதன் நோக்கம் கொழும்பிலுள்ள ராஜதந்திர சமூகங்களுக்கு இது எட்ட வேண்டும் என்பதற்காகத்தான்; குறிப்பாக மேற்குநாட்டு ராஜதந்திர வட்டாரங்களுக்கு.

இங்குள்ள இப்போதைய நிலைமை என்னவென்றால், ஜெனரல் பொன்சேகா கூறுகிறார் தாம் ஊடகங்கள் மீதான வன்செயல்கள் எதிலும் ஈடுபடவில்லை என்பதாக. இன்னொருபக்கம், பாதுகாப்பு செயலாளர் தாம் எந்த வன்செயலிலும் இறங்கவில்லை என்று மறுக்கும் அதே வேளை அப்படியான சம்பவங்கள் நடந்தமையை அறிந்திருந்தார். இருந்தாலும் மௌனமாக இருக்க முடிவு செய்திருந்தார். எதற்காகவென்றால் ஆயுதப்படைகளின் தலைவர்களைக் காப்பாற்றுவதற்காக, புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற பொதுநோக்கத்தைச் சாதிப்பதற்காக. இது பாதுகாப்பு அமைச்சின் அதிகாரபூர்வ இணையத்தளம் பல பத்திரிகையாளர்களை வெளிப்படையாகப் பெயர் குறிப்பிட்டதுடன் அவர்களைத் ''துரோகிகள்'' என்றும் குற்றஞ்சாட்டிய அதே வேளையில்தான் இந்தவிதமாக மௌனம் காத்தமை இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

### அவரை ஏன் விசாரிக்கவில்லை

ஜெனரல் பொன்சேகாவின் பேச்சாளர்களில் ஒருவரான மங்கள சமரவீர (எம்.பி) பாதுகாப்பு செயலாளர் தகவல்களை வெளியிடாமல் இருந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டியிருப்பதுடன் இரகசியப் பொலிஸார் ஏன் வாக்குமூலம் ஒன்றை அவரிடமிருந்து பதியவில்லையென்று கேள்வியும் எழுப்பியுள்ளார்.

பத்திரிகையாளர்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அறிந்திருந்தார் என்பதை நேர்காணல்களில் தெரிவித்துள்ளார். ஆனால் மௌனமாகவும் இருந்துள்ளார் என்பதிலிருந்து குற்றவியல் சட்டத்தை அவர் மீறியிருக்கிறார் என்று சமரவீர தெரிவித்துள்ளார். யு.என்.எவ். செய்தி சேவைக்கு அளித்த பேட்டியில் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் ஒரு சிரேஷ்ட அரசாங்க சேவையாளர். அதனால் அவர் அரசியலில் ஈடுபடவும் முடியாது. நீண்ட நேர்காணல்களை அவருடைய சகோதரரின் சார்பில் ஊடகங்களுக்கு வழங்கவும் முடியாது. அரச ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்ற தேர்தல் ஆணையாளரின் தீர்ப்புக்கும் மாறாக இது இருக்கின்றது என்றார் மங்கள சமரவீர.

இதுபற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்; இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நாம் சரியான பதில்களை வழங்குவோம். டிசெம்பர் 18ஆம் திகதி எமது பிரசார வேலைகள் அநுராதபுரத்தில் ஆரம்பமானதன் பின்னர் இவை துண்டுப் பிரசுரங்களாகவும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாகவும் வெளியிடப்படும். கோத்தபாயவின் மீது குற்றங்களை சுமத்திவிட்டு அவர்களால் தப்பிவிட முடியாது என்று கூறினார்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே அதிகாரபூர்வமாக பிரசார வேலைகள் என்ற நிலைமை இருந்தபோதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தலைவர்களும் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களும் ஊடகங்களைக் கவர்வதற்கு ஏற்கனவே முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர். கடந்த செவ்வாய்க்கிழமை ஆயிரம் ஊடகப் பணியாளர்கள், பத்திரிகையாளர்கள், நூலகப் பணியாளர்கள், அச்சக அலுவலர்கள் போன்றோருக்கு அலரிமாளிகையில் இரவு உணவுக்கு அழைப்பு விடுத்திருந்தார் ஜனாதிபதி ராஜபக்ஷ. விருந்தின்போது ஒருசில மேசைகளுக்கு மட்டுமே ஜனாதிபதியால் போய் ஊடகவியலாளர்களுடன் உரையாட முடிந்தது. அதற்குள் ஏதோ சிக்கல் ஏற்பட்டு விட்டதாகத் தெரிந்தது. பியர் வழங்கப்பட்டது. சில பத்திரிகையாளர்கள் தாமே எழுந்து சென்று அருந்தத் தொடங்கியதால் ஜனாதிபதி வழமை போல் ஊடகவியலாளர்களுடன் அளவளாவ முடியவில்லை.

### மதுபானம் பற்றிய ஜெனரலின் கொள்கை

ஊடக நிகழ்வுகளும் அரசியல் விவாதங்களாக மாறத் தொடங்கியுள்ளன.

பொன்சேகா தாம் போட்டியிடுவது தொடர்பான அறிவித்தலை செய்வதற்கு நடத்திய முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டின்போது நவம்பர் 15ஆம் திகதி மது அருந்துவது பற்றிய அவரது கொள்கை என்னவென்று கேட்கப்பட்டது.

மது அருந்துவதைத் தாம் எதிர்க்கவில்லை என்றார். ஆனால் மது துஷ்பிரயோகத்தைத் தாம் அனுமதிக்கமாட்டார் என்றும் அப்படியானவர்கள் மீது அதிரடி நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டார் என்று தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தை ஒரு பிரசார ஆயுதமாகப் பாவிக்க ராஜபக்ஷவின் ஆதரவாளர்களான பௌத்த துறவிகள் சிலர் முயற்சி எடுத்தார்கள். மதுபானத்துக்கும் போதைவஸ்துக்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் போவதாக அரசாங்க தரப்பில் கூறப்பட்டிருக்கையில், மது அருந்துவது தொடர்பாக பொன்சேகா பேசி வருகிறார் என்று அவர்கள் விவாதம் கிளப்பினார்கள். ஆனால் பொதுவேட்பாளரின் பிரசாரகர்கள், ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஊடக விருந்துகளில் மது தாராளமாகப் பரிமாறப்படுவதைச் சுட்டிக்காட்டலானார்கள். கடந்த செவ்வாயன்று ஜனாதிபதியின் ஊடகவியலாளர்களுக்கான விருந்தின்போது பியர்தான் வழங்கப்பட்டது என்றாலும் முன்னர் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற விருந்தின்போது விஸ்கி, பிரண்டி மற்றும் மதுபானங்கள் பரிமாறப்பட்டதாக அவர்கள் சுட்டிக் காட்டலானார்கள்.

### பொன்சேகாவின் ஊடகக்கொள்கை

இனி ஊடகவியலாளர்களுக்கு மதுவும் உணவும் வழங்கி உறவாடும் சந்தர்ப்பம் ஒன்று ஜெனரல் பொன்சேகாவுக்கு ஏற்படப்போகின்றது. பெரும் எடுப்பில் ஒரு விருந்து வைபவத்தை பொன்சேகாவின் பிரசார அலுவலர்கள் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். இன்று தாஜ் சமுத்ராவில் நடைபெறவிருக்கும் நிகழ்வு மிக முக்கியமானதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. விருந்துபசாரம் ஒருபுறமிருக்க பொது வேட்பாளரான பொன்சேகா தமது ஊடகக் கொள்கையையும் அங்கு அறிவிப்பார் என்று தெரிகின்றது. மேலும் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவர் மேற்கொள்ளவிருக்கும் பணிகள் பற்றியும் அறிவிக்கவிருக்கிறார்.

சிறப்பான எதிர்காலத்துக்காகத் தம்மைத் தெரிவுசெய்யும்படி ராஜபக்ஷ தெரிவிக்கவிருக்கும் அதே வேளை பொன்சேகா என்னைவிட நாடு முக்கியம் என்ற கொள்கையைப் பிரகடனப்படுத்தி பிரசாரத்தில் ஈடுபடுவார் என்று தெரிகின்றது. (ப)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 15 29.12.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.ப.05.02 வரை |
| நட்சத்திரம்: | அனுஷம் |
| | பி.ப 03.30 வரை |
| சுபநேரம்: | 10.51-12.21 வரை |
| ராகுகாலம்: | 03.21-04.51 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை துரைச்சாமி

மயிலிட்டிக் கரையைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை துரைச்சாமி நேற்று (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமணியின் அன்புக் கணவரும், பொன்னையா, காலஞ்சென்ற தவமணி மற்றும் யோகபுஸ்பம், சண்முகநாதன், ஜெகநாதன், சிவஞானரெட்ணம், வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிள்ளையம்மா, சந்திரலிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம், விமலா, கலாராணி, மகேஸ்வரி, ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/563255)

*எரிஞ்சம்மன் கோயிலடி, பருத்தித்துறை.*
தகவல்: துரைச்சாமி ஜெகநாதன் (மகன்).

### பாலசிங்கம் பிரபாத் (வர்த்தகர்)



நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பிரபாத் நேற்று (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் (RMP) மற்றும் சகுந்தலாதேவி தம்பதியினரின் அன்பு மகனும் கமலகுமாரியின் அன்புக் கணவரும் பொன்னுச்சாமி - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் பிரேமிளா (கனடா), மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிரஞ்சயன் (பொறியியலாளர், கனடா), சீராளன் (கணக்காளர், கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(91451)

*'சிறிமகால்', நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.*
தகவல்: கமலகுமாரி (மனைவி)
பாலசிங்கம் சகுந்தலாதேவி (தாய்).

### திருமதி பொன்னுத்துரை நிர்மலாதேவி



கொழும்பைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, 'நித்தியவாசா', புலோலி கிழக்கை வதிவிடமாகவும் 30, பிரதிபிம்பாராம வீதியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை நிர்மலாதேவி 12.12.2009 சனிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா பொன்னுத்துரையின் (இளைப்பாறிய அஞ்சல் அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - நாகபூசணிஅம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சிவராஜ், ரவிராஜ், ரஜனி, செல்வரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்சினி, வான்மதி, ரகுராமன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதுராயினி, அம்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நிரஞ்சலாதேவி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற நித்தியலட்சுமிதேவி, சிவயோகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (14.12.2009) திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின்னர் பி.ப. 2 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0772428478, 0777689109.
தகவல்: சிவயோகராஜா.

## சாவகச்சேரி பள்ளிவாசலுக்கு 22 வருடங்களின் பின் புதிய சபை

யாழ்ப்பாணம்,டிசெ. 14

சாவகச்சேரி [illegible]மாப் பள்ளி வாசலுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை 22 வருடங்களின் பின்னர் நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 11 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தச் சபையின் இணைத் தலைவர்களாக முஹமட் அலி, அஸ்கர்றூமி, ஆகியோரும் மற்றும் 9 பேர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தவும், இடிந்து அழிவடைந்த நிலையிலுள்ள பள்ளி வாசல் கட்டடங்களை புனரமைப்பதுடன் சகோதர சமூகங்களுடனான உறவைக் கட்டியெழுப்புவதும் தமது தற்போதைய கடமை என்றும் இணைத்தலைவர்களில் ஒருவரான முஹமட் அலி தெரிவித்துள்ளார். (ஒ-16)

## மறவன்புலோ வாழ் மக்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,டிசெ. 14

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனப் பிரதிநிதிகள் மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குடும்பத்தலைவர்களை எதிர்வரும் வியாழக்கிழமை சந்திக்கவுள்ளதாக தென்மராட்சி தெற்கு மீள்குடியமர்வோர் சங்கச் செயலாளர் தி.தங்கவேலு அறிவித்துள்ளார்.

மேற்படி கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த அனைத்துக் குடும்பத்தலைவர்களும் தமது வீட்டுக்காணி உறுதியின் போட்டோ பிரதியுடனும், உலர் உணவு அட்டையின் போட்டோப் பிரதி, குடும்பத்தில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பெயர் விவரம் என்பவற்றுடன் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அன்றையதினம் அனைவரது வீடுகளும் பார்வையிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-16)

## கல்வி முது தத்துவமாணி புதிய கற்கைநெறி

யாழ்ப்பாணம்,டிசெ. 14

தேசிய கல்வி நிறுவனத்தினால் முதன் முதலாக கல்வி முதுதத்துவமாணி (M.Phil. in. Education) கற்கைநெறி (2009 / 2010) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறிக்கு நாடளாவிய ரீதியில் 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனந்தமயில் நித்திலவர்ணன் மற்றும் திருமதி ஐ.செல்வராணி (மகரகம), எஸ்.விஜயசிங்கம் (ஹட்டன்), அப்துல் கலாம் (மாத்தளை) ஆகியோரும் தென்பகுதிகளைச் சேர்ந்த மேலும் 16 பேரும் இந்தக் கற்கைநெறிக்குத் தெரிவாகியுள்ளனர். (ஒ-302)

## வைகுண்ட ஏகாதசி உற்சவம்

யாழ்ப்பாணம்,டிசெ. 14

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான மார்கழி வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி வைகுண்ட ஏகாதசி தினத்தன்று சங்காபிஷேகம், சுவர்க்க வாசல் தரிசனம், வசந்தமண்டப பூஜை, இரதோற்சவம், ஏகாதசி புராணபடனமும் பஜனையும், மறுநாள்29 ஆம் திகதி திருவடி நிலை புறப்படல், தீர்த் தோற்சவம் ஆகியனவும் இடம்பெறும். இதேவேளை, நாளை மறுதினம் புதன்கிழமை ஆஞ்சநேய ஜெயந்தி சங்காபிஷேக உற்சவமும் இடம்பெறும். (ஒ-14)


### வீடு விற்பனைக்கு

மந்திகை - வல்லிபுரக் கோவில், பிரதான வீதி அருகில் உபயகதிர்காமம், புலோலி தெற்கில் 8 பரப்பு 15 குளி காணியுடன் அமைந்த மிகப்பெரிய வீடு கிணறு, தண்ணீர்த்தாங்கி, மலசலகூடம், நவீனமல சலகூடம் என்பவற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.

தனியார் நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் என்பவற்றின் பயன்பாட்டிற்கு மிகவும் உகந்தது. தனிப்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். தரகர்கள் அவசியமில்லை. சகல தொடர்புகளுக்கும் 0213735292 கரவெட்டி.

### வீடு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் அல்லது நல்லூர்ப் பிரதேசத்தில் அரச உத்தியோகத்தில் உள்ள மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு தேவை. கொடுக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 0777049364

(90951)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள LG-AC MODEL No:LS-JO963CL-CAPACITY 900 LCD T.V. புதியது HISENES 19" (உத்தரவாதம் உள்ளது) ROBIN-EY-15-110V,1500W எஞ்சின், JAP. [illegible] லேடிஸ் சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 187/30 யூனியன் லேன், [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : [illegible]

(91446)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கிருஷ்ணசாமி (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் கனகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தம்பையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், கிருபானந்தா (ஆசிரியர்), கிருபானந்தி (ஆசிரியை), ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கராணி (ஆசிரியை), ஸ்ரீகரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, ஆரூரன் (யா/இந்து ஆரம்பப்பாடசாலை), பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இலங்கைநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்), அன்னபூரணி, ஞானசௌந்தரி, சரஸ்வதி, காலஞ்சென்ற பரமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*521/9, பருத்தித்துறை வீதி, நல்லூர்.* (91449)
தகவல்: கி.கிருபானந்தா (மகன்).

### கதிர்காமு வயிரமுத்து



மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு வயிரமுத்து 11.12.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கதிர்காமு - அன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் பாலாமணியின் அன்புக் கணவரும் கணேசராசா, விக்கினராசா, அருள்மொழி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் குமாரசாமி, சகுந்தலை ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாநிதி, அமரர் சிவானந்தம், கவிதா ஆகியோரின் மாமனாரும் கீர்த்திகா, வருண், கோபிகா, ஸ்ரீராம், நிருத்திகா, நிவேதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"கணேசபதி", மாதனை, பருத்தித்துறை.* (90998)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி அந்தோனிப்பிள்ளை இராசம்மா (வயாவிளான், வடமூலை)



வயாவிளான் உத்தரிய மாதா கோவில் பங்கைப் பிறப்பிடமாகவும் பத்தாவத்தை, இளவாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை இராசம்மா (10.12.2009) வியாழன் இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னப்பு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சவுரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சவுரிமுத்து அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஞானம்மா, காலஞ்சென்றவர்களான மரியரத்தினம், செபரட்ணம் (ஆசிரியர்) மற்றும் திரேசம்மா, நேசம்மா ஆகியோரின் சகோதரி[illegible], காலஞ்சென்ற ஆனந்தராசா (நில அளவையாளர்) மற்றும் [illegible]ரத்தினம்மா, காலஞ்சென்ற மார்க்கிறேட் மற்றும் மாசிலாமணி (ஆசிரியர், கனடா), பத்தி நாயகி, உத்தரியநாயகி (ஜேர்மனி), தருமராசா (சுவிஸ்), மகிமை நாயகி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான றோசா புஸ்பநாயகி, பிலிப்பத்மராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜிப்பனிற்றா (கனடா), காலஞ்சென்ற மிக்கேல்ராசா மற்றும் மரியறோஸ் (கனடா), பிரான்சிஸ் சேவியர் (ஜேர்மனி), ஜெயராசா (இந்தியா), மேரி (சுவிஸ்), நேசராசா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், புவியரசி (கனடா), அன்பரசி (கனடா), எழிலரசி (கனடா), தேவராசா (ஜேர்மனி),தேவராணி (ஜேர்மனி), யோகராசா (லண்டன்),ஜெயராணி (சுவிஸ்), வசந்தன் (லண்டன்), காலஞ்சென்ற யூட்ஜெனி மற்றும் யூட் டெனிஸ் (கனடா), யூட் ஜெனிஸ் (கனடா), றுசாந்தி (கனடா), பிரியந்தி (கனடா), மேரிஸ்ரெலா(இந்தியா), யுசிலா (இந்தியா), குயின்ரன் (கனடா), கெலனா (ஜேர்மனி), கெலஞ்சி (சுவிஸ்), கெலன்றன் (சுவிஸ்), அன்ரனி (சுவிஸ்), நேசாநந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், றிசிறூறேக்கா (கனடா), லக்ஜீகா (கனடா), ஆஸ்ரிடிலக்சிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சிங்கநாயகம், யோகரட்ணம், மகிமைநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.12.2009 புதன்கிழமை பி.ப 2 மணியளவில் பத்தாவத்தை இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இளவாலை தூய அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து பின் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(91441)

*பத்தாவத்தை, இளவாலை.*
*தொ.பேசி: 0778792555*
தகவல்: இரத்தினம்மா, பத்திநாயகி (மகள்மார்)
சி.மங்களேஸ்வரநாயகம் (பெறாமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் ஐந்து வருடங்களில் 16, 241 பேருக்கு புற்று நோய் சிகிச்சை

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்று நோயாளர் பிரிவில் இதுவரை 16ஆயிரத்து 241பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புற்றுநோயாளர் பிரிவானது ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 5 வருடத்தைப் பூர்த்திசெய்துள்ளது என்று யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள புற்றுநோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு கடந்த 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் புற்றுநோயாளர் பிரிவு ஆரம்பிக்கப் பட்ட காலம்முதல் இன்றுவரையும் 16ஆயிரத்து 241 புற்று நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை - தெல்லிப்பழையில் உள்ள புற்றுநோயாளர்கள் கதிர்வீச்சுப் பிரிவு கடந்த 2005 ஆம் ஆண்டு யூன்மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் இதுவரைக்கும் ஆயிரத்து 903 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1-9)

## மார்கழி மாத உதய பூசை

சுழிபுரம், டிசெ. 14

மார்கழி மாத உதயப்பூசை வழக்கம் பரை முத்துமாரிஅம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் மார்கழி மாதம் பூராகவும் நடைபெறும். தைமாதப் பிறப்பு தைப்பொங்கல் தினத்தன்று அதிகாலை அம்பாள் வீதியுலா வருதல் நடைபெறும். உதயப்பூசை நடைபெறும்வேளை ஆலய அயலிடங்களில் வாழ் பவர்கள் வந்து கலந்து வழிபாடு செய்து செல்வர். (1-28)

## யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் 1,325 பேர் தபால் மூல வாக்களிப்புக்கு இதுவரை விண்ணப்பம்

ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல் தொகுதியில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு ஆயிரத்து 325 பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளனர்.

இத்தகவலை யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

எதிர்வரும் 26ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் அரச அலுவலர்களிடமிருந்து கோரப்பட்டன.

இந்நிலையில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொகுதியில் இதுவரை ஆயிரத்து 325 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் 'மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலர் யாழ்.மாவட்ட செயலகம்' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

அதேவேளை தபால் மூலம் வாக்களிப்பு அடுத்தமாதம் 12 ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (1-9)

## 4 வருடங்களுக்கு முன் தத்துக் கொடுத்த பிள்ளையை பொலிசாரின் உதவியுடன் மீளப்பெற்ற தாய்

யாழ்ப்பாணம், டிசெ.14

தத்துக்கொடுத்த பிள்ளையை மீண்டும் பொலிசாரின் உதவியுடன் பெற்றோர்கள் மீளப் பெற்றுச் சென்றுள்ளார்கள்.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் பிறந்த பிள்ளையைப் பெற்றோர்கள் வேறு ஒருவருக்குச் சன்மானம் பெற்றுக் கொண்டு தத்துக் கொடுத்து விட்டு வன்னிக்குச் சென்றுள்ளார்கள்.

தற்போது மீண்டும் வன்னியில் இருந்து திரும்பி தமது பிள்ளையைத் தரும்படி தத்துக் கொடுத்தவர்களிடம் கேட்டு வாதிட்டார்கள்.

தத்தெடுத்தவர்கள் பிள்ளையைக் கொடுக்க மறுத்ததைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பிள்ளையின் பெற்றோர்கள் முறையிட்டனர்.

விசாரணையை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்ட பிள்ளையை பெற்றோர்களிடம் மீளவும் கையளித்தனர். (1-68)

## 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரை 1,137 காலங்கடந்த பிறப்புகள் பதிவு

### உதவிப்பதிவாளர் நாயகம் அலுவலகம் தகவல்

வலி.வடக்கு, டிசெ.14

யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தினால் தை மாதம் முதல் ஆடி மாதம் வரையான காலப்பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலங்கடந்த பிறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

கடந்த ஆறு மாத காலத்தில் யாழ். மாவட்ட செயலகத்தினால் மேற் கொள்ளப் பட்ட செயற்பாடுகளின் விவரங்கள் வருமாறு:

காலங்கடந்த பிறப்புத் தொடர்பாக 1137 பதிவுகள் செய்யப்பட்டு பிறப்புச் சான்றி தழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதே போன்று காலங்கடந்த இறப்புகள் 90 உம், ஏற்கனவே பதிவு செய்யப் பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் 1458 பேருக்கும் மாற்றங்கள் செய்யப்பட்டும் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட 'அற்றோனி' தத்துவப் பதிவுகள் 719, குழந்தைகள் தத்தெடுத்தல் சட்டத்தின் 16 பிள்ளைகளுக்கான மகவேற்புப் பதிவுகளும் செய்து வழங்கப் பட்டுள்ளன.

இவற்றுடன் நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம் பெற்ற நடமாடும் சேவைகளின்போது காலங்கடந்த பிறப்புகள் உட்பட 210 பேருக்கு பிறப்பு சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-86)

## பண்பாட்டு வாழ்வியலை தொலைத்ததாலேயே எயிட்ஸ் போன்ற நோய்களால் பாதிப்புற்று வருகின்றோம்

### எயிட்ஸ் தின விழாவில் துணைவேந்தர்

எமது பண்பாட்டு வாழ்வியல் முறைகள் தொலைந்து போனதில் நாம் சந்திக்கும் துயரங்கள்தான் 'எயிட்ஸ்' போன்ற கொடிய நோய்களாகும். மனிதனுக்குள்ள முதலாவது எதிரி 'எயிட்ஸ்'தான் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கூறினார்.

சர்வதேச 'எயிட்ஸ்' தினத்தை முன்னிட்டு பிராந்திய சுகாதார திணைக்களத்தினால் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச 'எயிட்ஸ்' தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட போதே துணைவேந்தர் சண்முகலிங்கன் இவ்வாறு தெரிவித்தார். மேலும் பேசும் போது கூறியவை வருமாறு-

நகர, பொருளாதார, உலகமயாமாக்கல்கள் என்ற நவீனகால மயக்கங்களால் எமது இயல்பான பண்பாடுகளை அத னோடு இணைந்த வாழ்க்கைகளில் இருந்து மாறுபட்டு விட்டோம், எமது பண்பாடு தொலைந்து போனதில் ஏற்பட்ட தென இதை நோக்குகின்றேன். 'எயிட்ஸ்' நோய்க்கு மட்டுமன்றி பண்பாட்டு முறைமைகளுக்குமான விழிப்புணர்வு கள்தான் இந்த நிகழ்வு. பெற்றோர்கள் தமது பிள்ளைகளிடத்தில் அக்கறை கொள்ளுதல் வேண்டும். கைத் தொலைபேசிகள் ஊடாக எதைப்பார்க்கிறார்கள்; அதில் என்ன இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

'ஏ9 பாதை இப்போது திறந்துள்ளது. அந்தப் பாதையூடாக இங்கு சமூகத்தைச் சீரழிக்கும் பொருள்கள் வருகின்றன. அவற்றைக் கண்காணிக்கக் கூடியதான பரிசோதனைகளை செய்யலாம். கல்வி வழியிலான விழிப்புணர்வுகளும் இதற்கு அவசியம். மானிடத்தை தொலைப்பதற்கான செயற்பாடுகளைத் தடுக்க அவசியமான வற்றைச் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். பண்பாடு நிறைந்த எமது வாழ்வியல் முறைதான் இதுபோன்ற துயரங்களில் இருந்து எமைக் காக்கும். மனித குலத்தின் விழிப்புணர்வை ஏற்படுத்த இது போன்ற நிகழ்வுகள் முக்கியமாகும் என்றார்.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பேசும்போது - மனித குலம் எதிர்நோக் கியுள்ள 'எயிட்ஸ்' ஆபத்தில் இருந்து அதைக் காப்பாற்ற சர்வதேசமும் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அக் கறை கொண்டுள்ளது. இலங்கையில் 1,169 பேர் வரை 'எயிட்ஸ்' பாதிப்புக்கு உள்ளானதாக கூறப்பட்டாலும் சுமார் 6ஆயிரம் பேர்வரை இந்த நோய்க்கு இலக்காகியிருக்கலாம் எனக் கருதப் படுகிறது. யாழ். மாவட்டத்தில் இது ஓரளவு கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. எனினும் குடா நாட்டில் 38 பேர் இந்த நோய்க்கு உள்ளானது தெரியவந்துள்ளது. இதில் 16பேர் வரை மரணமடைந்துள்ளனர். மக்களிடையே இதுகுறித்த விழிப்புணர்வு தேவை என்பதால் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இதுகுறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்று கூறினார். (04-111)

## உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 40 பயனாளிகளுக்கு புதிய இனப் பசுக்கள்

### மானிய விலையில் வழங்கப்பட்டன

வலி. வடக்கு, டிசெ.14

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 20 பயனாளிகளுக்கு நல்ல இனப் பால் பசுக்கள் கால்நடை வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்டுள்ளன.

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் இப் பசுக்கள் மத்திய மலை நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாத்தளை, அம்பிட்டியா, வத்தேகமப் பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்த பசுக்கள் மானியத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

உடுவில் பகுதியில் உள்ள பாற்பண்ணை கிராமத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள இந்தப் பசுமாடுகள் ஒரு வயதிற்கும் இரண்டு வயதிற்கும் உட்பட்டவை ஆகும்.

முதற் தடவையாக யாழ். குடாநாட்டுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புதிய இனப் பசுக்கள் பருத்தித்துறை, உடுவில் பிரதேசங்களில் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் இப்பசுமாடுகள் பயனாளிகளுக்கு அவற்றின் விலையில் இருந்து 23 ஆயிரத்தி 750 ரூபா மானியமாக வழங்கப் பட்டு, குறைந்த விலையிலேயே இவை கால் நடை அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. (04-86)






யாழ்.விவசாயத்திணைக்களமும், கால்நடை அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்திய யாழ்.மாவட்ட விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை 12.12.2009 யாழ்.விவசாய திணைக்களத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் மாகாண விவசாயப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம், நல்லூர் [illegible] விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார், யாழ்.கால்நடை அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் [illegible] (படங்கள்: லக்ஸ்மன்?)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி?.... இராசி பலன்கள்

## தருவது- ராசிகன் (13.12.2009 தொடக்கம் 19.12.2009 வரை)

### மேஷம்



பொது: காரிய வெற்றி உண்டு. செலவுகள் ஏற்படும். சில காரியங்களில் சிக்கல் ஏற்படும். கவனமாகச் செயல்படுவது நல்லது.

பெண்களுக்கு: பொருளாதாரம் படிப்படியாகச் சரியாகும். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். வருவாய் அதிகரிக்கும். பிரச்சினை கள் குறையும்.

வேலை பார்ப்போருக்கு: அலுவக சூழல் சாதகமாக இருக்கும். பதவி உயர்வு, இடமாற்றத்தை எதிர்பார்க்கலாம். சக ஊழியர்களுடன் பிரச்சினை வராது.

### ரிஷபம்



பொது: முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரசுத் தரப்பு செய்திகள் சாதகமாக இருக்கும். பொருளாதாரம் சீராகும்.

பெண்களுக்கு: மனதைக் குமைந்து கொண்டிருந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள். கணவர், குழந்தைகள் ஆதரவு காட்டுவார்கள். அலுவலகச் சூழல் சிறப்பாக இருக்கும்.

வேலை பார்ப்போருக்கு: வேலையில் பிரச்சினை குறையும், வேலைப்பளு அதிகரிக்கும். செல்வாக்கு அதிகரிக்கும்.

### மிதுனம்



பொது: பணவரவு திருப்திகரமாக இருக்கும். முக்கிய காரியங்கள் சிறப்பாக நடந்தேறும். இழுபறிக் காரியங்கள் விரைவில் முடிந்தேறும். கடன் தொல்லை அகலும். எதிரிகள் அகல்வர்.

பெண்களுக்கு: சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். குடும்பத்தில் சீரான போக்கு காணப்படும். பணப் புழக்கம் அதிகரிக்கும். குல தெய்வ வழிபாடு பலன் தரும்.

வேலை பார்ப்போருக்கு: வேலையில் பிரச்சினை குறையும், ஊதிய உயர்வு இருக்க வாய்ப்பில்லை, இடமாற்றம் ஏற்படலாம். முக்கிய காரியம் கைகூடி வரும்.

### கடகம்



பொது: முக்கிய வேலைகளில் கூடுதல் கவனம் தேவை, நிதானமாக ஈடுபடவும். செயல்களில் தாமதம் ஏற்படலாம். பணப் பிரச்சினையில் சிக்க நேரிடும்.

பெண்களுக்கு: குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வரும். பண நெருக்கடிக்கு வாய்ப்புண்டு. புதிய வேலைகளில் கவனமாக ஈடுபடவும்.

வேலை பார்ப்போருக்கு: பொறுப்பு அதிகரிக்கும். கூடுதல் முயற்சி எடுத்தால் நினைத்தது நடந்தேறும். கவனத்துடன் செயற்படுவது நல்லது.

### சிம்மம்



பொது: சம்பந்தம் இல்லாதவர்களால் பிரச்சினை வரக் கூடும். கவனத்துடன் செயல்படுவது நல்லது. முக்கிய பிரச்சினைகளில் கூடுதல் கவ னம் செலுத்தவும். பணவரவு சற்று சிரமமாகவே இருக்கும். பொருளாதாரம் சுமாரான முன்னேற்றத்தையே காட்டும்.

பெண்களுக்கு: எதிர்பார்த்த செய்தி வந்து சேருவதில் தாமதம் ஏற்படும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து சரியாகும். வருவாய் அதிகரிக்கும்.

வேலை பார்ப்போருக்கு: வேலையில் பிடிப்பு அதிகரிக்கும். வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் சமாளிப்பீர்கள். வேலை மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

### கன்னி



பொது: சிறப்பான முறையில் செயற்படுவீர்கள். பயணங்களில் கவனம் தேவை. நிதானமாக எதையும் அணுகவும். புதிய வாய்ப்புகள் தேடி வந்து உற்சாகம் தரும்.

பெண்களுக்கு: குடும்பத்தில் அமைதி நிலவும், கோயில் காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். பிரச்சினைகளை நிதானமாகக் கையாளவும்.

வேலை பார்ப்போருக்கு: உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சலுகைகளை எதிர்பார்க்கலாம். ஊதிய உயர்வுக்கு வாய்ப்புண்டு.

### துலாம்



பொது: முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதாரம் நிமிரும். மனக்குறை குறையும். கடவுள் நம்பிக்கை அதிகரிக்கும்.

பெண்களுக்கு: வீட்டில் அமைதி தவழும். அலுவலகச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். திருப்திகரமான முறையில் காரியங்கள் நடந்தேறும்.

வேலை பார்ப்போருக்கு: வேலையில் பிரச்சினை குறையும். பதவி உயர்வுக்கு வாய்ப்புள்ளது. எதிர்பார்த்த மாற்றத்தை அடையலாம்.

### விருச்சிகம்



பொது: முயற்சிகளுக்கு வேகம் கொடுக்கவும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். முக்கிய காரியங்களில் வெற்றி உண்டாகும். பொருளாதாரம் தடுமாற்றத்தைச் சந்திக்கும்.

பெண்களுக்கு: கணவரால் பிரச்சினை ஏற்படலாம். வேலையில் இயல்பு நிலை காணப்படும், சக ஊழியர்கள் ஒத்துழைப்புத் தருவார் கள். சுப காரியம் கூடி வரும். கையில் பணம் புரளும்.

வேலை பார்ப்போருக்கு: சக ஊழியர்களால் தொந்தரவு ஏற்படலாம். முக்கிய முடிவுகளில் கவனம் தேவை. பதவி உயர்வு, இடமாற்றம் இப்போதைக்கு இருக்காது.

### தனுசு



பொது: நட்பு வட்டாரம் நல்ல உதவியாக இருக்கும். உறவினர் வழியில் சிரமங்கள் குறையும். மன உளைச்சல் அகலும். பொருளாதாரம் சீர்படும். முக்கிய முடிவுகளில் நிதானம் காட்டவும்.

பெண்களுக்கு: குடும்பத்தில் புதிய வரவுக்கு வாய்ப்புகள் உள்ளது. உறவுகள் இனிக்கும், வரவுகள் மகிழ்ச்சி தரும். பொருளாதாரமும் ஏற்றம் பெறும். சுப காரிய செலவுகள் காத்திருக்கின்றன.

வேலை பார்ப்போருக்கு: வேலையில் ஆர்வம் கூடும். அலுவலக சூழல் சாதகமாக இருக்கும். புதிய முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டு வேலைக்குப்போகும் வாய்ப்புகள் கூடிவரும்.

### மகரம்



பொது: எதிர்பார்த்த காரியம் வெற்றிகரமாக முடியும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். அறிமுகம் இல்லாதவர்களால் பிரச்சினை ஏற்படலாம். நட்பு வட்டாரம் சாதகமாக இருக்கும்.

பெண்களுக்கு: பண வசதிபெருகும். பொருளாதர்ரம் மேம்படும். மனதில் நிம்மதி அதிகரிக்கும். நீண்ட நாள் இழுபறிக் காரியம் விரைவில் நிறைவேறும்.

வேலை பார்ப்போருக்கு: அலுவலக்தில் சாதகமான போக்குக் காணப்படும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மேலதிகாரிக ளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

### கும்பம்



பொது: தனவரவு அதிகரிக்கும். உறவினர் வழியில் தொல்லை வந்து சேரும். அலைச்சல் அதிகரிக்கும். தன் கையே தனக்குதவி என்பதைப் போல யாரையும் நம்பாமல் உங்களது வேலையை நீங்களே பாருங்கள்.

பெண்களுக்கு: குடும்பத்தில் அமைதி குலையும். வேலைப்பளு அதிகரிக்கும். சுப காரியப் பேச்சுக்கள் தாமதமாகலாம். நிதானமாக இருக்க வேண்டிய வாரம்.

வேலை பார்ப்போருக்கு: வேலையில் பொறுப்பு அதிகரிக்கும். பதவி உயர்வு, இடமாற்றம் இருக்கக் கூடும். புதிய முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கும்.

### மீனம்



பொது: செயல்களில் முன்னேற்றம் காணப்படும். செலவுகள் அதிகரிக்கும். வார இறுதியில் நற்செய்தி வந்து சேரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

பெண்களுக்கு: பொருள் வரவு உண்டு. மன அமைதி அதிகரிக்கும். சுபகாரியம் கூடி வரும். அலுவலக சூழல் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும்.

வேலை பார்ப்போருக்கு: வேலைப்பளு குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். முக்கிய முடிவுகளை எடுக்கலாம். புதிய வேலைக்கு மாறுவதில் கவனம் தேவை.


Join the Leader in Higher Education
Enroll Now in
Edexcel Courses
HND Civil Engineering
Quantity Surveying



COURSES COMMENCING IN
January 2010

IIS CITY CAMPUS
200, Sivan pannai Road,
Jaffna.
Tel: 0212228060
Fax: 0212226933
E-mail: iiscc @sltnet.lk
Web :www.iiscitycampus.com



Our Engineering and Quantity Surveying Students on training at a Colombo Worksite


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலும் முசுப்பாத்திகளும்....!

அரசியல்வாதிகளெல்லாம் வடிவேல் சொல்வது போல் திடீரென்று 'பாசக்காரப் பயலுகளாக' மாறத் தொடங்கிவிட்டார்கள்.

கம்பி வேலிகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த மக்கள் சுதந்திரமாக நடமாடலாம் என்கிறார்கள், பாஸ் இல்லாமல் போக்குவரத்துச் செய்யலாம் என்கிறார்கள், 180 நாள்கள் வேலை செய்தவர்களையெல்லாம் உத்தியோகத்தில் நிரந்தரமாக்குவோம் என்கிறார்கள்..... இப்படி நமது ஆளுந்தரப்பிலுள்ள அரசியல் வாதிகளின் பாசமழை ஒருபுறம்!



மறுபக்கம், எதிரணியினர் குறிப்பாக ஜெனரல் சரத்பொன்சேகா தரப்பினர் பாச மழையில் மக்களை போதும், போதும் எனும் வகையில் தெப்பமாக்கித் தொலைக்கிறார்கள். நலன்புரி முகாம்களிலுள்ள மக்களுக்குச் சுதந்திரம் இல்லையாம், மாகாணசபை முறைமைக்கு அப்பால் சென்று சிறுபான்மையினருக்கு தீர்வு வழங்கத் தயாராம், மக்களுக்கு இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லையாம், அதை அவர் பெற்றுத்தருவாராம்!

எல்லாம் இந்த ஜனாதிபதித் தேர்தல் படுத்தும் பாடு! தேர்தல்கள் மட்டும்தான் அரசியல்வாதிகளைப் பாசக்காரப் பயலுகளாக மாற்றுகின்றன, மக்களை எஜமானர்களாக்குகின்றன. அப்படிப் பார்த்தால், அடிக்கடி தேர்தல் வருவதுதான் நல்லது போல் தெரிகிறது என்று சற்று நக்கல் பாணியில் நம்மிடம் சொன்னார் நமது ஊடக நண்பர்.

இந்த திடீர் பாசமெல்லாம் மக்கள் மீதுதான். ஆனால், வேட்பாளர்களோ ஒருவர் மீது ஒருவர் இனியில்லையென்ற கடுப்பில் இருக்கின்றார்கள். இராணுவத்துக்குள் நடந்த ஊழல்களுக்கெல்லாம் சரத்பொன்சேகாவே பொறுப்பு என்கிறது மஹிந்த தரப்பு. இந்த நாட்டில் நிலவும் அராஜகம், அட்டூழியம் அனைத்தையும் புரிந்தது மஹிந்த ராஜபக்ஷதான் என்கிறார் சரத்பொன்சேகா! மஹிந்தவும், பொன்சேகாவும் பரஸ்பரம் இப்படிக் குற்றச்சாட்டுக்களைக் கூறிக் கோஷமிடும் போது, அவர்களுடன் இணைந்து நிற்கும் சிறுபான்மையின அரசியல் வாதிகள் - வில்லுப் பாட்டுக்கு ஆமா போடுகின்றமைபோல், பக்கப் பாட்டுப் பாடுகின்றமைதான் இப்போதைக்கு மிகக் கொடுமையாக இருக்கிறது.



உதாரணமாக, சரத்பொன்சேகா மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களில் ஒன்று, அவர் சிறுபான்மையினத்தவருக்கு எதிரானவர் என்பது! பொன்சேகா இராணுவத்தளபதியாக இருந்தபோது வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கியிருந்த பேட்டியொன்றை வைத்துக்கொண்டுதான் அவர் மீது இந்தக் குற்றச்சாட்டுச் சுமத்தப்படுகிறது.

கனடாவைத் தளமாகக் கொண்டியங்கும் 'நஷனல் போஸ்ற்' என்கிற ஊடகமொன்றுக்கு கடந்த வருடம் பொன்சேகா நேர்காணலொன்றை வழங்கியிருந்தார். அதன்போது, இலங்கை நாடு சிங்களவர்களுக்கே சொந்தமானது எனத் தாம் பலமாக நம்புகிறார் என்கிற அர்த்தப்பட அவர் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். அந்த ஊடகமும் அதை வெளியிட்டிருந்தது.

பக்கம் சாராமல் சொல்வதென்றால், இது மிக மோசமானதோர் இனவாதக் கருத்துத்தான் என்பதில் இரண்டுபட்ட கருத்தியல் இல்லை! ஆனால், தான் அப்படிக் கூறவில்லை என்றும் தனது கருத்து பிழையாக விளங்கப்பட்டுவிட்டது என்றும் இப்போது சரத்பொன்சேகா கூறுகிறார். பொன்சேகா கூறுகின்றமை உண்மையாக இருந்தாலும் கூட, இந்த மறுப்பை அவர் பேட்டி வெளியான போதே கூறியிருக்க வேண்டும். இப்போது கூறுகின்றதில் இலாபமில்லை!

அது ஒருபுறமிருக்க, ஆளுந்தரப்பிலுள்ள சிறுபான்மை அரசியல்வாதிகள், குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள், பொன்சேகாவின் அந்தக் கருத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, கோசம் போடும் போதுதான் நமக்குள் சில தார்மீகக் கோபங்களும், கேள்விகளும் எழுகின்றன.

ஜெனரல் சரத்பொன்சேகா அந்தக் கருத்தைக் கூறியபோது, அவர் இலங்கை நாட்டு இராணுவத்தின் தளபதி எனும் பதவியை வகித்துக் கொண்டுதான் இருந்தார். அதாவது மஹிந்த ராஜபக்ஷவின் முழுமையானதொரு கட்டுப்பாட்டின் கீழ்தான் ஜெனரல் சரத்பொன்சேகா அப்போது கடமையாற்றினார். அப்படியானதொரு நிலையில், தனது இராணுவத் தளபதி இனவாதக் கருத்தொன்றைக் கூறும்போது, மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது அவரின் அரசிலுள்ள முக்கியஸ்தர்களோ ஏன் அதை எதிர்க்கவேயில்லை? சிறுபான்மையினர் மத்தியில் அந்தக் கருத்து ஏற்படுத்திய மன உளைச்சலுக்காக ஏன் மன்னிப்புக் கோரவில்லை?

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இருந்து கொண்டே இயற்கை வளங்கள் மற்றும் சுற்றாடல்துறை அமைச்சரான சம்பிக்க ரணவக்க - தமிழ், முஸ்லிம் மக்களை கேவலப்படுத்தும் வகையில் கடந்த வருடம்; இனவாத வாந்தி எடுத்திருந்தமையை வாசகர்கள் எவரும் மறந்திருக்க மாட்டீர்கள். முஸ்லிம்கள் இந்த நாட்டுக்கு வியாபாரிகளாக வந்தவர்கள், இந்துக்களோ இந்தியாவிலிருந்து அகதிகளாக வந்தவர்கள். எனவே, இலங்கைத் தேசத்தில் இவர்களுக்கு எவ்விதமான உரிமைகளும் கிடையா. இந்த நாடு பௌத்த மகாஜனங்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியொன்றில் கூறியிருந்தார்.

சம்பிக்க இவ்வாறு கூறியபோது, ஆளுந்தரப்பிலிருந்த சிறுபான்மை அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய அரசியல்வாதிகளும் தங்கள் வாய்கள் உட்பட அனைத்தையும் மொத்தத்துக்குப் பொத்திக் கொண்டிருந்துவிட்டு, இப்போது மட்டும் சரத்பொன்சேகாவின் கருத்துக்கு எதிராகக் கோசமிடுகிறார்களே, இவர்களுக்கு வெட்கமில்லையா என்று கோபத்துடன் கேட்கிறார் இஸ்லாமிய மார்க்க அறிஞர் ஒருவர்!

**- மப்றூக் -**

முஸ்லிம்களை வியாபாரிகளாக வந்தவர்கள் என்றும், இந்துக்களை அகதிகளாக வந்தவர்கள் என்றும் சம்பிக்க கூறியபோது மஹிந்த ராஜபக்ஷ மௌனம் காத்தாரே தவிர, அதற்கு எதிராக ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அது ஏன்? மௌனம் என்பது சம்மதத்துக்கும் ஆதரவுக்கும் அறிகுறி என்று நமது முன்னோர்கள் சொல்லி வைத்ததுள்ளமையும் இங்கு கவனிக்கத் தக்கது!

இவை ஒருபுறமிருக்க, நாமெல்லாம் எதிர்பாத்த கால நேரங்களுக்கு முன்பாகவே கட்சித் தாவல்கள் ஆரம்பித்துவிட்டன.

ஐ.தே.க.வின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. என அழைக்கப்படுகின்ற எஸ்.பி. திஸாநாயக்க மீண்டும் சுதந்திரக் கட்சிக்குப் போய்விட்டார். இதில் சுவாரசியம் என்னவென்றால் எஸ்.பியின் வீட்டுக்கு ஜனாதிபதியே சென்று எஸ்.பி.யைக் கட்டித் தழுவி - கட்சி மாறுமாறு கேட்டிருக்கின்றார்.

மஹிந்த ஏன் இப்படி இறங்கிப் போனார்? எஸ்.பியின் வீட்டுக்கு சென்று ஆதரவு கேட்குமளவு மஹிந்த ராஜபக்ஷவின் நிலை ஆட்டங்கண்டு விட்டதா? ஏன்று கேட்கிறார்கள் ஒரு சாரார்!

ஆனால், அப்படியல்ல - இது மஹிந்தவின் ராஜதந்திரமாக்கும் என்கிறார்கள் வேறொரு சாரார்! அதாகப்பட்டது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார், சரத்பொன்சேகாவுக்கு ஆதரவாகப் பேசக்கூடிய அல்லது களமிறங்கக் கூடியதொரு நிலை இந்தத் தேர்தலில் காணப்படுகின்றது. அப்படி சந்திரிக்கா களமிறங்கினால், அது மஹிந்தவுக்கு ஏதோவொரு விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடும். எனவே, அந்த நிலையை எதிர்கொள்வதற்காகத்தான் ஐ.தே.க.வுக்குள் அதிருப்திகளோடு இருந்த எஸ்.பியை தனது அணிக்குள் கொண்டு வந்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ!

எஸ்.பியும் - சந்திரிக்கா அம்மையாரும் அரசியலில் கவுண்டமணியும் - செந்திலும் போலானவர்கள் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. (பாம்பும் - கீரியும் என்கிற உதாரணத்தை எத்தனை காலத்துக்குத்தான் சொல்வது. அதுதான் இப்படியொரு உதாரணம். செந்திலை கவுண்டமணி உதைக்காமல் எந்தப் படம் தான் வந்திருக்கிறது)

இதேவேளை, சிறுபான்மைக் கட்சிகளுக்குள்ளும் இந்தக் கட்சித் தாவல்கள் நிகழத் தொடங்கி விட்டன. உதாரணமாக, முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீட உறுப்பினரும் கல்முனை மாநகரசபையின் அங்கத்தவருமான சட்டத்தரணி அமீருல் அன்சார் மௌலானா அமைச்சர் அதாஉல்லாவின் தேசிய காங்கிரஸில் இணைந்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு கொடுக்க முன்வந்திருக்கிறார். இதுபோலவே, காத்தான்குடி நகரசபையின் முஸ்லிம் காங்கிரஸ் சார்பான தலைவர் மர்சூக் என்பவரும் நகரசபை உறுப்பினர்கள் சிலரும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குகிறார்கள் எனச் சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் தாங்கள் அப்படி அணி மாறவில்லை என அவர்கள் தரப்பில் தற்போது மறுக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.



இந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் மிக முக்கியமான பிரமுகரொருவர் நம்மைத் தொலைபேசியில் அழைத்து, சந்தேகமொன்றைக் கேட்கின்றமை போல், தகவலொன்றைக் கூறினார். அந்தத் தகவல் சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அதாவது, முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து, அவரின் அணிக்குச் சென்று விட்டாராம் என்பதுதான் அந்தத் தகவலின் கதைச் சுருக்கம்!

மு.கா. தவிசாளரை அதே நிமிடம் கைப்பேசியில் தொடர்பு கொண்டு விசயத்தைக் கேட்டோம். மெல்லிய சிரிப்புடன் பதிலளித்தார். ''யாரோ வேண்டாதவர்கள் கட்டிவிடும் கதைதான் இது! மு.கா.விலிருந்து நான் ஒதுங்கிப் போகும் நிலையொன்று வந்தால், எனது வீட்டுக்குத்தான் செல்வேனே தவிர, இப்படியெல்லாம் போக மாட்டேன்'' - என்றார்!

ஐ.தே.முன்னணியோடு, முஸ்லிம் காங்கிரஸ் அவசரப்பட்டு இணைவது குறித்து அக்கட்சியின் தவிசாளர் பசீர்சேகுதாவூத்மாறுபட்டசில கருத்துக்களை ஊடகங்களுக்குத்தெரிவித்திருந்தார். அதைவைத்துக்கொண்டு சிலர்போட்ட கோலம்தான், பசீர் கட்சி மாறிவிட்டார் என வந்த இந்தக் கதை என்பது பிறகு நமக்குப் புரிந்தது. ஆனாலும், கட்சி தாவும் காட்சிகள் நிறையவே இன்னும் அரங்கேறத் தான் போகின்றன.



அம்பாறை மாவட்டத்திலுள்ள ஓர் அமைச்சரும், இன்னொரு பிரதியமைச்சரும் கூட ஐ.தே.க. முன்னணியோடு இணையவுள்ளனர் என கதையொன்று உலவுகிறது. பேச்சுசையும் நடந்து விட்டதாம்! இதுபற்றி நண்பரொருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன், அப்படியென்றால், நல்ல முசுப் பாத்திதான் என்று ரஜனி படமொன்றைப் பார்க்கப் போகும் ஆவலுடன் கேட்டார்!

உண்மைதான். ஜனாதிபதித் தேர்தலில் இன்னும் நிறையவே முசுப்பாத்திகள் காத்திருக்கின்றன!

********************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த வங்கிக்கான விருதை தட்டிக் கொண்டது சம்பத்

வெற்றிப் பாரம்பரியங்கள் மிக்க அதன் வரலாற்றில் மேலும் ஒரு புகழுக்குரிய விருதை வென்றதன் மூலம் இலங்கையின் வங்கித்துறையில் மேலும் ஒரு மைல் கல்லினை சம்பத் வங்கி எட்டியுள்ளது. லண்டன் பினான்சியல் ரைம்ஸ் பத்திரிகையின் 'த பாங்கர்' (Tha Banker) சஞ்சிகை முன்னோடியாக விளங்கும் சம்பத் வங்கிக்கு 2009 ஆம் ஆண்டின் சிறந்த வங்கி என்னும் விருதை வழங்கி யுள்ளது. இந்த விருதினை உலகின் மிக நீண்ட கால நிலைத்த பெருமை கொண்ட சர்வதேச நிறுவனமொன்று இலங்கையின் மிகச் சிறந்த வங்கியென சம்பத் வங்கிக்கு பெயர் குறித்து வழங்கியமையானது வங்கியின் நிதிசார் உறுதி நிலையையும், அதுவெகு சிறப்புடன் ஆற்றி வரும் சேவையையும் அங்கீகரிப்பதாகும். வங்கித்துறையில் கால்பதித்து 22 வருடங்களைக் கழித்த நிலையில் அதன் குறுகிய வரலாற்றில் வங்கி பல சவால்களையும் மைல் கற்களையும் கடந்து வந்திருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்துறையில் வங்கி இலங்கையின் வங்கித்துறையில் பல புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டிருக்கிறது. சம்பத் வங்கி யூனி வங்கியியல் முறைமையை அறிமுகம் செய்து, வங்கியின் அனைத்துக் கிளைகளையும் இலத்திரனியல் முறையில் ஒரு வலையமைப்புக்குள் அகப்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய ஆரம்பித்த காலத்தில் இது ஒருபுதுமை வாய்ந்த சேவையெனக் கருதப்பட்டது. சம்பத் வங்கி ஆரம்பித்த தினத்தில் இருந்தே அது முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட சேவையை வழங்கி பலரைப் பின்பற்றவும் செய்திருக்கிறது. இலங்கையின் வங்கித்துறையில் முதன்முதலாக தன்னியக்க பணப்பரிமாற்றம் (ATM) மற்றும் கடனட்டைகளை அறிமுகம் செய்ததும் சம்பத் வங்கியே. துரிதமானதும், நன்கு திட்ட மிடப்பட்டதுமான விரிவாக்க முயற்சிகள் சம்பத் வங்கியின் பிரதான முன்னெடுப்புகளாகும். நாட்டின் முக்கியமான துறைகளிலெல்லாம் தொடர்ச்சியான விரிவாக்கங்களில் நிதித்துறை தீர்வுகளை வழங்கிவருகிறது. இலங்கையில் மொத்தம் 125 கிளைகளையும் 177 ஏ.ரி.எம் நிலையங்களையும் வங்கி கொண்டுள்ளது. பங்களாதேஷ் கம்பனியொன்றில் மிகப் பெரும் பங்குதாரராகவும் வங்கி திகழ்கின்றது. சம்பத் வங்கியின் இன்றைய நோக்கு நிலையானது தன்னை ஒரு தேசிய வங்கியாக நிலைநிறுத்தி நாட்டின் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும் தனது சேவையை கிடைக்கச் செய்வதாகும். மேலும், வங்கி தன்னை பண வைப்புகளுக்கான வங்கியாக நிலைநிறுத்தி பண வைப்புகளுக்கான உடன் தீர்வுகளை அனைத்து வயதினருக்கும் வழங்கும் முன்னெடுப்புகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

வங்கி தனது கிளைகளைப் புதிதாக திறக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையை திறந்துள்ளது. ஏற்கனவே, கிழக்கு 11 மாகாணத்தில் வங்கிக் கிளைகளை திறந்துள்ளது. ஏற்கனவே,திறக்கப்பட்டவையும், 2009 ஆம் ஆண்டு முடிவிற்குள் திறக்கப்படவுள்ளவையுமாக மொத்தம் 19 கிளைகளாகும். 2009 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட எந்தவொரு வங்கியினதும் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கையில் இதுபெரியதாகும். மேலும் சம்பத் வங்கி புதுமையான பல பண வைப்புத் திட்டங்களையும் நிதித்துறைத் தீர்வுகளையும் வியக்கத்தக்க வகையில் வாடிக்கையாளர் முன் வைத்திருக்கிறது. இதனால் வங்கியின் வர்த்தக நடவடிக்கைகள் கணிசமானளவு பெருகியுள்ளன. பண வைப்புகளில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பானது வங்கியின் திரவ நிலையைப் பேணுவதில் வங்கிக்குப் பெரிதும் உதவியிருக்கிறது. முக்கியமாக உலக நிதி நெருக்கடி காரணமாக சர்வதேச ரீதியான பண வருகை தளர்வடைந்திருந்த காலப்பகுதியில் பண வைப்புகள் வங்கிக்கு பெரும் உதவியாக இருந்தன. கடந்து சென்ற சில காலப்பகுதிகள் உலகின் பின்னடைவு காரணமாக உள்நாட்டிலும்

உலகிலும் ஏற்பட்ட பாதக நிலைகளினால் வர்த்தக முன்னேற்றங்களுக்கு சாதகமாக இருந்ததில்லை. இருந்த போதிலும், வங்கி 2008, 2009 செப்ரெம்பர் வரை முறையே 34%, 32% ஆன இலாபத்தை பெற்று வந்தது. சொத்துகள் மீதான வருவாய், உரிமை, முதல் மீதான வருவாய்ப் பங்குகளின் வளர்ச்சி என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டதனால் சம்பத்வங்கி வலுவான நிலையில் செயற்பட்டு வருகின்றது. 28 ஆண்டுகால யுத்த நிகழ்வுகளிலிருந்து மீண்டுள்ள இலங்கை புதிய பல அபிலாஷைகளுடன் செயற்பட ஆரம்பித்துள்ள நிலையில் சம்பத் வங்கி ஒரு உந்துசக்தியாக தொடர்ந்து செயற்பட்டுவருகிறது.

விளம்பர வரணம்


## இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநாடு அறிவித்தல்

1. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 13ஆவது மாநாடு 2010ஆம் ஆண்டு தை மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கட்சித் தலைமையகத்தில் நடைபெற வேண்டுமெனக் கட்சியின் மத்திய செயற் குழு தீர்மானித்துள்ளது.
2. கட்சியின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தங்கள் வதிவிட முகவரி யில் மாற்றம் இருக்குமாயின் தங்கள் உறுப்புரிமையை நிரூபிக்கக் கூடிய ஆவணத்துடன் அல்லது ஆதாரப்படுத்தக் கூடிய விளக்கத்துடன் சரியான முகவரியையும் இவ்வறிவித்தலிலிருந்து 07 நாள்களுக்கிடையில் பொதுச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக 30, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கோருகின்றேன்.
3. புதிதாகக் கட்சியில் சேர விரும்புகிறவர்களும் எழுத்து மூலம் விண்ணப்பிக்க முடியும்.
4. கட்சியின் அமைப்பு விதி 3 (இ)ன் படி உறுப்புரிமை தொடர்பில் மத்திய செயற்குழுவின் முடிவே இறுதித் தீர்மானமாகவிருக்கும்.

மாவை.சோ.சேனாதிராசா
பொதுச் செயலாளர்
14.12.2009 (91442)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
பொன்னம்பலம் இராசம்மா

மலர்வு 31.07.1930
உதிர்வு 14.11.2009

ஆண்டு விரோதியில் ஐப்பசித்திங்களில்
ஆன நாள் இருபத்தியொன்பதில் அபரபக்கம்
பூண்ட திரயோதசி திதியில் சித்திரை நட்சத்திரத்தில் - அவன்
பாதக் கமலங்களைச் சரண்புகுந்தார் அம்மா.

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் நெடுங்கேணியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னம்பலம் அவர்கள் தமிழகம், சென்னையில் 14.11.2009 அன்று காலமானார். இத்துயரச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 31ஆம் நாள் நினைவு அந்தியேட்டிக் கிரியைகள் சென்னை, இலங்கை, லண்டன் மற்றும் கனடா ஆகிய இடங்களில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் அன்போடு அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
பொன்.பத்மநாதன் - கனடா 001905 882 - 2136, லோகநாதன் - இலங்கை -94244901417
சறோஜா - இந்தியா -919940324303, வசந்தா - லண்டன் -442086426362
செல்வநாதன் - இலங்கை -0776590453. (91439)



## ST.PATRICK'S COLLEGE OLD BOYS' ASSOCIATION, JAFFNA

The joint X'mas Get - together of the members of St.Patrick's College - O.B.A. and Holy Family Convent - O.G.A. will take place at 10.00 am on 27.12.2009 Sunday at Mathews Hall S.P.C. Jaffna. Please enroll your participation with Social Secretary/ Gen.Secretary. T.P.Nos. 222 9844/ 222 5370

*61, St.Patrick's Road,*
*Jaffna.* (91429) Gen.Secretary



## ஒத்துமாறல்

மேல் மாகாணத்தில் நீர் கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் கணிதபாட ஆசிரியராக கடமை புரியும் ஒருவர் தென்மராட்சி/ யாழ்.கல்வி வலயத்தில் உள்ள ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார். தொடர்பு: 0776462081, 0779522080 (91414)



## கண்ணீர் அஞ்சலி

கடந்த 11.12.2009 அன்று கொழும்பில் காலமான
**கலாநிதி பத்மினி கிருஷ்ணராஜா**
(முன்னாள் உயிரியல் துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
அவர்களுக்கு விஞ்ஞான பீட விரிவுரையாளர்கள் சார்பில்
எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

விஞ்ஞானபீட ஆசிரியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(91432)



## கண்ணீர் அஞ்சலி

பிரபல இசை விற்பன்னரும், இளைப்பாறிய
உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய
**கலாபூஷணம் திலகநாயகம்போல்**
அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இசை ஆசிரியர்கழகம்,
யாழ்.வலயம்.
(91437)



## மரண அறிவித்தல்



**கலாநிதி பத்மினி கிருஷ்ணராஜா**

நக்கட்டியோடை, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கண்டியை வதிவிடமாகவும் வெள்ளவத்தையை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மினி கிருஷ்ணராஜா (முன்னாள் சிரேஷ்ட விலங்கியல் விரிவுரையாளர்) 11.12.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்றவர்களான இலங்கைநாயகம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் இராசையா கிருஷ்ணராஜாவின் (விலங்கியல் சிரேஷ்ட விரிவுரையாளர்) அன்பு மனைவியும் ஹம்சத்வனியின் பாசமிகு தாயும் பவானி, மைதிலி, ஹேமாங்கனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, யோகேஸ்வரி, பாலகிருஷ்ணன், பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.12.2009) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்று கல்கிசை இந்து மயானத்தில் மு.ப. 10 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: **கணவர், மகள்**
60, 4/1, Rudra Mawatha, Wellawatte.
Tel: 0112361494, 0718188[illegible]
(அ/563125)



## மரண அறிவித்தல்

**கதிரவேலு சச்சிதானந்தம்**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து தற்போது கொழும்பில் வசித்தவராகிய கதிரவேலு சச்சிதானந்தம் (12.12.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் அருளானந்தம், சொக்கநாதன், செல்வராணி, காலஞ்சென்றவர்களான சதாசிவம், சபாபதிப்பிள்ளை, விக்கினேஸ்வரன், கௌரி ஆகியோரின் சகோதரரும் சீவரத்தினம், பத்மநாதன், விக்கினராஜன், விமல்ராஜா, திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிரவேலு அருளானந்தம்,
திருமதி கா.அகிலேஸ்வரி (சகோதரர்கள்)

*பாடசாலை ஒழுங்கை,*
*மல்லாகம்.* (91438)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE
BBM Online Degree Programme

**Urgent Vacancies**

We require for immediate engagement an Institutional Moodle Administrator, tutor, Mentor and a Data entry operator on contract basis for one year in the Faculty of Managment Studies & Commerce, University of Jaffna for the BBM online Degree Programme.

**1.Post of Moodle Administrator**

**Requirements:**
The candidate should possess the following:
* Excellent written and verbal comunication skills in English.
* Experince with Online Learning and the Moodle LMS at the administrative level.
* A demonstrated ability to plan and manage complex projects.
* Knowledge in Windows/Unix Programming.
* Knowledge in btml codes, database programming scripting languages (php/asp) is desirable.

**Salary:** Rs.25,000 Fixed per month.
**Age:** Below 35 years.

**2.Post of Tutor-Mentor**

**Requirements:**
The camdidate should possess the follwing:
* Graduate from Management and Commerce.
* Good command in English and Tamil.
* Typing skill English ant Tamil.
* Experience with Computer application in MS Office, DMS, E-mail, Internet browsing.

**Salary:** Rs.15,000 Fixed per month.
**Age:** Below 35 years.

**3.Post of Data entry operator**

**Requirements:**
The camdidate should possess the follwing.
* Pass the G.C.E (A/L).
* Good commmand in English and Tamil.
* Typing skill in English and Tamil.
* Experience with Computer applications MS office.

The person who has Tamil Typing Skill will be preferred.

**Salary:** Rs.10,000 Fixed per month.
**Age:** Below 30 years.

Application together with names and addresses of two referees should be forwarded within7 days of this advertisement to:

* Please indicate the Position applied for on the top left-hand corner of the envelope.

The Registrar,
University of Jaffna.
Jaffna.

Registrar
12.12.2009. (C/563236)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர தமிழ்ப் பாடமும் உண்மையை விளங்க வேண்டியவர்களும்

உயர் பெறுபேறுகளைத் தம்வசம் வளைத்துக் கொள்வதில் பெருமையடைபவர்கள் ஆசிரியர்கள். அதேவேளை குறைவான சராசரியான பெறுபேறுகளின் காரணங்கள், மாணவரின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றின் மீதும் அவர்களது குடும்பம் சார்ந்தும் சுமத்தப்படுகிறது. அண்மையில் வெளிவந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகள் இவ்வாறான எண்ணத்தையே தோற்றுவிக்கின்றன. உயர்தரப் பெறுபேறுகளில் கலைப்பாடங்கள் சில பெறுபேற்று வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. குறிப்பாக தமிழ்ப்பாடம் மிகப்பெரும் பெறுபேற்று வீழ்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றது. 2009ஆம் ஆண்டிற்கான உயர்தரப் பெறுபேற்றில் 'தமிழ்ப்பாடத்தில்' 'ஏ' சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதோடு அப்பாடத்தில் சித்தியின்மை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதேவேளை தமிழை ஒரு பாடமாக எடுத்துக்கொண்ட மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதியிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றதென்பதை வெளிவந்த பெறுபேற்றினூடு அவதானிக்க முடிகின்றது.

உயர்தர கலைப்பாடத்தில் தமிழ்ப்பாடம் ஒரு கட்டாய பாடமாக அனைத்துப் பாடசாலைகளாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால், தமிழை ஒரு பாடமாகக் கற்ற மாணவர்கள் சிலர் சித்தியடையாத நிலையம் காணப்படுகின்றது. தமிழை ஒரு பாடமாக கற்க மறுக்கின்ற இன்றைய மாணவ சமுதாயத்தில் அதனைக் கற்ற மாணவர்கள் முழுமையாகச் சித்தியடையாமையும் வேதனைக்குரியதாகக் கொள்ளப்படுகின்றது.

பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கின்ற தேர்ச்சிமிக்க பிரபல்யமான ஆசிரியர்கள் காணப்படினும் மேற்குறிப்பிட்ட சித்தியடையாத தன்மையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அண்மையில் வெளிவந்த பெறுபேறுகளில் தமிழ்ப்பாடத்தில் சித்தியடையாமை ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல்விடினும் அதிவிசேட சித்தி, விசேட சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. இக்குறைநிலைக்குப் பாடசாலைக் கலைத்திட்டச் செயற்பாட்டையோ அல்லது அரசினது கல்வித் திட்டச் செயற்பாட்டையோ குறைகூற முடியாது.

உயர்தரப் பாடங்கள் அனைத்துக்குமான கணிப்பீட்டுத்திட்டம், செயற்றிட்டம் என்பன வலயக்கல்வி அதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படுகின்ற காரணத்தால் பாடத்திட்டம் முழுமைப்படுத்தப்பட வேண்டியது கட்டாயமான ஒன்றாகும். இந்நிலையில் பெறுபேறுகளில் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றதென்றால் அங்கு கற்பிக்கப்பட்ட பகுதிகள் மாணவர்களை முழுமையாகச் சென்றடையவில்லையென்றும் ஆசிரியரால் தெளிவாக அல்லது விரிவாக கற்பிக்கப்படவில்லையென்றும் முடிவுக்கு வரலாம்.

இவற்றையெல்லாம் தாண்டி மாணவர்கள் தமிழ்ப்பாடத்தைத் தனியார் கல்வி நிறுவனங்களிலும், தனியாகவும் குழுநிலையிலும் கற்று வந்துள்ளனர். இங்குதான் மாணவர்கள் திசை திருப்பப்படும் நிலை ஏற்படுகின்றதெனலாம். தனியார் கல்வி நிலையங்களில் தமிழ் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மாணவர்களைக் கவர்ந்து கற்பிக்கும் நிலைக்கு அப்பால் தம்முடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கும் தாம் சிறந்த ஆசிரியர் என்ற எண்ணக் கருவை வெளிப்படுத்துவதற்கும் மாணவர்களைத் தம்வசப்படுத்தும் நோக்கில் ஒரு சில கைங்கரியங்களை மேற்கொள்கின்றார்கள்.

1. என்னிடம் தொடர்ச்சியாக வந்து கற்பவர்கள் நிச்சயமாக 'ஏ' பெறு பேற்றினைப் பெற முடியும் என்ற வார்த்தை.

2. பரீட்சை நோக்கில், வினாவிடைத் தன்மையில் பாடக் குறிப்புக்களை வழங்குதல்.

3. பரீட்சை நெருங்கும் காலப்பகுதியில் எதிர்பார்க்கை வினாக்கள் என்ற மாயையை ஏற்படுத்துதல்.

மேலே குறிப்பிட்டவற்றில் உண்மைத் தன்மையும் இருக்கலாம். தமிழ்ப்பாடத்தைத் தொடர்ச்சியாக ஒரு ஆசிரியரிடம் கற்றுவந்தால் மாணவர்களிடத்திலே ஒரு மொழிநடை உருவாகலாம். எதிர்பார்க்கை வினாக்கள் திறமைசாலிகளுக்கும் அதிர்ஷ்டசாலிகளுக்கும் நன்மை பயக்கலாம். ஆனால், உயர்தரப் பெறுபேறான 'ஏ' சித்தி குறித்த அளவில் கிடைக்கப் பெறாமைக்கும் கிடைக்கப் பெறுகின்ற சாதாரண தர 'எஸ்' பெறுபேற்றால் 'இசற்' புள்ளியில் வீழ்ச்சி ஏற்படுகின்றமைக்கும் காரண கர்த்தாக்கள் யார்?

2009ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பெறுபேற்றில் தமிழ்ப்பாடத்தை ஒரு பாடமாக எடுத்துக்கொண்ட ஒரு சில மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்னவென்றால் பெறுபேறு வீழ்ச்சி அல்லது பல்கலைக்கழக நுழைவு கிடைக்காமை. மேற்குறிப்பிட்ட பரீட்சையின் முன்னர் தமிழ்ப்பாடப் பரீட்சைக்கான எதிர்பார்க்கை வினாக்கள் யாழ்.மாவட்டப் பத்திரிகைகளிலும், முன்னோடிப் பரீட்சைகளிலும் மாதிரிப் பரீட்சைகளிலும் கருத்தரங்குகளிலும் வழங்கப்பட்டும் வெளியிடப்பட்டும் வந்தன. இவ்வாறு எதிர்பார்க்கை வினாக்களை மாணவர்கள் முன்கூட்டியே பெற்றுக் கொண்டிருந்த போதும் மாணவர்கள் உயர்ந்த பெறுபேற்றினைப் பெறமுடியாமைக்கும் சித்தியின்மைக்குமான காரணங்கள் என்ன? அவை பற்றியும் இங்கு நோக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

1. மாணவர்களிடத்தே சிறந்த வாசிப்புப் பழக்கமின்மை.

2. கருத்தை அல்லது விடயத்தை எடுத்தாள்வதில் நேர்த்தியான மொழிநடையின்மை.

3. இலக்கண அமைவுகளோடு சொற்களையும் வாக்கியங்களையும் கையாளும் திறனற்ற நிலை.

4. இலக்கிய இரசனையோ, சுவையுணர்வோ மாணவர்களது எழுத்தாற்றலில் காணப்படுவதில்லை.

5. வெறுமனே மனனஞ் செய்யும் நிலை. கட்டுரையைக் கூட மனனஞ் செய்து ஆயத்தமாகும் தன்மை.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அதிகப்படியான மாணவரிடத்தே காணப்படினும் இத்தன்மைகளுக்கு உயர்தர வகுப்பில் தமிழ் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மாத்திரம் பொறுப்பானவர்கள் அல்லர்.

- மாசிதன் -

அண்மைக்காலத்தில் உயர்தர கலைப் பிரிவு வகுப்புக்களில் கற்கின்ற மாணவர்கள் தமிழை ஒரு பாடமாக எடுக்கின்ற நிலையும் குறைவடைந்து வருகின்றது. இவ்வாறான பெறுபேற்று வீழ்ச்சி எதிர்காலத்தில் தமிழ் மொழியும் இரசனையும் ஒரு சிலரிடத்திலேயே விளங்கும் என்பதோடு இதன் வீழ்ச்சியை பல்கலைக் கழகங்களிலே தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் மாணவர்களது எண்ணிக்கை குறைவடைந்து வருவதை வைத்தே தமிழ்ப்பாட பெறுபேற்று வீழ்ச்சியையும், தமிழ்ப்பாடத்தின் மீது மாணவர்கள் கொண்ட ஈடுபாட்டையும் அறிந்து கொள்ள முடியும்.

# அனந்தர் நாகலிங்கம் காலமானார்

**16.12.1926**

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட அனந்தர் நாகலிங்கம் பொருள் தேடும் நோக்கில் பர்மா சென்றார். பர்மாவில் தேக்குமர வியாபாரத்தின் மூலம் பெரும் பொருளீட்டிய நாகலிங்கத்தின் வீட்டுக்கதவை அதிர்ஷ்ட தேவதை தட்டியது. முதலாம் உலகப்போர் ஆரம்பமானது. பிரிட்டிஷ் இராணுவத்திற்குச் சீருடை தைத்து வழங்கும் வேலையை (Contract) நாகலிங்கம் ஏற்றுக்கொண்டார். பிரிட்டிஷ் இராணுவத்திற்குச் சீருடை தைத்துக் கொடுத்து பெரும்செல்வந்தரான நாகலிங்கம், முதலாம் உலகயுத்தம் முடிவடைந்ததும் இனி உழைத்ததுபோதும் என்ற எண்ணத்துடன் நாடுதிரும்பினார். நாடுதிரும்பிய நாகலிங்கம் மாவைக் கந்தனுக்குக் கோபுரம் கட்ட ஆசைப்பட்டார். தனது சொந்தப் பணத்திலேயே தனி ஒருவராக இலங்கையிலேயே உயரமான (எண்பத்தொரு அடி) கோபுரத்தைக் கல்லால் கட்டுவித்தார். அத்துடன் மாவைக்கந்தன் ஆலய ஆதிமூலத்தில் இருபத்திநான்கு மணி நேரமும் நெய்விளக்கு ஏற்றுவதற்கும் ஏற்பாடு செய்தார். நாடுதிரும்பிய நாகலிங்கம் பாய்மரக்கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கும் இந்தியாவுக்குமிடையே கடல் வாணிபத்திலும் ஈடுபட்டார். வீரசைவ மரபில் வந்த இவர் ரங்கூன் ஐயர் எனவும் அழைக்கப்பட்டார். ஆரம்பத்தில் வறுமையில் வாடிய இவரது வீட்டிற்கு வலம்புரிச்சங்கு ஊர்ந்து சென்றதாகவும் அதன் பின்னரே இவர் பணக்காரரானதாகவும் உறவினர்கள் கூறுகின்றனர். பல்வேறு தர்ம காரியங்களில் ஈடுபட்ட நாகலிங்கம் காங்கேசன்துறையில் தனது காணியிலேயே தன்னைச் சமாதி வைப்பதற்கான அனுமதியை அரசாங்கத்திடம் பெற்றுக்கொண்டார்.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே......!**

*16.12.1926* அன்று நாகலிங்கம் இறைவனடி சேர்ந்தார். சிமெந்தால் கோபுரம் கட்டுவதற்கே சிறுகச் சிறுகப்பணம் சேகரிக்கும் பணியில் ஆலய நிர்கவாகங்கள் இன்று ஈடுபட்டுள்ளன. தனி ஒருமனிதனாக கருங்கல்லினால் கோபுரம் கட்டுவித்த நாகலிங்கத்தின் பணி மெய்சிலிர்க்க வைக்கிறது.

தாண்டவன்

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புப்புக்கு குடாநாட்டில் 624 நிலையங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.14

ஜனாதிபதித் தேர்தலில் வக்களிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் தொகுதியில் 624 வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரகன் இத்தவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 624 வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த வாக்காளர்களின் விண்ணப்பங்கள் முழுமையாகக் கிடைக்கப் பெற்றவுடன் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள், விசேட வாக்களிப்பு நிலையங்கள் என்பன மேலதிகமாக அமைப்பது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் ''தெரிவித்தாட்சி அலுவலர்'' மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

(1-9)

# இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

இடம்பெயர்ந்த மக்கள் தற்போது வசிக்கும் பிரதேசத்திலிருந்து ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் தற்போது வசிக்கும் பிரதேசத்தில் வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலகத்திற்குச் சென்று அங்கு விண்ணப்பங்களைப் பெற்று இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி கடந்த 7ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (04-9)




வலிகாமம் கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'கோர்'' நிறுவனம் நடத்திய வலி வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் ''கோர்'' நிறுவனத் தலைவர் எஸ்.முருகையா, ஆலோசகர் எஸ்.செல்லையா, பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.இராசதுரை, கிளிநொச்சி கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) மு.நடராசா, முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.குகனேசன் ஆகியோர் முன்பள்ளி மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் [illegible] முன்பள்ளி இணைப்பாளர் தி.லில்லிராணிக்கு உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா பரிசில் வழங்குவதையும் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.குகனேசன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டக்காணி விற்பனைக்கு

இராச வீதியிலிருந்து (லைடன் பாம் ஒழுங்கையில்) 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள 18 பரப்புத் தோட்டக்காணி (தனிக்கிணறும், பங்குக் கிணறும் கொண்ட) விற்பனைக்கு உள்ளது.

*தொடர்பு: 0718609753, 0777420240* (91054)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1147 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 07 34 36 48

11-12-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 7,209,025/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 213,118 | 20/- | 4,262,360/- |
| 2 இலக்கங்கள் | 19,160 | 40/- | 766,400/- |
| 1 இல. + லக்கினம் | 19,491 | 60/- | 1,169,460/- |
| 2 இல. + லக்கினம் | 1,764 | 200/- | 352,800/- |
| 3 இலக்கங்கள் | 498 | 1000/- | 498,000/- |
| 3 இல. + லக்கினம் | 36 | 10,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,209,025/- | - |
| மொத்தம் | | | 8,009,020/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 254,075 | | 8,509,020/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,693,225/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் அசோகா பிரியங்கனி சில்வா குருவிட்ட

கைத்தொலைபேசி வெற்றியாளர்: எச்.சுனில் சந்திரசிரி புலத்சிங்கள

2009 டிசெம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 500797008-4-26 |
| மட்டக்களப்பு | 500788402-1-25 |
| ஹம்பாந்தோட்டை | 500786013-1-47 |
| களுத்துறை | 500782718-1-49 |
| கண்டி | 500792357-5-25 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை





டயிடஸ் ஸ்ரோஸ்
2439422


## காசிகாண்ட புராண பூர்த்தி விழா

சுழிபுரம், டிசெ.14

காசிகாண்ட புராணப் படிப்பு பூர்த்தி வழக்கம் பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிறைவு பெறவுள்ளது.

அன்று சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் நடைபெற்று புராணம் படித்தவர்கள் கௌரவிக்கப்பட்டு பாராட்டப்படவும் உள்ளனர். வருடம் தோறும் சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் கார்த்திகை மாதம் முழுவதும் காசி காண்டம் படிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

(1-28)


## காணி, வீடு விற்பனைக்கு

வலிகாமம் மேற்கு, சங்கானை யா/181 கிராம அலுவலர் பிரிவில், சங்கானை அரசினர் வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய பணிமனைக்கு 100 மீற்றர் தொலைவில் உள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. பழைய நாற்சார வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி (பயன்தரு மரங்களுடன்) சுற்றிவர நாற்புறமும் மதில் கட்டப்பட்டது.

அத்துடன் மாளியவத்தை சங்கானையில் வெறும் காணி 3 பரப்பு விஸ்தீரணம் உடையது. விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை.

தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்ளவும்.

*தொ.பே.: 0773618140, 0778546648* (சி-563055)


## மහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

11.12.2009

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2188

வெற்றி எழுத்து: B — வெற்றி எண்கள்: 6 8 5 9 6 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B | 6 | 8 | 5 | 9 | 6 | 1 | ரூபா. 18,837,535/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | | 6 | 8 | 5 | 9 | 6 | 1 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 8 | 5 | 9 | 6 | 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் 16 |
| 3 பரிசுகள் | | | | 5 | 9 | 6 | 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 149 |
| 4 பரிசுகள் | | | | | 9 | 6 | 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1473 |
| 5 பரிசுகள் | | | | | | 6 | 1 | ரூபா. 100/= | பரிசுகள் 14757 |
| 6 பரிசுகள் | | | | | | | 1 | ரூபா. 20/= | பரிசுகள் 146745 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 6 | 8 | 5 | 9 | 6 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 6 | 8 | 5 | 9 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 142 |
| 9 பரிசுகள் | | 6 | 8 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1471 |
| 10 பரிசுகள் | | 6 | 8 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 14712 |
| 11 பரிசுகள் | B | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 58773 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 32,141,295.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 10,000,000.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு

தேசிய லொத்தர் சபை

234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

# நெஞ்சுருக்கும் 31 ஆம் நாள் நினைவலைகள்




அன்னை மடியில் 22.11.1960 — ஆண்டவன் அடியில் 14.11.2009

## திருமதி தனலக்ஷ்மி சிவப்பிரகாசம்

திதி: திரயோதசி

பகல் இரவு பாராது பாசத்தால் அரவணைத்து
பல நன்மை காட்டி வைத்து
பார் சிறக்க வாழுகையில்
காலனவன் கவர்ந்தானோ!
கதைகள் பல உள்ளதம்மா...
கதைத்துப்பேசி மகிழ்ந்திருக்க
வீடுவந்து போங்களம்மா
வீடும் வெறிச்சோடிப் போய்க்கிடக்கு
திக்கெட்டு திசைகளிலும் தேடியே அலைகின்றோம்



ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்
உரும்பிராய்

உங்கள் பாசத்துக்காய் ஏங்கும்:
கணவர், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

லக்ஷ்மி பவனம்,
கரந்தன், நீர்வேலி.

(93131)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## அன்ரன் சகாயநாதன் பிரசாந்

**புனித பத்திரிசியார் கல்லூரி**

**உயிரியற் பிரிவு-2ஏபி மாவட்ட நிலை-03**

எனது ஆரம்பக் கல்விக்காக புனித பத்திரிசியார் கல்லூரியில் அனுமதியைப் பெற்றிருந்தும் கூட உள்நாட்டு இடப்பெயர்வு காரணமாக அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பின்பு தூய யோசவ்வாஸ் மகாவித்தியாலயத்தில் (விடத்தல் தீவு) கல்வி பயின்றேன். பின்பு தரம் 4 இல் மீண்டுமொரு முறை இடப்பெயர்வைச் சந்தித்து பேசாலை நலன்புரி நிலையத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். பின்னர் மீண்டும் எனது பாடசாலையுடன் இணைந்து கொண்டேன்.

எனது சிறுவயதிலிருந்தே இலக்கு வைத்திருந்த உயிரியல் பிரிவைத் தெரிவு செய்தேன். அப்பிரிவின் சுமைக் கேற்ப ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களின் படி முயற்சியுடனும் பயிற்சியுடனும் செயற்பட்டதால் இவ் வெற்றியைப் பெறமுடிந்தது.

சந்திப்பு :
*தமிழ்வண்ணன், விக்ரோறி, பிரேமசிலன்*

இப் பெறுபேற்றினைப்பெற உறுதுணையாய் இருந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் விசேடமாக எனது வகுப்பாசிரியை மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் எனக்கு அயராது ஊக்கமளித்த நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## செறின் சிரோமி அன்ரன்

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**கலைப் பிரிவு-3ஏ மாவட்ட நிலை-03**

நம்பிக்கைதான் வாழ்க்கை. இறை நம்பிக்கையும் தன்நம்பிக்கையும் இருந்தால் எந்த விடயமும் இலகுவானது. இதுவே 3ஏ பெறுபேற்றைப் பெற உதவியது. அத்துடன் இறை ஆசியும் பெற்றோர், ஆசிரியர்களின் ஊக்கமும் இதற்குக் காரணிகள் அந்த வகையில் இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறுவதுடன் பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

நான் எனது ஆரம்பக் கல்வியை நல்லூர்/சென் பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலையில் கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் 6 முதல் கற்றுவந்தேன். அந்த வகையில் பாடசாலைக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு சிறுவயது முதல் கல்வியில் மட்டுமன்றி வெளிவிடயங்களிலும் அதிக ஈடுபாடுகள் உண்டு. பல மன்றங்களில் பல்வேறு பதவிகளை வகித்தேன். போட்டிகள், நிகழ்வுகள், விளையாட்டுக்கள் யாவிலும் பங்கெடுப்பேன். மாணவ தலைவியாக, இசை வாத்தியக்குழுத் தலைவியாக தலைமைப் பதவிகளையும் வகித்து வந்தேன். இவ்வாறு பாடசாலை என்னைக் கல்வியில் மட்டுமன்றி அனைத்து விடயங்களிலும் முதன்மையான மாணவியாக உருவாக்கியுள்ளது. பாடசாலை வாழ்க்கை கல்வி மட்டுமல்ல என்பதை யாவரும் உணர வேண்டும். இந்த உணர்வே என்னை 3ஏ பெற உதவியது. கலைப்பிரிவில் பொருளியல், புவியியல், தமிழ் ஆகிய பாடங்களைத் தெரிந்து சம முக்கியம் கொடுத்துப் படித்தேன். அத்துடன் பாடசாலையுடன் வெளியே ஒவ்வொரு ஆசிரியர்களிடமே கற்றேன். வினாப் பத்திரங்களையே அதிகம் செய்வேன். குறிப்பெடுத்துப் படிப்பேன். 3ஏ எதிர்பார்த்தேன் கிடைத்தது. மாவட்ட நிலை 03 என்பது எதிர்பாராது கிடைத்த சந்தோஷம். இதற்கு மிக முக்கிய காரணம் என் அம்மா. அவரின் ஆசை, அவா, எதிர்பார்ப்பு. இதை நிறைவேற்றியது மட்டற்ற மகிழ்ச்சி. இன்னும் நிறைவேற்ற ஆசை. இறைவன் துணைநிற்பார். அத்துடன் ஆசிரியர்களின் அன்பும், விடாத பயிற்சி, என்மீது கொண்ட நம்பிக்கை இதுவே என் வெற்றிக்குப் பக்கபலமாக இருந்தது. எதிர்காலத்தில் ஒரு விரிவுரையாளராக வர விரும்புகிறேன்.

பயிற்சி, விடாமுயற்சியுடன் தன்னம்பிக்கை வையுங்கள். இதுவே வெற்றிக்கு வழி. அத்துடன் என்ன பாடமாக இருந்தாலும் பாடமாக்கிப் படிக்காதீர்கள். விளங்கிப் படியுங்கள். பல இடங்களுக்குச் செல்லாது ஒரிடத்தில் படியுங்கள். நாளை நீங்களும் சிறந்து விளங்குவீர்கள். வெற்றி நிச்சயம்.



## நித்தியா சுப்பிரமணியம்

**ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

**கலைப்பிரிவு-2ஏபி மாவட்ட நிலை-88**

நான் எனது ஆரம்பக் கல்வியை நவாலி விவேகானந்தா வித்தியாலயத்திலும் அளவெட்டி றோ.க.த.க.பாடசாலையிலும் பயின்று பின் தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் சிறப்புடன் பயின்றேன். அதிபர், ஆசிரியர்களின் நல்வழிப்படுத்தலுடன் பெற்றோரின் கண்டிப்பும் இத்தகைய பெறுபேறு எடுக்கக் காரணமாக இருந்தது. நான் உயர்தரப் படிப்பிலே தமிழ், நாடக அரங்கியல், அளவையியல் ஆகிய பாடங்களைப் பயின்றேன். கஷ்டத்திற்கு மத்தியிலும் சிறப்புடன் கற்ற என் அக்காவிற்கு பல்கலைக்கழகம் கிடைக்காமல் போன விரக்தியே என்னை இந்தளவிற்குக் கொண்டுவந்து விட்டுள்ளது.

3ஏ எடுப்பேன் என நம்பி இருந்த எனக்கு ஊக்கமும் அத்துடன் கண்டிப்பும் கூடிய படிப்பும் கற்பித்த வகுப்பாசிரியரும் தமிழ் ஆசிரியருமான மகாலிங்கசிவம் ஆசிரியருக்கு முதற்கண் நன்றியைத் தெரிவிக்கின்றேன். தமிழ்ப்பாடத்தில் ஏ எடுக்காமை மனக் கஷ்டமாக இருக்கிறது. எனது குடும்பம் நடுத்தர வர்க்கம். எனது அப்பா தோட்டம் செய்கிறார். நான் அவர்களின் நிலைமையைப் புரிந்துகொண்டு படித்து நல்ல பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். அத்துடன் சிறுவயதில் இருந்து படிப்பதற்கு உதவி செய்து ஆதரவு, அன்பு எல்லாம் தந்த என் அத்தை புவனேஸ்வரிக்கும் அப்பா, அம்மாவுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். அத்துடன் மாதா மீது வைத்திருந்த அளவற்ற நம்பிக்கையும் என்னை இந்தளவுக்குக் கொண்டு வந்துள்ளது. எனக்குப் பக்கபலமாக இருந்த எனது நண்பர்களுக்கும், எந்தச் சூழ்நிலையிலும் என்னைக் கைவிடாத அவர்களது தன்மைக்கும் அவர்களுக்கு என் நன்றிகள்.

[illegible] அதிபர், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஆசிரியர்கள் மற்றும் எனக்கு உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது இதயம் கனிந்த [illegible]



## நிஜந்தா பவானந்தன்

**விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்**

**வர்த்தகப் பிரிவு-2ஏபி மாவட்ட நிலை-26**

நான் தரம் 1-5 வரை மூளாய் அ.மி.த.க.பாடசாலையிலும் பின்னர் தரம் 6-13 வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கல்வி பயின்றேன். உயர்தர வகுப்பிற்காக வர்த்தகப் பிரிவை எனது சுயவிருப்பின் பேரில் தெரிவு செய்தேன். போட்டி நிறைந்த இப் பரீட்சையில் 2ஏபி என்ற பெறுபேற்றை பெற்றமையையிட்டு பெரும் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கற்கும் நேரம் சிறிதாயினும் வகுப்பறைக் கிரகித்தலுடன் அன்றைய பாடங்களை அன்றைய தினமே மீட்டுப் பார்த்தமையாலும் உயர்தரப் பரீட்சையை எதுவித பதற்றமுமின்றி இலகுவாக எதிர்கொள்ள முடிந்தது.

என்னுடைய கற்றல் நடவடிக்கைக்காக ஆக்கமும் ஊக்கமும் அளித்த எனது பெற்றோருக்கு முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் ஆரம்ப வகுப்பு முதல் இன்றுவரை எனக்குக் கல்வியறிவு புகட்டிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எனது நன்றிகள். உயர்தர வகுப்பில் விசேடமாக ஊக்குவிப்பு வழங்கிய கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும், சுப்றா கல்வி நிறுவனம் மற்றும் உயர் கணக்கியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள். இவற்றிற்கும் மேலாக இறைவனது ஆசி இருந்தமையால் தான் என்னால் இந்தப் பெறுபேற்றைப்பெற முடிந்தது என நான் கருதுகிறேன்.

எனவே இன்றைய மாணவர்கள் இறைபக்தியுடனும் குருவின் ஆசியுடனும் விடாமுயற்சியுடனும் கற்றால் உங்கள் இலக்குகளை வெற்றிகரமாக அடையலாம் என்பது எனது நம்பிக்கை. மேலும் எனது இலட்சியப் பாதையில் தொடர்ந்தும் விடாமுயற்சியுடன் பயணிப்பேன் எனத் திடமாக நம்புகின்றேன்.



## றதீஸ்வரன் துன்சியா

**வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு-3ஏ மாவட்ட நிலை-30**

கல்வியைக் கற்பதற்கு வறுமை ஒரு தடையல்ல என்பதற்கு என்னைவிட வேறு உதாரணம் இருக்க முடியாது. நான் வசித்து வருகின்ற ஏழாலை மயிலங்காடு பகுதி அதிகஷ்டப் பிரதேசமாகும். இங்குள்ள மக்களின் பொருளாதார நிலைமை மிகவும் தாழ்வானதாகவே இருக்கிறது. நான் என்னுடைய ஆரம்பக் கல்வியை ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் படித்து ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் 5ஏ,3பி,சி என்ற சிறப்பான பெறுபேற்றின் மூலம் உயர்கல்வியை வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் பயின்றேன்.

எங்களுடைய வறுமையைப் போக்க நான் சிறப்பாகப் படித்துச் சமூகத்தில் உயர் நிலைக்கு வரவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் என் மனதில் இருந்தது. என்னுடைய அக்கா ''உனக்கு 3ஏ தான் வரும்'' என்று அடிக்கடி சொல்வார். என்றாலும் எனக்கு அதில் நம்பிக்கை இல்லையென்றாலும் இப்போது அக்காவின் வார்த்தை பலித்துவிட்டது.

என் கண்கண்ட தெய்வங்களாகிய பெற்றோரும், எனக்கு அறிவமுது ஊட்டிய அதிபர், ஆசிரியர்களும் எனக்குத் தந்த ஒத்துழைப்பின் உதவி மூலம் 3ஏ யினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதைவிட நம்பிக்கை, விடாமுயற்சி, அதிகாலையில் எழுந்து மனதினை ஒரு நிலைப்படுத்திக் கற்றல், குறிப்பெடுத்துக் கற்றல், அவ்வாறு கற்றவற்றை மீட்டுப் பார்த்தல் என்பன போன்ற என்னுடைய கடின உழைப்பும் என்னுடைய வெற்றிக்கான காரணங்கள்தான்.

எதிர்காலத்தில் நானொரு சமூக சேவைகள் உத்தியோகத்தராக வரவேண்டும் என்பதே என்னுடைய நீண்ட நாளைய ஆசை. அதனூடாக என்னைப் போன்று கல்வியில் ஆர்வம் மிக்க கிராமப்புற வறிய மாணவர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்ய விரும்புகிறேன். இதுவே எனது பெற்றோரின் நீண்டநாள் ஆசையும்கூட.

இதுதவிர என்னுடைய வறுமை நிலையையும், கல்வி நிலையையும் கருத்திற்கொண்டு ஏதாவது தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் எனக்கொரு வேலை ஒன்றைத் தந்தால், பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும் காலப்பகுதிவரை நான் பயனுள்ளதாகக் கழிக்க முடியும். அத்தோடு எனது குடும்பத்தின் வறுமையை விரட்டவும், எனது சகோதரர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் அது உதவுமென நம்புகிறேன்.

இவ்வளவு காலமும் என்னைத் தாங்கி நின்ற பெற்றோரை நான் உழைத்துக் காப்பாற்ற வேண்டும் என்பதே எனது ஆசை.

எதிர்காலத்தின் இலட்சியத்தின் மூலம் அதை நிறைவேற்றுவேன் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு.



## பிரதாயினி சத்தியசீலன்

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**உயிரியற் பிரிவு-ஏ2பி மாவட்ட நிலை-34**

எனது ஆரம்பக் கல்வியை புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயத்தில் கற்றேன். பொஸ்கோவின் புனிதத் தன்மையும், அதிபர் ஆசிரியர்களின் அன்பான கற்பித்தலும் வழிகாட்டலும் எனது கல்விக்கு ஊன்றுகோலாக அமைந்தன.

புலமைமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடலையில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். இப்பாடசாலை அதிபர், உப அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்கள் எல்லோரினதும் வழிகாட்டலும் ஊக்குவிப்பும் எனது கல்வி எனும் பயிருக்கு உரம் ஊட்டின.

அத்துடன் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், பிரத்தியேக வகு[illegible] ஆசிரியர்கள் எல்லோரினதும் பங்களிப்பும் எனது இப்பெறுபேற்றிக்கு முக்கியமா[illegible]து. எனது பெற்றோர், அப்பம்மா, சகோதரர்கள், நண்பிகள் நான் கல்விபயில[illegible]க்குத் தளராத ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்தனர். எனது சகோதரி அல்லு[illegible] பகலும் அயராது கற்றலுக்கான செயற்பாடுகளை நெறிப்படுத்தி நம்பிக்கை ஊட்டினார். அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்கால மாணவர்களுக்கு நான் கூற விரும்புவது தினமும் மூன்று பாடங்களின் குறிப்புக்களையும் அது தொடர்பான கடந்தகாலப் பரீட்சை வினாக்கள், பயிற்சி வினாக்கள் என்பனவற்றையும் தெளிவாக விளங்கித் திரும்ப திரும்ப கற்று அதனை மனக்கண் முன் கொண்டுவருதல் வேண்டும். சுயகற்றலும் விடாமுயற்சியும் அவர்களை வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்லும்.

தளராத இறைபக்தியும், இறையாசியுமே எமது வாழ்க் கையின் நற்பெறுபேறுகளுக்கு உறுதுணையாக இருக்கும்.

என்னை வைத்தியத்துறையில் தெரிவு செய்ய வைத்த மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னைக்கும் என் எண்ணக் கருக்களை தெரிவிக்க வாய்ப்பளித்த 'உதயன்' பத்திரிகை நிறுவனத்திற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காண்டு நினைவு தீபம்

மலர்வு 02 . 04 . 1941



உதிர்வு 29 . 11 . 2005

### அமரர் வினாசித்தம்பி உதயச்சந்திரன்

திதி: திரயோதசி

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமான
எங்கள் அருமை அப்பாவே!
பாரினில் ஊரார் போற்ற வாழ்ந்த உத்தமனே!
பாசமாய் நேசமுடன் எமை வளர்த்த
உதயவிளக்கு உதிர்ந்து நான்காண்டுகள் நகர்ந்தாலும்
எம் உயிரைவிட்டு அணையாது எமது பாசக்
கூண்டில் இருப்பீர் அப்பா.

ஓம் சாந்தி!

*74, பத்திரகாளி கோயிலடி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (91420)

தகவல்:
குடும்பத்தினர்.

## நவாலி பிரதான வீதி போக்குவரத்துக்குத் திறப்பு

நவாலி, டிசெ.14

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தடியால் செல்லும் நவாலி பிரதான வீதி போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

இவ்வீதியின் பாரிய மதகு புனரமைப்புச் செய்வதற்காக கடந்த 3 மாத காலமாக வீதி மூடப்பட்டு, அருகிலுள்ள காணியினால் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வந்தது..

மீண்டும் போக்குவரத்துக்கு இவ்வீதி திறந்துவிடப்பட்டுள்ளது. ஆனால் மதகுடன் இணைந்த இரு பக்க வீதியும் கல் போட்டு நிரவப்படாததினால் கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் கிடங்குகளுக்குள் விழுந்தெழும்பிச் செல்கின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மக்கள் கேட்டுள்ளனர். (100)

## கண்ணீர் அஞ்சலி



### கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

எங்களைப் பாலூட்டிச் சீராட்டிக் கல்வியிலே
கண்ணாக வாழவைத்த எங்கள் குடும்பக்குல
விளக்கே! தங்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் நாம் தங்கள் குடும்பதினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு, உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

39,கொண்டலடி ஒழுங்கை,
நல்லூர். (91423)

நடராசா செல்லம்மா (அக்கா),
பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.06.1952

மறைவு
06.12.2007

(14.12.2009)

### கதிரவேலு சிவசுந்தரலிங்கம்

எப் பிறப்பில் காண்போம் இனி பாசத்தின் அரவணைப்பில் எம்மை
அன்போடு வளர்த்தீர்கள் உங்கள் அயராத உழைப்பால்
பாரினில் உயர்ந்து நின்றீர்கள் உதவி என்று வருவோர்க்கு
உறுதுணையுடன் உதவிட உங்களைப் போல் யார் இங்கே?
உங்களை இழந்து தவிக்கும் எங்களை வந்து பார் அப்பா!
எங்கள் நெஞ்சம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

அன்பின் மகள்.

*த.முகவரி:* கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.
*நி.முகவரி:* அரியாலை, யாழ்ப்பாணம்.
(91403)

உங்கள் துயரால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சின்னத்தம்பி நடராஜா

(ஓய்வுபெற்ற காசாளர், இலங்கைவங்கி)

தோற்றம்: 31.03.1937
திதி:திரயோதசி [14.12.2009]
மறைவு: 06.12.2007

செய்யும் தொழிலே தெய்வமென மெய்யின் மொழியில்
வாழ்ந்துலகில்அன்பைப் பொழிந்த தந்தைக்கு
அழியா நினை வால் அர்ப்பணங்கள்
வாழ்ந்த வாழ்வை வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி
வையத்தில் வாழ்வாங்கு வாழ வைத்த
எம் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்திபெற
இன்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் .

நிரந்தர முகவரி:
பொற்கலந்தம்பை,
கொல்லங்கலட்டி.

தற்போதைய முகவரி:
வட்டாதந்தனை,
கண்டி.

என்றும் அழியா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 19ஆவது சிரார்த்த தினமும் 90ஆவது (கடந்த) பிறந்ததினமும்



மலர்வு
28.09.1919
உதிர்வு
14.12.1990

### அமரர் ஆறுமுகம் சபாபதிப்பிள்ளை நாகராசா

அன்புத் தெய்வத்தின் சிரார்த்த
தினமான இன்று அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

"இராச கிரி",
பொற்பதி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

## நன்றி கூறுகின்றோம்



மலர்வு
06.12.1931
உதிர்வு
01.12.2009

### திருமதி தாட்சாயணி நாகராசா

அன்புத் தெய்வத்தின் இறுதிக்
கிரியைகளில் கலந்து கொண்டு
எமக்கு ஆறுதல் தெரிவித்த
அனைவருக்கும் எமது
இதயபூர்வமான நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
[illegible]

(93082)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவி கரோலின் வரோனிகா
அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் பூபாலசிங்கம் குலராஜசிங்கம்

அவர்களின் திடீர் மறைவு அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் வருட மாணவர்கள்,
விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.
(91421)


DPJH DPJH DPJH
LABELS SOLUTIONS TIMETRACK

இலங்கையில் Barcode (பார்கோட்) துறையில் முன்னணி வகிக்கும் DPJH நிறுவனம் உங்கள் வியாபார நடவடிக்கைகளிற்கான நவீன தொழில்நுட்ப செயற்பாட்டினை வழங்க முன்வந்துள்ளதென்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறது எமது சேவைகள் பின்வருமாறு :

- உங்கள் தயாரிப்புக்களிற்கான லேபல் (Leble) மற்றும் ஸ்ரிக்கர்ஸ் (Sticker)
- அலுவலக மற்றும் வேலைத்தளங்களிற்கான நேரக் கண்காணிப்பு உபகரணம் (Time & Attendance)
- உங்கள் வியாபாரத்தை நவீன மயப்படுத்தி இலகுவாக்க பார் கோட் பிரிண்டர் (Printer), ஸ்கேனர் (Scanner), வியாபார மையத் தொகுதி (POS-Point of Sales) மற்றும் வியாபார மென்பொருள் (Business Software).

இவையனைத்தையும் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவும்.



DPJ Holdings
No 30/2, Jasmin Park
Narahenpita Road, Nawala.
Tel : 0115227227/ 0715360959



GoodWin·ADVT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மையை விளைவிக்கக் கூடிய சேதன விவசாய முறையை அபிவிருத்தி செய்வது அவசியம்

சமூக அக்கறையுள்ள அனைவரினாலும் இன்று பேசப்படுகின்ற முக்கிய விடயமாக ''சேதன விவசாயம்'' புத்துயிர் பெற்றுள்ளது. ஏனெனில் எமது தேசத்தில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதற்கும், பல புதிய நோய்கள் உருவாகுவதற்கும், சுற்றுச்சூழல் பாதிப்படைவதற்கும் நீண்டகால நோக்கில் மண்ணின் பௌதீக, வேதியல், உயிரியல் நிலமைகள் மாற்றமடைந்து விவசாயத்தின் நிலைத்த நீடித்த தன்மையற்றுப் போவதற்கும் விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்ற செயற்கை உரங்கள், இரசாயனங்கள் என்பவற்றின் மறுவிளைவுதான் என்பதனை எமது மக்கள்



அனுபவரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் தெரிந்துகொண்டமையினால் இதில் இருந்து எமது எதிர்காலச் சந்ததியினைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமானால் சேதன விவசாயமுறை முன்னெடுக்கப்படவேண்டியது இன்றியமையாதது என்ற விழிப்புணர்ச்சியே. சேதனவிவசாயம் என்பது எமது சமூகத்திற்குப் புதிய ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பல்ல. எமது மூதாதையர் விவசாயத்தில் பாரம்பரியமாகப் பின்பற்றி வந்த முறைகளைக் கொண்டதுதான். அதில் இருந்து விடுபட்டு விவசாய விஞ்ஞான வளர்ச்சியினால் அதியுயர் விளைச்சலைக் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட செயற்கை உரங்கள், இரசாயனங்கள் என்பவற்றின் பாவனையை உள்ளடக்கிய தற்கால விவசாய முறைக்கு எம்மை மாற்றிக்கொண்டோம். இப்படியான ஒரு நிலையில் திடீரென எல்லாவற்றையும் புறம் தள்ளிவிட்டுப் புதிதாக ஏற்பட்டுள்ள உத்வேகத்தில் முறையாக நீண்டகால நோக்கில் திட்டமிடாது சேதன விவசாய முறைக்குச் சென்று ''மீண்டும் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை'' யாகச் சேதன விவசாயம் அமைந்துவிடக்கூடாது. ஏனெனில் எமது தேசத்தின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற துறையாக விவசாயத்துறை இருக்கின்ற போதிலும் கிராம மட்டத்தில், விவசாயத்தை ஜீவனோபாய தொழிலாக நம்பி வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைப் பொருளாதாரம் பின்தங்கிய நிலையே இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும் விவசாய விளை பொருள்களுக்குக் குறைந்தபட்ச நிர்ணய விலை இல்லாமை விவசாயிக்கும் இறுதி நுகர்வோருக்கும் இடையில்



பலதரப்பட்ட தரகு வியாபாரிகள் இருப்பதனால் இறுதி நுகர்வோர் நல்ல விலைகொடுத்து பொருள்களைக் கொள்வனவு செய்தாலும் விவசாயிதான் கஷ்ரப்பட்டதற்கு ஏற்றவாறு இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியாது இருக்கின்றமையும் பிரதான காரணங்கள் ஆகும். கடந்த ஆறு, ஐந்து மாதங்களுக்கு முன் இருந்த சந்தை நிலவரத்தை எடுத்து நோக்கினால் அதனை நாம் புரிந்துகொள்ளமுடியும். மரக்கறிகளின் விலை சந்தையில் 1 கிலோ 25/-இல் இருந்து 40/- வரை விற்பனை செய்யப்பட்டபோது விவசாயிக்கு ஒரு கிலோ 7/-இல் இருந்து 15/- வரையே கிடைக்கப்பெற்றது. இப்படியாகத் தளம்பல் நிறைந்த சந்தை வாய்ப்புக்கள் உள்ள நிலையில் அதிக மனிதவலுவையும், நீண்டகால தயார்ப்படுத்தலையும் கொண்ட சேதன விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளின் நிலைமை எப்படி இருக்கும்? சமூகத்திற்கு முன் உதாரணமாகத் திகழ வேண்டியவர்கள், சமூகத்தை வழிநடத்த வேண்டியவர்கள் கூடத் தங்களுடைய சுகபோக வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக மனிதாபிமானம் அற்ற முறையில் தர்மநிதி முறைகளுக்கு மாறாக தனது வருமானத்தைப் பெருக்கிக் கொள்கின்ற இக்காலத்தில் தனது அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்யமுடியாத வறுமையின் பிடியிலிருந்துகொண்டு காலத்தேவையுடன் தனது குடும்ப வாழ்வாதாரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கும் விவசாய மக்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்பட்டுச் சேதன விவசாய முறையே மேற்கொண்டு நஞ்சுத் தன்மையற்ற விவசாய விளைபொருள்களை உற்பத்தி செய்து சமூகத்திற்குத் தரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியமா? இப்படியாக ஜதார்த்தமான நிலமைகள் இருக்கின்றபோது சேதன விவசாயம் என்பது விவசாயிகளுடன் மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் என்று கூறிவிட்டுச் சமூகத்திலுள்ள மற்றவர்கள் ஒதுங்கிவிட முடியாது. இது ஒட்டுமொத்த சமூகத்திலுள்ள அனைவருடனும் தொடர்புபட்ட விடயம். அதனால் அனைவரும் ஒன்றுசேர்ந்தே இதனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

சேதன விவசாயம் பற்றிய எண்ணக்கருத்துக்களும், நிறுவனங்களும் 1930, 1940ஆம் ஆண்டுகளில் செயற்கை உரங்களின் பாவனைக்கு எதிராகத் தோற்றம்பெற்றது. அதன் தந்தையாக சேர் அல்பேட் வெறாவாட் Sir Albert Howard இருக்கின்றார். இருந்தபோதிலும் 1972ஆம் ஆண்டு ஜேர்மனியை தலைமையகமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட I Foam (Internation Fedration of Organic Agricultural Movement) என்ற நிறுவனம்தான் சேதன விவசாயத்தை விருத்தி செய்வதற்காகப் பல நாடுகளிலும் இயங்குகின்ற நிறுவனமாக இருக்கின்றது. இந்நிறுவனம் 2005ஆம் ஆண்டுதான் பல நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய சேதன விவசாயம் பற்றிய பொதுவான வழிகாட்டியை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் எமது தேசத்தில் கிராம மட்டத்தில் விவசாயி என்று இல்லாது சிறிய அளவில் விவசாயத்தில் ஈடுபடுபவர்களையும், சுய உற்பத்தியினை மேற்கொள்பவர்களையும்,சமூக அக்கறையுள்ளவர்களையும் உள்ளடக்கியதாக ''சிறுசேதன விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்'' என்ற நிறுவன அமைப்பு உருவாக்கி அவை அனைத்தையும் ஒன்றிணைத்து ''யாழ்.மாவட்ட சிறு சேதன விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் - சமாசம்'' என்ற வலுவான மாவட்ட ரீதியான கூட்டுறவு அமைப்பினை உருவாக்கி அதன் ஊடாக மாவட்டத்தின் சேதன விவசாய அபிவிருத்திக்கான செயற்பாடுகளை நிறுவன ரீதியாக முன்னெடுக்க வேண்டும்.

கிராம மட்டத்தில் உருவாக்கப்படுகின்ற சிறுசேதன விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுள் விவசாயச் செய்கையில் ஆர்வமானவர்களை ஒன்றிணைத்து விவசாய ஆர்வலர் குழுக்களைத் (FIC) தோற்றுவித்து அவர்கள் மூலமாக ஒருங்கிணைந்த மாதிரி பண்ணைகளைக் கிராமங்கள்தோறும் உருவாக்கவேண்டும்.

அதில் பொருளாதாரச் சேதநிலை இல்லாமல் பொருள்களை உற்பத்தி செய்து மாவட்ட மட்டத்தில் அதற்கான விலையினை நிர்ணயம் செய்து அவ்சேதன விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்களை உருவாக்கி அதன் மூலமாகப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதனால் விவசாயிகளின் வருமானத்திற்கு ஒரு உத்தரவாத நிலையை அக்கூட்டுறவுச் சங்கத்தினால் ஏற்படுத்த முடியுமானால் கிராமத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் அக்கூட்டுறவுச் சங்கங்களில் தாமாகவே முன்வந்து இணைந்துகொண்டு சேதன விவசாய முறையை முன்னெடுத்துக் கொள்வார்கள். இப்படியான ஒரு நிலமையை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து நாம் வாழ்கின்ற ஒவ்வொரு கிராமங்களிலும் தோற்றுவிக்க முடியுமாயின் எமது தேசத்தில் சேதன விவசாயத்தை அபிவிருத்தி செய்யமுடியும். இதனைத் தூர நோக்காகக்கொண்டு எமது புலோலி கிராமத்தில் பரீட்சார்த்தமாக ''சிறுசேதன விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்-புலோலி''(OFC Puloly) என்ற கூட்டுறவு அமைப்பினை உருவாக்கி அதன் கீழ் விவசாய ஆர்வலர் குழுக்களை ஏற்படுத்தி (FIC) அவர்களைக் கொண்டு ஒரு ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையினை அமைத்துப் பிரித்தானியாவை (UK) தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்ற கிறிஸ்ரியன் எட் (Christian aid) என்ற சர்வதேசத் தொண்டு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பின்கீழ் சொண்ட் (SOND) நிறுவனத்தின் அனுசரணையூடாகப் பண்ணை வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.



க.புவனேந்திரன்
முகாமையாளர்,
கூட்டுறவு கிராமியவங்கி,
புலோலி ப.நோ.கூ.சங்கம்.

உலகத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற செயற்கை உரங்கள், இரசாயனங்கள் என்பன உடனுக்கு உடன் எமது தேசத்தில் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் சுற்றுக்சூழலுக்குப் பாதிப்பு இல்லாது வளியிலிருந்து தாவரங்களுக்குத் தேவையான 80% விதமான தலைச்சத்துக்களைக் கிரகித்து மண்ணில் நிலைநிறுத்துகின்ற நுண்உயிர் உரங்கள், மண்ணில் கரையாத நிலையில் உள்ள மணிச்சத்தைக் கரைத்துத் தாவரங்களுக்குக் கிடைக்கச் செய்கின்ற நுண்உயிர் உரங்கள், விரைவாக உக்கல் தொழிற்பாட்டைச் செய்கின்ற நுண் உயிர்க்கலவைகள், தாவரங்களுக்குத் தாக்கங்களைக் கொடுக்கின்ற சில நுண்உயிர்களை அழிக்கவல்ல எதிர்உயிர்நுண் உயிர்க்கலவைகள் போன்றவைகள் மண்வளத்தை மேம்படுத்துவதோடு மண்ணின் உயிர்ப்புத் திறனைப் பாதுகாத்து மண்ணின் நுண்ஊட்டங்களைத் தாவரங்கள் சுலபமாகப் பயன்படுத்துவதற்குத் துணைநின்று விளைபொருள்களின் தரத்தையும் மேம்படுத்துகின்றன. இப்படியான தொழிற்பாடுகளைச் செய்கின்ற றைசோபியம், அசோஸ் பயிரில்லம், அசற்றோபக்டர், அசோலா, நீலப்பச்சைபாசி, பாசோ பற்றீரியா போன்ற நுண்ணுயிர் உரங்களும் சுடோ மோனஸ், றைகோடேர்மா போன்ற எதிர் உயிர் நுண்ணுயிர் கலவைகளும் உலக சந்தையில் இருக்கின்ற போதிலும் எமது தேசத்தில் இன்றுவரை விற்பனைக்கு வரவில்லல.
இருந்தபோதிலும் சமூகப் பொறுப்புடன் சில சமூக அமைப்புக்களை நடத்துகின்ற ஒருசில தனிநபர்களின் ஆர்வத்தினால் சில நுண்ணுயிர் உரங்கள் வெளிநாடுகளிலிருந்து சிறியளவில் தருவித்தலும் உரிய அங்கீகாரம் அவர்களுக்குக் கிடைக்கப் பெறுவதில்லை. இருப்பினும் தற்போது உக்கல் தொழிற்பாட்டை வினைத்திறன் உடன் செயலாற்றக்கூடிய வினைத்திறனான நுண்ணங்கிக் கலவைகளை(EM-Effective Michoorganism) மட்டும் 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா என்ற முகவரியிலுள்ள சர்வோதயம் என்னும் நிறுவனத்திடமிருந்து மட்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தின் உயிரியல்துறை தலைவர் கலாநிதி கு.மிகுந்தனின் வழிகாட்டலின்கீழ் அவர்களுடைய மாணவர்களினால் காலத்திற்குக் காலம் எமது உள்ளூர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய சில நுண்ணுயிர் கலவைகள் ஆய்வுநிலையில் வெற்றியளிக்கப்பட்டாலும் அத்தொழில்நுட்பங்களை மேலும் விருத்தி செய்து வர்த்தக ரீதியில் உற்பத்தியினை மேற்கொண்டு எமது விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்வதற்கு எந்த ஒரு நிறுவனங்களும் முன்வராதநிலை காணப்படுகின்றது. உதாரணமாக மண்ணில் அழுகல் வளரியாக வாழ்ந்து பயிர்களில் நோயைத் தொற்றுவிக்க வல்ல நுண்ணங்கிகளிலிருந்து தாவரங்களைப் பாதுகாக்கவில்லை. ஒருவகை நுண்ணுயிரான ''றைகோடேர்மா'' என்னும் பூஞ்சனத்தைக் கடந்த ஆண்டின் விவசாய உயிரியல்துறை சிறப்பு மாணவி செல்வி பிரியதர்சினி அவர்களின் ஆய்வில் வீட்டுக் கழிவிலிருந்து உற்பத்தி செய்யமுடியும் என்ற கண்டுபிடிப்பினை மேலும் விருத்தி செய்து விவசாய மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கச் செய்யமுடியாதுள்ளது.

அதனால் கிராம மட்டத்தில் உருவாக்கப்படுகின்ற சிறுசேதன விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினை ஒன்றிணைத்து மாவட்ட மட்டத்தில் உருவாக்குகின்ற சமாசம், விவசாயத் திணைக்களம், விவசாயபீடம் என்பவற்றுடன் இணைந்து எமது உள்ளூர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய நுண்ணுயிர் கலவைகளை இங்கே உற்பத்தி செய்தும், உற்பத்தி செய்யமுடியாதவற்றை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தும் மேலும் பல உயிரியல் உற்பத்திகளை மேற்கொண்டும் உள்ளூரில் இலகுவாக விவசாயிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை மேற்கொள்வோமானால் எமது தேசத்தில் சேதன விவசாயத்தை இலகுவாக நிறுவன மயமாக அபிவிருத்தி செய்யமுடியும். அதனால் ஒவ்வொருவரும் தாங்கள் இருக்கும் நிலையிலிருந்து இச்சேதன விவசாய அபிவிருத்திக்கு என்ன என்ன உதவிகள் செய்யமுடியுமோ அவற்றினைத் திறந்த மனத்துடன் செய்வதன் மூலம் எமது தேசத்தில் சேதன விவசாயத்தை அபிவிருத்தி செய்திடுவோம். ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.03.1986

★ கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த யாழ். தேவிரயில் பரந்தனில் ரயில் பாதையில் குண்டு வெடித்ததால் தடம் புரண்டதில் 5 பேர் உயிரிழப்பு; பலர் காயம்.

★ பாதுகாப்பு அமைச்சர் லலித்தின் இடைக்கால யுத்தநிறுத்த அறிவித்தலை போராளிகள் இயக்கங்கள் நிராகரிப்பு.

★ பரந்தனில் நடைபெற்ற குண்டுவெடிப்பு, ரயில் விபத்து என்பவற்றைத் தொடர்ந்து வடபகுதிக்கான ரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தம்.

17.03.1986

★ இலங்கை அரசின் சலுகையை ஏற்று ஒரு அகதி யாவது இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்கு வரவில்லை.

★ இந்தியாவில் வைத்து பேச்சுவார்த்தை நடத்த இலங்கை அரசை அனுமதிக்க வேண்டாம் என தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தலைமையிலான தமிழீழ ஆதரவாளர் அமைப்பு இந்திய மத்தியஅரசிடம் கோரிக்கை.

★ கொழும்பில் வைத்து அடகு நகைகளை மீளவிக்கும் அரசின் முடிவுக்கு எதிராக அடகு வைத்தோர் சங்கம் வடபகுதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள் முன்னால் மறியல் போராட்டம்.

18.03.1986

★ பிரேதபரிசோதனை செய்வதற்குடாக்டர் எவரும் இல்லாததால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சடலங்கள் தேக்கம்.

★ மூதூர் மல்லிகைத்தீவுச் சந்தியில் ஐந்து முஸ்லிம்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டு சடலங்கள் எரிக்கப்பட்டனவாம்.

★ இலங்கையில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நிறுவனத்தின் பிராந்திய அஞ்சல் நிலையத்தை நிறுவும் திட்டத்தில் தடங்கலும் சிக்கலும் உருவாகியுள்ளன.

19.03.1986

★ இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் வளர்ந்துவரும் இராணுவ உறவு குறித்து இந்தியா கவலையும் விசனமும் தெரிவிப்பு.

★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான முயற்சிகளுக்கு வெளியுறவுச் செயலர் ரொமேஸ் பண்டாரியை இலங்கைக்கு அனுப்புமாறு ஜனாதிபதி ஜே.ஆர். மீண்டும் இந்தியாவிடம் கோரிக்கை.

★ பூஸா, வெலிக்கடை, மகஸீன் சிறைச் சாலைகளில் தடுப்புக் காவலில் உள்ள தமிழர்களை அரச அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் வரும் உறவினர்கள், பார்வையிட அனுமதி.

20.03.1986

★ வடபகுதிக் கடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை ஆட்சேபித்து யாழ்.நகரில் பேரணி.

★ தெல்லிப்பழை கூட்டுறவுச்சங்கக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நஷ்டம்.

★ இலங்கைத் தமிழர் பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்படவேண்டிதன் அவசியத்தை தமிழக அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தும்.

21.03.1986

★ இலங்கையின் வட பகுதியில் தாக்குதல்களை மேற்கொள்ளும் விமானங்களை பிரிட்டிஷ் கூலிப்படை விமானிகளே செலுத்தினர் என்பதை இந்தியா, பிரிட்டிஷ் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

★ நெடுங்கேணி ஈட்டிமுறிந்தான் கிராமத்தில் கறுப்புச் சட்டைக்காரர் நடாத்திய வெறியாட்டத்தில் இருபத்தைந்துக்கும் குறையாத தமிழர்கள் கொலை.

★ இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்படவேண்டுமென இலங்கையில் உள்ள ரஷ்யத் தூதுவர் தெரிவிப்பு

22.03.1986

★ யாழ்.ஆஸ்பத்திரியில் இருந்த இரண்டு சடலங்களை இனந்தெரியாதோர் கடத்திச் சென்றதைத் தடுக்க முயன்ற சிற்றூழியர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேலை நிறுத்தம். கடத்தப்பட்ட இரு சடலங்களும் சில மணிநேரத்தில் மீண்டும் ஆஸ் பத்திரியில் ஒப்படைப்பு.

★ புதுக்குடியிருப்பில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் கிராம வாசிகள் ஏழு பேர் சுடப்பட்டு மரணம்.

★ புத்தர் காட்டிய வழியில் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கை அரசு தவறினால் இலங்கைத் தீர்வு சிக்கலில் சிக்க நேரிடும் என இந்திய வெளியுறவு இணை அமைச்சர் கே.ஆர்.நாராயணன் எச்சரிக்கை.

23.03.1986

★ தமிழ்ப் போராளிகளிடம் தற்போது சோவியத் தயாரிப்பு ஏவுகணைகள் உள்ளதாக சர்வதேச இராணுவ கேந்திர ஆய்வு நிறுவனத்தின் வெளியீட்டில் தெரிவிப்பு.

★ வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஐக்கிய தாதிமார் சங்கத்தை அரசு தடைசெய்ததால் ஏனைய பலதொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்த முஸ்தீபு

★ இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்கள மக்கள் மத்தியில் சரியான சிந்தனை, செயற்பாடு அமைய வேண்டியுள்ளதென நிதி அமைச்சர் ஞானிஇ மெல் தெரிவிப்பு.

24.03.1986

★ இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கைமீது கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென இந்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தினேஷ்சிங் இந்திய அரசை வலியுறுத்து.

★ இலங்கை நாடு சிங்களவரின் தாயகம்: சிங்களவரின் சொந்தமண். என ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு

★ இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளும் பணியை தொடர்ந்தும் ரொமேஸ் பண்டாரியிடம் ஒப்படைக்க வேண்டாம் என தமிழக அரசியல் தரப்புக்கள் மத்திய அரசிடம் கோரிக்கை.

25.03.1986

★ தமிழரைக் கொல்வதை நிறுத்தி நேரடிப் பேச்சுக்கு இலங்கை தயாராக வேண்டும் என நாடாளுமன்றத்தில் இந்திய வெளிநாட்டமைச்சர் தெரிவிப்பு.

★ பிரபல தமிழ் எழுத்தாளர் கே.டானியல் காலமனார்.

★ புதுடில்லியில் தங்கியிருந்து இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி நேரடியாகக் கவனிக்க ஒரு பிரதி நிதியை நியமிக்க த.வி.கூட்டணி முடிவு.

26.03.1986

★ ஓமந்தை அருகே குண்டுவெடித்து யாழ்.தேவி ரயில் தீப்பற்றி எரிந்தது. என்ஜின் சிதறியது.

★ திட்டவட்டமான யோசனைகளுடன் இறுதிப் பேச்சுக்கள் நடத்த இலங்கை தயாரானால் மட்டுமே ரொமேஸ் பண்டாரியை இலங்கைக்கு அனுப்ப இயலுமென பிரதமர் ராஜீவ்காந்தி திட்டவட்டமாகத் தெரிவிப்பு.

★ வவுனியாவிலும் திருகோணமலையிலும் இடம்பெற்ற இரு கண்ணிவெடிச் சம்பவங்களில் படையினர் மூவர் உயிரிழப்பு; பலர் காயம்.

27.03.1986

★ அரசினால் வான்தாக்குதல் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையிலும் தெல்லிப்பழைப் பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் பொது மகன் ஒருவர் மரணம்; பலர் காயம்.

★ அனலைதீவிலிருந்து ஊர்காவற்றுறைக்கு படகொன்றில் பிரயாணம் செய்தவேளையில் காணாமல் போய்விட்டதாகக் 'கருதப்பட்ட இருவர் யாழ்.கோட்டை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★ இராணுவ ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையொன்றை நிறுவ உதவிசெய்யும்படி இலங்கை விடுத்த கோரிக்கையை சீன அரசு நிராகரித்தது.

28.03.1986

★ போதைப்பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வந்து சிங்கள மக்கள் மத்தியில் விநியோகிக்க போராளிகள் திட்டமிட்டுள்ளதாக இலங்கை பௌத்த சங்கத் தலைவர் எட்மண்ட் பனாகொட தெரிவிப்பு.

★ முறையான அழைப்பு விடுக்கப்பட்டால் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சுதந்திரக்கட்சி ஒத்துழைப்பது பற்றிச் சிந்திக்கும் என அனுரா பண்டாரநாயக்கா தெரிவிப்பு.

★ தமிழருக்கு உரிமைகள் தருவதாக பதவிக்கு வரமுன்னர் உறுதியளித்த ஐ.தே.க. அரசு அதிலிருந்து தவறிவிட்டதாலேயே பயங்கரவாதம் ஆரம்பமானது என சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

29.03.1986

★ இந்தியாவின் கடும்போக்குக் காரணமாக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக அமைச்சரவையில் ஆராயப்பட்டது.

★ திருகோணமலை கன்னியாவில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து படையினர் பலி; தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் உரிமை கோரினர்.

★ மட்டக்களப்பு வாவியில் பொதுமக்களுடன் பயணித்த தோணி கவிழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப்பேர் பலி.

30.03.1986

★ வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான சுயாட்சித் திட்டமொன்றை தயாரிக்கும்படி பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை அரசுக்கு அறிவித்துவிட்ட போதிலும் ஜனாதிபதி ஜே.ஆரிடமிருந்து அதற்கான பதில் எதுவும் தெரிவிக்கப்பட வில்லை-இந்து நாளிதழ்

★ இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளை உள்ளடக்கி மாநில சுயாட்சி அமைப்பை உருவாக்க இந்தியப் பிரதமர் முயற்சித்து வருவதாகவும் அதற்காக அவருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அ.தி.மு.க.கழகம் தெரிவித்துள்ளது.

★ வடக்கில் பெரும் தாக்குதலுக்கு தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு.

31.03.1986

★ இந்தியாவின் கடும்போக்கை தளர்த்தும் ஒரு நடவடிக்கைதான் இலங்கை அரசின் யூனியன் பிரதேச அந்தஸ்து கொண்ட அமைப்புக்களை உருவாக்கும் திட்டம் என இலங்கை அரசின் முன்னணிப் பிரமுகர் கருத்து.

★ வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடர்ந்தும் தமிழர்கள் கொல்லப்படுவது குறித்த தனது கவலையும் ஆட்சேபத்தையும் இந்திய அரசு தனது தூதுவர் ஜே.என்.டிக்ஸிற் மூலம் ஜே.ஆருக்கு தெரிவிப்பு.

★ முஸ்லிம்கள் தங்கள் நலன்களைக் காப்பாற்றுவதற்கு வெனத் தனிக்கட்சி அமைக்கவேண்டிய அவசியம் எதுவும் கிடையாதென வெளி விவகார அமைச்சர் [illegible] தெரிவிப்பு.

தவறிவிட்டது

சங்கானையிலிருந்து மானிப்பாய் வழியாகத் திருநெல்வேலி வரும் வழியில் செல்வரத்தினம் நாராயணதாஸ் என்பவரது மோட்டார் வாகனத்திற்குரிய ஆவணங்கள் நேற்றுத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே:- 0779080354

வேலைக்கு ஆள் தேவை

மொத்த வியாபாரத்தில் ஈடுபடும் பான்சி கடை ஒன்றுக்கு கணக்கு லிகிதரும் விற்பனையாளரும் உடன்தேவை.
(மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது).
விளம்பர இல-5967
C/O உதயன் (சி/563243)

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள தனிப்பாவனையிலுள்ள Honda Supercup 50 batch model விற்பனைக்குண்டு.
தொடர்பு: 68, அச்சுக்கூட வீதி, கொக்குவில் கிழக்கு.
தொ.பே.: 0777531461 (91412)

French மொழி வகுப்பு

யாழ்.மாவட்டத்தில் எழுத, வாசிக்க, பேச்சுப் பயிற்சி 16.12.2009 முதல் 27.12.2009 வரை 10 நாள் வகுப்பு மாத்திரம். ஒரு நாளுக்கு 2 மணித்தியாலங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
ஆசிரியர்: இந்திரகுமார்
தொடர்பு: 077 4291587 (க/563;24)

# கல்முனைச் சிறையிலிருந்து தப்பிய கைதி வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை

**பொலிஸார்- கைது செய்யச் சென்றவேளை சம்பவம்**

மட்டக்களப்பு,டிசெ.14

கல்முனைச் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றிருந்த ஒருவர் மீளக் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக வீட்டில் தூக்குப்போட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் தெரிவித்ததாவது -

கல்முனைச் சிறைச்சாலையில் இருந்து ஒருவர் தப்பி ஓடிவிட்டார். அவர் சம்பாந்துறைப் பொலிஸ் பிரிவில் உள்ள அவரது வீட்டில் ஒளிந்திருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் அந்த வீட்டைச் சுற்றிவளைத்தனர்.

கையில் குண்டு வைத்திருக்கிறேன். கைது செய்ய வந்தால் குண்டை வெடிக்க வைப்பேன் என்று அவர் பொலிஸாருக்கு மிரட்டல் விடுத்தார்.

இதையடுத்து பொலிஸார் அதிரடிப் படையினரை அவசரமாக அழைத்தனர். நிலைமை மோசமாவதை அறிந்து கொண்ட கைதி வீட்டுக் கூரையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஓ-1)

# ஆங்கிலமொழிமூல விஞ்ஞானக் கற்கைநெறி; 84 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் , டிசெ.14

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2010 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு ஆங்கில மொழி மூல விஞ்ஞான பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முற்பகல் 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு 84 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தனித்தனியாக கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலமொழிமூலமான விஞ்ஞான பாடநெறிக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு:-

எஸ்.கஜந்தி (இளவாலை), வி.கோமகள் (மானிப்பாய்), எ.சர்மிலன் (சங்கானை), எம்.செல்வராஜ் (கொக்குவில்), கே.சங்கீர்தா (இணுவில்), எ.சேகர் (மானிப்பாய்), வி.றொசானி (பருத்தித்துறை), எப்.தனபாலன் (திருநெல்வேலி), ரி.ஜெகநாதன் (ஆனைக்கோட்டை), எஸ்.சோபிகா (கொழும்புத்துறை),

ஏ.ஜெயனா (கரவெட்டி) எஸ்.நடராஜா (சுழிபுரம்), வி.விஜயகுமார் (துன்னாலை), யு.பிரமிலா (சுன்னாகம்), எஸ்.பிரதீபன் (திருநெல்வேலி), ஏச்.பரமேஸ்வரன் (சித்தங்கேணி), என்.நித்தியானந்தன் (கந்தர்மடம்), என்.இளையதம்பி (சண்டிலிப்பாய்), எம்.சோமஸ்கந்தராஜ் (சாவகச்சேரி), ஆர்.மதியொளி (பருத்தித்துறை), எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜ் (அத்தியடி), பி.சங்கீதா (கொக்குவில்), எஸ்.சபாநாயகம் (கொடிகாமம்), எஸ்.பாமினி (வல்வெட்டித்துறை),

பி.கிருத்திகா (அச்சுவேலி), எம்.சுலக்ஷி (உரும்பிராய்), எஸ்.ராதிகா (நல்லூர்), வி.சிந்துஜா (சாவகச்சேரி), ரி.சுரேகா (நீர்வேலி), எஸ்.சிறிசாந் (நவாலி), ஜெ.எம்.சி. ரூபினா (இளவாலை), எம்.டி.டினேஷ் குமார் (வட்டுக்கோட்டை), ரி.அஜதா (நவாலி), என்.பஞ்சலிங்கம் (சுன்னாகம்), எஸ்.ஜசிதா (கோண்டாவில்), என்.ரேமா (யாழ்ப்பாணம்), என்.நவசாந்தன் (சுன்னாகம்), கே.கீர்த்தனா (சண்டிலிப்பாய்), ரி.கோமதி (புலோலி), ரி.திவ்யா (தாவடி), ஜெ.மேகலா (சங்கானை), எஸ்.பிரசாலினி (சாவகச்சேரி), வி.பாஸ்கரன் (சாவகச்சேரி),

எஸ்.புனிதராஜ் (கொக்குவில்), வி.யாலினி (திக்கம், அல்வாய்), வி.வரதராஜ் (சாவகச்சேரி), எஸ்.நாகமுத்து (கரவெட்டி), வி.தாட்சாயினி (கோப்பாய்),எஸ்.சர்மிலா (மூளாய்), எஸ்.சிவதர்சினி (பொலிகண்டி), வி.புவி (ஊரெழு), ரி.குகாயினி (உரும்பிராய்), எஸ்.வைதேகி (கலட்டி), எ.அஞ்சனா (கரவெட்டி), ஜி.ரகுலவரனி (கந்தரோடை), சி.தாரணி (மானிப்பாய்), டி.சுவர்னிக்கா (சுழிபுரம்),

எம்.ஏ.அந்தோனிராசன் (ஆனைக்கோட்டை), எஸ்.விஸ்ணுகுமரன் (பருத்தித்துறை), கே.வொரினா (கோண்டாவில்), கே.பரமானந்தன் (உரும்பிராய்), ரி.தயாலசீலன் (சுழிபுரம்), ரி.துசியந் (உடுப்பிட்டி), சி.கே.கிறிஸ்ரின் பானுமதி (இளவாலை), வி.சுமன் (சித்தங்கேணி), கே.நதியா (யாழ்ப்பாணம்), ஜெ.காயத்திரி (யாழ்ப்பாணம்), ஜெ.பாலதேவன் (யாழ்ப்பாணம்), எஸ்.சோமகாந்தி (மீசாலை), எல்.காபாலினி (சாவகச்சேரி), எஸ்.அபிராமி (சுண்டுக்குளி), பி.நிரோசன் (இணுவில்), எஸ்.அஜிதா (மல்லாகம்),

ஏ.எம்.நிரோசாந்த் (ஆனைக்கோட்டை), ஆர்.அகலியா (அல்வாய்), ஜி.பபிந்தா (கோண்டாவில்), ஏ.சோமேஸ்வரன் (கோண்டாவில்), எஸ்.தனேஸன் (சுழிபுரம்), எஸ்.கஜேந்திரன் (சித்தங்கேணி), சி.மேரி பிரான்சிஸ்கா (ஆனைக்கோட்டை), ஏ.யசோதா (இணுவில்), கே.தவரத்தினம் (சாவகச்சேரி), எஸ்.வேணுஜா (சுன்னாகம்). (9)

# குடாநாட்டுச் சந்தைகளில் திடீரென மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளிலேயே மரக்கறி வகைகளின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளன.

தற்போது பெய்துவரும் பருவமழையே இந்த மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்புக்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி வகைகளின் நேற்றைய விலை விபரம் வருமாறு:

கத்தரிக்காய் கிலோ- 130 ரூபா, பயிற்றங்காய் கிலோ -90 ரூபா, உருளைக்கிழங்கு கிலோ- 80 ரூபா, கோவா கிலோ - 80 ரூபா,

கரட் கிலோ -90 ரூபா, தக்காளிப்பழம் கிலோ- 70 ரூபா, பச்சைமிளகாய் கிலோ - 240 ரூபா, வெங்காயம் கிலோ-140 ரூபா, முருங்கைக்காய் கிலோ - 280 ரூபா, கீரைப்பிடி ஒன்று -30 ரூபா. (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளத்தை அபிவிருத்தி செய்ய நூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்

## கூட்டுறவு மாநாட்டில் அமைச்சர் சிறிபால

யாழ்ப்பாணம், டிசெ.14

தென்பகுதி மக்களுக்கு தென்னை எவ்வாறு முக்கிய வளமாக உள்ளதோ அதே போன்று வடபகுதி மக்களுக்கு பனை வளம் பயன்மிக்க கற்பக தருவாக விளங்குகிறது. அதன் அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபாவரை அடுத்த ஆண்டில் செலவிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா குறிப்பிட்டார்.

வட மாகாண ப.தெ.வ.அ.கூ. சங்க சமாசம் நடத்திய கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர் மாநாடு கடந்த வெள்ளிக் கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் த. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சர் மேலும் பேசும்போது கூறியவை வருமாறு:

இங்கே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யாது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஜனாதிபதி மகிந்த சிந்தனைக்கு அமைய வட பகுதியின் அபிவிருத்திக்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இங்கு சுகாதார சேவைகள் சீராக இடம்பெறவும் அனைத்து வைத்திய சாலைகளிலும் அதன் செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இங்குள்ள மக்கள் அறிவு பூர்வமானவர்களாகவும் கடின உழைப்பாளிகளாகவும் உள்ளனர். கடந்த கால அசாதாரண சூழல் காரணமாக இங்குள்ள மக்கள் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை இருந்துள்ளது.

தற்போது நிலைமை மாறியுள்ளது. இன்று தென்பகுதி மக்களும் வடபகுதி மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்கித்தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்கவும் வடபகுதி மக்கள் சுபீட்சம் நிறைந்தவர்களாக வாழ வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகிறார். அதற்கு நீங்கள் மனப் பூர்வமான ஆதரவை வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன். வைத்தியசாலையின் அபிவிருத்திக்கென ரூபா 3 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு தலைமைவகித்த வகையில் உங்களின் பிரச்சினைகள் குறித்து நான் ஆழமாக அறிந்திருக்கிறேன். இன்று அனைவருக்கும் மனப்பூர்வமான சமாதானம் கிடைக்கவேண்டும். அதற்காக இங்கு அனைத்து வகையான அபிவிருத்திகளையும் பெற்றுக் கொடுக்க நாம் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்-என்றார். (ஏ-111-16)

# சூது விளையாடியோர் நீர்வேலியில் கைது

யாழ்ப்பாணம், டிசெ.14

சூது விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இச்சம்பவம் நீர்வேலி வெங்காயச் சங்கப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தப்பகுதியில் சட்டவிரோதமாக இடம்பெறும் கசிப்பு விற்பனையைக் கட்டுப்படுத்தவென பொலிஸார் வந்த போதே பணத்தை வைத்துச் சூது விளையாடிக் கொண்டிருந்த நபர்களை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (04-224)

# சைக்கிள் கண்டெடுப்பு

வடமராட்சி, டிசெ.14

மந்திகை பொதுச் சந்தை வளாகத்தில் அநாதரவாகக் கிடந்த சைக்கிள் வண்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டு சந்தைப் பொறுப்பாளர்களால் பருத்தித்துறை பிரதேச சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சைக்கிளுக்குரியவர் உரிய அடையாளங்கள், ஆவணங்கள் காட்டி குறித்த கைவிடப்பட்ட சைக்கிளை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ச. சந்திரயோகன் தெரிவித்துள்ளார்.

# முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கவும்

யாழ்ப்பாணம், டிசெ.14

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினூடாக வாகன உரிமைமாற்றம், முகவரி மாற்றம், இலக்கத்தகடு மாற்றம், மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் என்பவற்றுக்காக விண்ணப்பித்து, நீண்ட காலமாக எதுவித பதிலும் கிடைக்கப் பெறாதவர்களுடைய ஆவணங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே இவ்வாறு விண்ணப்பித்து நீண்ட காலமாகியும் ஆவணங்களைப் பெறாதவர்கள் விண்ணப்பித்தமைக்குரிய அத்தாட்சி ஆவணங்களுடன் இந்த மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்குமாறும், விண்ணப்பத்தில் காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து ஏதாவது கடிதங்கள் கிடைக்கப் பெற்றிருந்தால் அவ்வற்றையும் தவறாது கொண்டு வருமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (04-07)

# மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது என புளொட் அமைப்பு முடிவு

## ஊடகவியலாளர் மாநாட்டில் சித்தார்த்தன்

வடமராட்சி, டிசெ.14

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதில் ஜனாதிபதி மஹிந்த துரிதமாகச் செயல்பட்டுள்ளார். அத்துடன் 13ஆவது சட்டத் திருத்தத்திற்கு அமைவாக அரசியல் தீர்வுத் திட்டத்தை வழங்க ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த இரண்டு காரணங்களின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாம் ஆதரவை வழங்க முன்வந்துள்ளோம்.

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் புளொட் அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளைச் சேர்ந்த இருவரும் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தைத் தரப்போவதில்லை. இருப்பினும் மஹிந்த ராஜபக்ஷவின் சில முன்மாதிரியான நடவடிக்கைகளை வைத்துப்பார்க்கும் போது சில காரியங்களை அவர் செய்வார் என நம்புகிறோம். இதனால்தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவை வழங்க நாம் தீர்மானித்தோம்.

எங்களைப் பொறுத்தவரை நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை விடுவித்து, அவர்களை உடனடியாகக் குடியமர்த்தும்படி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம். அதன் பிரகாரம் கடந்த 6 மாதங்களில் அவர்கள் விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். இம் மக்களை எமது கட்சி நேரில் போய்பார்வையிட்டது.

எமது இக்கோரிக்கை நிறைவேற்றப் பட்டமையாலும், தீர்வுக்கான அடிப்படை விடயங்களில் ஜனாதிபதி கவனமெடுத்து வருவதாலும் மஹிந்தவை நாம் ஆதரிக்கின்றோம்.

மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. அப்படி ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கும் நிலையில் நாம் இல்லை. யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் எமது அமைப்பின் நிலைப்பாடு முற்று முழுக்க மாறிவிட்டது. நாம் முற்று முழுக்க ஜனநாயக வழியிலேயே செயற்பட்டு வருகிறோம். அரசியல் தீர்வு, மீள்குடியேற்றம் ஆகிய விடயங்களில் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நாம் விரும்புகிறோம். இதற்கு நாம் தயாராக இருக்கின்றபோதிலும் ஏனைய கட்சிகள் தயாராக இல்லை. தமிழ் பேசும் சக்திகள் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் இலங்கை அரசியலில் நாம் ஒரு பேரம் பேசும் சக்தியாக உருவாகலாம். அதற்கான அடித்தளம் இடப்படவேண்டும். சுவிஸ் மாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடல் மிக ஆரோக்கியமானது. தமிழ் பேசும் கட்சிகள் அங்கு ஒன்றாக இருந்தன. அவ்வாறான நிலை உருவாக்கப்பட வேண்டும். இது ஒரு நல்ல ஆரம்பமாகும்.

வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பாக கிழக்கிலிருந்தே குரல் எழுப்ப வேண்டும். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு இணைப்பை முன்வைத்துப் போட்டியிட்டவர்களில் இரா.துரைரத்தினம் மாத்திரமே உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் அதனையும் சாதிக்க முடியவில்லை. அனைவருடனும் இணைந்து செயல்பட நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இணையத் தயாராக இல்லை. அந்த அமைப்பை வேறு ஒரு பெயரில் புதிதாக உருவாக்கி அந்த அமைப்பின் கீழ் ஒன்றுபட்டுச் செயற்பட நாம் தயாராக இருக்கிறோம். எங்கள் மத்தியில் ஒருமித்த கருத்து, பன்முகத் தன்மை இருக்க வேண்டும். ஏகப் பிரதிநிதித்துவம் என்பது இருக்கக் கூடாது. ஜனநாயகம், பன்முகத்தன்மை, ஒருமித்த கருத்து இருந்தால்தான் அரசியலில் ஆரோக்கியமான சூழல் எம் மத்தியில் ஏற்பட வாய்ப்புண்டு.

ஜே.வி.பி அழிக்கப்பட்ட போது அந்த அமைப்பிலிருந்த போராளிகளும் எதுவித பிரச்சினைகளுமின்றிச் சுதந்திர நடமாட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். அதேபோல புனர்வாழ்வு முகாம்களில் உள்ள புலிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

# மனைவியின் உடலில் எச்.ஐ.வி. கிருமி கணவனின் ஆசையால் நேர்ந்த விபரீதம்

ஒக்லாண்ட், டிசெ. 14

தமது மனைவியுடன் பாலுறவு கொள்ளவேண்டும் என்ற உந்துதல் காரணமாக நியூஸிலாந்தைச் சேர்ந்த எயிட்ஸ் நோயாளி ஒருவர் தமது இரத்தத்தை தையல் ஊசி மூலம் மனைவிக்கு ஏற்றி உள்ளார். நியூஸிலாந்திலிருந்து வெளியாகும் 'சண்டே ஸ்ரார்' பத்திரிகை அந்நாட்டு நீதிமன்ற வட்டாரங்களை மேற்கோள்காட்டி இச் செய்தியைப் பிரசுரித்துள்ளது.

35 வயதுடைய மேற்படி நபர் மனைவியுடன் பாலுறவு கொள்ளவேண்டும் என்ற உந்துதலால் தூண்டப்பட்டிருக்கிறார் என்றும், மனைவியின் உடலில் எச்.ஐ.வி. கிருமியை உட்செலுத்தி மனைவியை எயிட்ஸ் நோயாளி ஆக்குகின்றமை மூலமாகவே மனைவியுடன் பாலுறவில் மீண்டும் ஈடுபடுகின்றமை சாத்தியமாகும் என்று அவர் சிந்தித்திருக்கிறார் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

மேற்படி நபர் எச்.ஐ.வியால் பீடிக்கப் பட்டிருக்கிறார் என்று 2004 இல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவரின் மனைவியோ, பிள்ளைகளோ, இத்தொற்றுக்கு ஆளாகி இருக்கவில்லை என்று அந்நேரத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

அதைத்தொடர்ந்து, அந்நபரின் மனைவி சுமார் நான்கு மாதங்களுக்கு பின் மருத்துவப் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டார். அப்போது அவர் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகி இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், ஊசி மூலம் வைரஸ் கிருமியை ஏற்றியிருக்கின்றமையை அந்நபர் மனைவிக்கு ஒப்புக்கொண்டார்.

"நீ என்னைப் போல் ஆக வேண்டும் என்று விரும்பினேன். அப்போதுதான் நீ என்னுடன் வாழ்வாய். என்னை விட்டுப் போகமாட்டாய்" என்று மனைவிக்கு கூறி இருக்கிறார்.

அந்நபருக்கு எதிரான வழக்கு நியூஸிலாந்தின் ஒக்லாண்ட் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்நபர் தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவருக்கு மேற்படி குற்றத்துக்காக குறைந்தது 14 வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படலாம் எனவும் இத்தீர்ப்பு அடுத்த வருட ஆரம்பத்தில் அறிவிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

இந்நபரின் மனைவி நீதிமன்றில் ஆஜராகி வாக்குமூலம் வழங்கியுள்ளார். (கி)

# மனிதனின் மரபணுப் பட்டியல்: இந்திய விஞ்ஞானிகள் சாதனை

டில்லி, டிசெ. 14

மனிதனின் மரபணுப் பட்டியலைத் தயாரித்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

ஒவ்வொரு மனிதனின் குணாதிசயம், செயற்பாடுகள், திறமை, நிறம், தோற்றம், நோய் உள்ளிட்டவற்றுக்கு அவனது மரபணுக்களே காரணமாக இருக்கின்றன. ஒவ்வொரு மனிதனின் மரபணுவுக்கும், அவனது தந்தையின் மரபணுவுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது. தந்தையின் மரபணுப் பட்டியலில் ஏதாவது ஓரிடத்தில் நோய் இருந்தால், அவரது மகனுக்கும் அந்த நோய் தாக்க வாய்ப்புள்ளது. மரபணுப் பட்டியல் இருந்தால், மகனுக்கு முன்கூட்டியே மருந்து கொடுத்து அந்த நோயை தடுத்து விடமுடியும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மரபணு பட்டியலைத் தயாரிப்பது மிகவும் கடினம். இருப்பினும், அமெரிக்கா, பிரிட்டன், கனடா, கொரியா, சீனா உட்பட 14 நாடுகள் தனித்தனியாக இப்பட்டியலைத் தயாரித்து சாதனை புரிந்துள்ளன.

இந்நிலையில், சில மாதங்களுக்கு முன்பு, அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி கவுன்ஸிலைச் (சி.எஸ்.ஐ.ஆர்.) சேர்ந்த மரபணு விஞ்ஞானிகள், மரபணுப் பட்டியலைத் தயாரிக்கும் பணியைத் தொடங்கினர். 9 வார தீவிர ஆராய்ச்சிக்குப் பிறகு மனிதனின் மரபணுப் பட்டியலைத் தயாரித்து சாதனை படைத்துள்ளனர்.

இத்தகவலை சி.எஸ்.ஐ.ஆர். தலைவர் சமீர் பிரம்மச்சாரி டில்லியில் தெரிவித்தார்.

இந்திய விஞ்ஞானிகளின் இச்சாதனைக்கு துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இச்சாதனை குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பிருதிவிராஜ் சவான் அறிவித்தார். விஞ்ஞானிகளுக்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார். இச்சாதனை காரணமாக மரபணுப் பட்டியல் தயாரித்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட காரைநகர் பெரியகுளத்தின் நினைவுக் கல் திரைநீக்கம் செய்யும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது அரசாங்க அதிபர் கே.கணேஷ், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் சி.த.ஜெயசீலன், யாழ்.மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் எஸ்.பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் இணைந்து நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்வதை முதலாவது படத்திலும் புனரமைப்புச் செய்யப்பட்ட குளத்தின் ஒரு பகுதியை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (250)

# இலக்கத் தகடற்ற வாகனங்களின் நடமாட்டத்தை அவதானித்தால் உடனே பொலிஸாருக்கு அறிவியுங்கள்

## மானிப்பாய் காவல் நிலையம் அறிவிப்பு

நவாலி, டிசெ.14

இலக்கத் தகடுகள் இல்லாமல் ஊருக்குள் பயணிக்கும் வாகனங்கள் தொடர்பான விவரங்களைப் பொலிஸாரிடம் அறிவிக்க வேண்டும் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ஜெயதிலக பொதுமக்களிடம் கேட்டுள்ளார்.

நவாலிக் கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த பொதுமக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் மானிப்பாய் பொலிஸாரால் நடத்தப்பட்டது.

நவாலி கிழக்கு கிராம சேவையாளர் ரி. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது பல இடங்களில் குற்றச் செயல்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. அண்மையில் நவாலிப்பகுதியில் கொலை செய்யப்பட்ட பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டது.

மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட துரித விசாரணையின் பயனாக அந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவரென்று சந்தேகிக்கப்படும் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளோம். இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாத வகையில் பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக 16 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் தொடர்பான விடயத்தில் பெற்றோர் விழிப்புடன் செயற்பட வேண்டும். அத்தகைய வயதுடைய பிள்ளைகளின் நடவடிக்கைகளில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

அத்துடன் உங்கள் பிரதேசத்தில் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்கள் பயணிப்பது தொடர்பாகவும் அறிமுகமில்லாத புதிய நபர்களின் நடமாட்டங்கள் பற்றியும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தகவல்களை வழங்கி உதவுங்கள் - என்றார்.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் நவாலி தெற்கு, நவாலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த பொது அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (04-9-100)

# பனை, தென்னை வளங்களும் இலங்கையின் தேசிய வளங்களாகக் கருதப்பட வேண்டும்!

## பனம் வல்லுநர் மாநாட்டில் பிரகடனம்

யாழ்ப்பாணம், டிசெ.14

விவசாயம், கடற்றொழில் என்பன தேசிய வளங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று பனை, தென்னை வளங்களும் தேசிய வளமாக இருக்க வேண்டுமெனப் பிரகடனப்படுத்துகின்றோம். வட மாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் கொத்தணிகள், சங்கங்கள் இணைந்து நடத்திய கூட்டுறவுப் பனந்தொழில் வல்லுநர் மாநாட்டிலே இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாநாட்டில் வைத்து பிரகடனப்படுத்தப்பட்ட ஏனைய விடயங்கள் வருமாறு:

* விவசாயம், கடற்றொழில் என்பன தேசிய வளங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று பனை, தென்னை வளங்களும் தேசிய வளமாக இருக்க வேண்டும்.
* பனந்தொழில் வல்லுநர் சமூக, பொருளாதார, கலை, கலாசார விழுமியங்கள் தனித்துவமாகப் பேணப்பட வேண்டும்.
* வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இயங்குகின்ற பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதேச சங்கங்கள், மாவட்டச் சங்கங்கள், சம்மேளனங்கள் என்பன இவ் அமைப்பு சார்ந்த பல்லாயிரக்கணக்கான வல்லுநர்கள், அவர் சார்ந்த உறுப்பினர்கள், பணி கொள்ளப்படுவோர் உட்பட பல இலட்சத்திற்கு மேற்பட்டோரை உள்ளடக்கிய தேசிய அமைப்பாகும்.
* பனை தென்னை மரங்களில் இருந்து பெறப்படும் சாற்று உற்பத்தி (கள்) "மதுபானம் அல்ல' அது ஒரு "பாரம்பரிய ஔடதம்" என்பதனைப் பிரகடனப்படுத்துகின்றோம். (04-224)

# 'நாவலர் அருட்பாச் சம்பவம்' நூல் மறுபிரசுரமாக வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.14

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தையொட்டி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை எழுதிய 'நாவலர் அருட்பாச் சம்பவம்' என்னும் நூலை யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை வெளியிட்டுள்ளது.

ஆலயச் சீர்திருத்தம், ஆறுமுகநாவலரின் வாழ்வுடன் தொடர்புபட்ட அருட்பா, மருட்பா சம்பவ வழக்குத் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியுள்ள இந்நூலை, சைவ பரிபாலனசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று சபையின் தேர்வுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார். (04)


## தவறிவிட்டது

முத்துமாரி அம்மன் கோயிலடி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்னும் முகவரியுடைய நாகேஸ்வரன் பார்த்தீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (833084984V), ஒருதொகை பணமும் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கும் சுன்னாகம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.: 0778575026, 0778264732
முத்துமாரி அம்மன் கோயிலடி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

## தேவை

தனியார் நிறுவனமொன்றில் பணியாற்ற கணனி அனுபவமுடைய பெண்கள் தேவை.
தொடர்புக்கு:- 0773598224
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(சி/58321)

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 527
திகதி 2009/12/12

16 | 20 23 51 62

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | ரூ. 19,506,892.80 | — |
| [illegible] | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000,000.00 | — |
| [illegible] | [illegible] | ரூ. 50,000.00 | 11 |
| [illegible] | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 232 |
| [illegible] | [illegible] | ரூ. 1,000.00 | 484 |
| [illegible] | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 11,477 |
| [illegible] | [illegible] | ரூ. 40.00 | 6,658 |
| [illegible] | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 166,589 |
| [illegible] | [illegible] | ரூ. 20.00 | 26,674 |

ரூ. 6,088,660.00

ரூ. 20,515,305.60

தேசிய லொத்தர் சபை


## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை
செல்வி குமரேஸ்வரி சிவசாமி

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(91441)

## மரண அறிவித்தல்

### திருமதி சபாரத்தினம் கனகலட்சுமி (இராசமணி)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் கனகலட்சுமி (இராசமணி) நேற்று (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற நாகமுத்து சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிவயோகம் ஆகியோரின் சகோதரியும் சந்திரகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலகுமார் மற்றும் ஜெயமாலினி (கொழும்பு), சூரியகுமார் (லண்டன்), ஜெயந்தி, மாலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அவரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.12.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.03,
காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(91444)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### விக்னராஜா கௌரிபாலன்

(30ஆம் அணி மருத்துவபீட மாணவன்)

தோற்றம் 30.08.1984 — மறைவு 28.10.2009

கனிவான உன்முகமும்
கண்கொள்ளாப் புன்னகையும்
இனிய உன் வார்த்தைகளும்
இன்றெங்கே மறைந்தனவோ
பலகோடி உறவுகள்
இருந்தென்ன மகனே!
நீ பிரிந்த இடைவெளியை
யார்தான் நிரப்புவாரோ?

எமது அன்புச் செல்வத்தின் திடீர் மறைவின்போது எமது துயரில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 28.10.2009 இல் அமரத்துவம் அடைந்த அமரர் செல்வன் விக்னராஜா- கௌரிபாலன் (30 ஆம் அணி மருத்துவ பீட மாணவன்) அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (14.12.2009) திங்கட்கிழமை மு.ப 10மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

17/07 ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(சி/563245)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரைச் சமன் செய்தது இந்தியா!



மொகாலி, டிசெ.14

இலங்கைக்கு எதிரான 2ஆவது 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டியில் ஷேவாக், யுவராஜ்சிங்கின் அதிரடியில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரைச் சமன் செய்தது.

இந்தியா-இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடரில், நாக்பூரில் நடந்த முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கு மிடையிலான 2ஆவது மற்றும் கடைசி 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டி மொகாலியில் நேற்றுமுன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி ஜெயசூர்யாவும், டில்ஷானும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினார்கள். டில்ஷான் (1) வந்த வேகத்திலேயே ஆட்டமிழந்தார்.

பின்னர் ஜெயசூர்யாவுவும், அவருடன் 2ஆவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்காராவும் சரமாரியாக விளாசினார்கள்.

ஜெயசூர்யா 31 ஓட்டங்களைப் பெற்ற வேளை (21 பந்துகள், 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்), யூசுப் பதானின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார். மறுமுனையில் தொடர்ந்து மிரட்டிய சங்கக்காரா தனது 5ஆவது அரைச் சதத்தைப் பூர்த்திசெய்தார். அவர் 59 ஓட்டங்களைச் (31 பந்துகள், 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) சேர்த்த நிலையில் யுவராஜ்சிங்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் இலங்கை அணிக்கு அடுத்தடுத்து சில விக்கெட்டுகள் சரிந்தன. எனினும், இலங்கை அணி 200 ஓட்டங்களைக் கடந்தது.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 206 ஓட்டங்களைக் குவித்தது.

ஜெயசிங்க (38), ஜெயவர்த்தன (12), கபுகெதர (2), வீரரத்ன (3) ஆகியோர் தமது பங்குக்கு ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்துசென்றனர். மத்யூஸ் 26 ஓட்டங்களுடனும் குலசேகர 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் யுவராஜ்சிங் 3 விக்கெட்டுகளையும், இஷாந்த் ஷர்மா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் 207 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இந்திய அணி ஆடியது.

தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய கவுதம் கம்பீர், ஷேவாக் அபாரமாகச் செயற்பட்டது. 6 ஓவர்களில் 58 ஓட்டங்களைத் தொட்டபோது இந்த ஜோடி பிரிந்தது. கம்பீர் 21 (18 பந்துககள் ஒரு பவுண்டரி) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித்தலைவர் டோனி, ஷேவாக்குடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி வாணவேடிக்கை நடத்தியது.

ஷேவாக் 27 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்தார். அதிரடியாக ஆடிய ஷேவாக், இவர் 64 (36 பந்துகள்,7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து யுவராஜ்சிங், டோனியுடன் இணைந்தார். இருவரும் அடித்து ஆடிக் கொண்டிருந்தபோது. டோனி 46 ஓட்டங்களைப் (28 பந்துகள், 3 பவுண்டரிகள், 2 சிக்சஸர்கள்) பெற்றவேளை ஆட்டமிழந்தார். அப்போது அணி [illegible] ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து சுரேஷ்ரெய்னா, யுவராஜ்சிங்குடன் ஜோடி சேர்ந்தார். இலங்கை வீரர்களின் பந்து வீச்சை நாலாபுறமும் விளாசித்தள்ளிய யுவராஜ்சிங், 20 பந்துகளில் அரைச் சதத்தை எட்டினார். அவர் அடித்த 5ஆவது அரைச் சதம் இதுவாகும்.

மறுபுறத்தில் நின்ற சுரேஷ் ரெய்னா 9 ஓட்டங்களைப் பெற்றவேளை 'ரன்-அவுட்' ஆனார்.

அடுத்து தினேஷ் கார்த்திக், யுவராஜ்சிங்குடன் ஜோடி சேர்ந்தார்.

19.1 ஓவர்களில் இந்திய அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்றது. இதனால், 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

யுவராஜ்சிங் 60 ஓட்டங்களுடனும் (25 பந்துகள் 3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்) , தினேஷ் கார்த்திக் ஒரு பந்தில் 4 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 2 ஆட்டங்களைக் கொண்ட 'ருவென்ரி-20' தொடரை 1-1 என்ற கணக்கில் சமன்செய்தது.

இந்திய அணி வீரர் யுவராஜ்சிங் ஆட்ட நாயகனாத் தெரிவுசெய்யப்பட்டார். தொடர் நாயகனாக இலங்கை அணியின் தலைவர் சங்கக்காரா தெரிவுசெய்யப்பட்டார்.




# புது ஜோடி பிடித்தார் சானியா மிர்ஷா!

ஆஸ்திரேலியாவில் அடுத்துவருடம் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில், ஸ்பெயின் வீராங்கனையான பாஸ்கலுடன், இந்திய நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்ஷா களமிறங்குகிறார்.

இதுகுறித்து சானியா கூறியவை வருமாறு-

''ஆஸ்திரேலிய ஓபனில் ருவானோ பாஸ்கலுடன் இணைந்து இரட்டையர் பிரிவில் களமிறங்குகிறேன். இந்தத் தொடரில் சிறப்பாத விளையாடினால் அவருடன் தொடர்ந்து இரட்டையர் போட்டிகளில் பங்கேற்பேன்'' - என்றார்.

# நியூஸிலாந்து 120 ஓட்டங்கள் முன்னிலையில்

நேப்பயர், டிசெ.14

பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் விற்றோரியின் சதத்தால் நியூஸிலாந்து அணி வலுவான நிலையை எட்டியிருக்கிறது. பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாக். அணி நேற்றைய ஆட்ட நேரமுடிவின்போது விக்கெட் இழப்பின்றி 128 ஓட்டங்களைச் சேர்த்துள்ளது. அதேவேளை, நியூஸிலாந்து 120 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்-நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளுகிடையே தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேப்பயரில் நடந்து வருகிறது.

முன்னதாக, முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 223 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய நியூஸிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 47 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்த நிலையில் 2ஆவது நாள் ஆட்டத்தை நேற்றுமுன்தினம் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது, முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 346 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

அன்றைய ஆட்ட நேர முடிவின்போது விற்றோரி 100 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பின்னர் நேற்று தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, தனது இன்னிங்ஸிற்காக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 471 ஓட்டங்களைக் குவித்தது. விற்றோரி 134 ஓட்டங்களைச் சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை 248 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் ஆரம்பித்தது பாகிஸ்தான் அணி,

நேற்றைய ஆட்ட நேரமுடிவின்போது விக்கெட் இழப்பின்றி 128 ஓட்டங்களைச் சேர்த்து நல்ல நிலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தது.

இம்ரான் பார்ஹட் 55 ஓட்டங்களுடனும், சர்மான் பட் 66 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

# அல்-குவைதா தீவிரவாதிகளை ஒழிக்க பாகிஸ்தான் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்

## அமெ. ஜனாதிபதி ஒபாமா கோருகிறார்

வாஷிங்ரன், டிச. 14

'ஆப்கானிஸ்தானிலுள்ள அல் - குவைதா தீவிரவாதிகளை ஒழிப்பதற்குப் பாகிஸ்தான் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தாம் தொலைக்காட்சி நிறுவனமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் கோரியுள்ளார்.

''ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டிய பகுதியிலுள்ள பாகிஸ்தான் பகுதிதான் அல் - குவைதா தீவிரவாதிகளுக்குப் புகலிடமாக உள்ளது. இங்குதான் வன்முறை ஊக்குவிக்கப்படுகிறது. அமெரிக்காவின் முன்னுள்ள பல விடயங்களில் அல் - குவைதா தீவிரவாதிகளை ஒழிப்பது முக்கியமாக இடம் பெற்றுள்ளது. இதில் வெற்றி பெறுவதற்குப் பாகிஸ்தானின் ஒத்துழைப்பு அவசியம்'' என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

''ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், தற்போதைய சூழலில் கூடுதலாக 30 ஆயிரம் படைச்சிப்பாய்களை அனுப்புவதற்கான முடிவு மிகவும் அவசியமானது. ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான், அல் - குவைதா ஆகிய பயங்கரவாதக் குழுக்களை முற்றிலுமாக அழிப்பதே எமது நோக்கம்'' என்றும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

''2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் நுழைந்தபோது எவ்வளவு காலம் அங்கிருப்பர் என்ற ஒப்பந்தம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. பயங்கரவாதக் குழுக்கள் முற்றிலுமாக அழிக்கப்படும் வரையிலும் பயங்கரவாதிகள் இல்லை என்னும் திருப்தி ஏற்படும் வரையிலும் அமெரிக்கப் படைகள் அங்கு நிச்சயம் இருக்கும். ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புச் சுமை முழுவதையும் அமெரிக்கா ஏற்றுள்ளது.'' என்றும் ஒபாமா சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதிகள் பதுங்கியுள்ள பகுதிகளில் ஆளில்லா விமானங்களைச் செலுத்தித் தாக்குதல் நடத்தவேண்டும் என்று சி.ஐ.ஏ.பரிந்துரைத்தது. இதற்கு ஒபாமா ஒப்புதல் அளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''இதுபோன்ற தாக்குதலை பலுசிஸ்தான் பகுதியிலும் அமெரிக்கப் படையினர் மேற்கொள்ள பாகிஸ்தானின் ஒத்துழைப்பு அவசியம்'' என்றும் ஒபாமா குறிப்பிட்டுள்ளார். இப்பகுதியில்தான் தலிபான் தலைவர் முல்லா ஒமர் பதுங்கியிருக்கிறார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஈராக் எண்ணெய் வயல்கள் ஏலம்

பக்தாத், டிச. 14

ஈராக்கிலுள்ள எண்ணெய் வயல்களின் இரண்டாவது ஏலம் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இதில் வெளிநாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் 7 மாபெரும் எண்ணெய் வயல்களை வென்றுள்ளன.

இதன் மூலம் அடுத்த 7 ஆண்டுகளில் ஈராக்கின் எண்ணெய் உற்பத்தி நாள் ஒன்றுக்கு ஐம்பது இலட்சம் பீப்பாய்களாக உயரும் என ஈராக் எண்ணெய் வள அமைச்சர் ஹுசைன் அல்-ஷாரிஸ்தானி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்த லுக்கொயில் நிறுவனமும் நோர்வேயின் ஸ்டேட் ஒயில் நிறுவனமும் இணைந்து மிகப் பெரிய ஒப்பந்தமொன்றை வென்றுள்ளன. மற்றுமொரு பெரிய ஒப்பந்தத்தை ரோயல் டச் ஷெல் நிறுவனமும் மலேஷியாவின் பெட்ரோன்ஸ் நிறுவனமும் இணைந்து வென்றுள்ளன.

மத்திய மற்றும் வடக்கு ஈராக்கில் உள்ள பல எண்ணெய் வயல்களை ஏலத்தில் எவரும் கோரவில்லை. இது இந்த நிறுவனங்களுக்கு அப் பகுதியில் இருக்கும் பாதுகாப்பு மற்றும் வியாபார கவலைகளை காட்டுகிறது.

# உலக அழகு ராணியாக அல்டோரினா தெரிவு



2009 ஆம் ஆண்டின் உலக அழகியாக ஜிப்ரால்டா நாட்டைச் சேர்ந்த கயான் அல்டோரினா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

'மிஸ் வேர்ல்ட் - 2009' பட்டத்துக்கான உலக அழகிப் போட்டியின் இறுதிச் சுற்று சனிக்கிழமை இரவு தென் ஆபிரிக்காவிலுள்ள ஜோகன்ஸ்பர்க் நகரில் நடந்தது.

இதில் இந்தியா உட்பட 112 நாடுகளின் அழகிகள் கலந்துகொண்டனர். இந்தியா சார்பில் இந்தப் போட்டியில் பூஜா சோப்ரா பங்கேற்றார். தொடக்கச் சுற்றுப்போட்டிகளில் பூஜா மிகவும் சிறப்பான புள்ளிகளைப் பெற்றார்.

இந்நிலையில், சனிக்கிழமை பூஜா ஜோகன்ஸ்பர்க்கில் தங்கியுள்ள நட்சத்திர ஹோட்டல் படிக்கட்டில் இறங்கி வந்தபோது அவர் அணிந்திருந்த ஹை-ஹீல்ஸ் செருப்பு வழுக்கி கால் தடுமாறி கீழே விழுந்தார். இதனால் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு முன் நடக்கும் நடனப்போட்டியில் அவரால் பங்கேற்க முடியவில்லை.

இதற்கிடையே, ஐரோப்பிலுள்ள ஜிப்ரால்டர் நாட்டைச் சேர்ந்த கயான் அல்டோரினோ உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு உலக அழகிக்கான பட்டம் சூட்டப்பட்டது.இருபத் திரண்டு வயதாகும் கயான் அல்டோரினோ, மனிதவள மேம்பாட்டுத்துறையைச் சேர்ந்தவர். மெக்ஸிக்கோவைச் சேர்ந்த பெர்லா பெல்ட்ரான் இரண்டாவது இடத்தையும், தென்னா பிரிக்காவைச் சேர்ந்த டட்டும் கேஷ்வர் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந்த ஆண்டுக்கான உலக அழகியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட கயான் அல்டோரினோவுக்கு கடந்த ஆண்டு உலக அழகி பட்டம் வென்ற ரஷ்ய அழகியான கெனியாக்கி நோவா, மிஸ் வேர்ல்ட் மகுடத்தை சூட்டினார்.

3 ஆவது இடம் பிடித்த மிஸ் தென்னா பிரிக்கா அழகி [illegible] கேஷ்வர், இந்திய வம்சாவளியைச் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது.




# புஷ்ஷுக்கு மிரட்டல் விடுத்த இந்திய மாணவருக்குச் சிறை

சிக்காகோ, டிச. 14

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோர்ஜ் டபிள்யு. புஷ் இருந்தபோது, அவருக்கும் அவரது பாரியாருக்கும், துணை ஜனாதிபதியாகவிருந்த டிக் செனிக்கும் அவரது மனைவிக்கும் மிரட்டல் விடுத்த இந்திய மாணவர் விக்ரம் புத்திக்கு 57 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

அமெரிக்காவிலுள்ள புர்டியூ பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர் விக்ரம்புத்தி [illegible] 2006 ஆம் ஆண்டு [illegible] 'ஐ.ஐ.டி.' பிரிவில் ஆராய்ச்சி படிப்பு படித்துவந்தார். அப்போது இவர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த [illegible] டபிள்யு. புஷ், துணை ஜனாதிபதி டிக்[illegible], இவர்களது மனைவிமார் ஆகியோருக்கு மிரட்டல் விடுத்து தகவல் அனுப்பினார்.

இது அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து இவர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் மீது சிக்காகோவிலு[illegible] நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த சிரேஷ்ட நீதிபதி ஜேம்ஸ் டி மூடி குற்ற[illegible]சாட்டப்பட்ட விக்ரம் புத்திக்கு 57 மாத[illegible] சிறைத்தண்டனை விதித்து சனிக்கிழமை தீர்ப்பளி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு எதிரான காங்கிரஸ் அரசை தூக்கி எறியும் காலம் வெகுவிரைவில் வரும்

## வைகோ ஆவேசம்



இராமேஸ்வரம், டிசெ.14

இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழக மீனவருக்கும் எதிரான காங்கிரஸ் அரசை மக்கள் தூக்கியெறியும் காலம் விரைவில் வரும் என்று ம.தி.மு.க பொதுச் செய லாளர் வைகோ தெரிவித் தார்.

தமிழக மீனவர்கள் ஆயுதம் ஏந்தி படகில் கடலுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார.

தங்கச்சிமடத்தில் மீனவர்கள் வாழ்வுரிமை மாநாடு இடம்பெற்றது. இம்மாநாட்டுக்கு மனித உரிமை குடிமக்கள் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் ராசன் தலைமை வகித்தார். சிவகங்கை மறைமாவட்ட ஆயர் சூசை மாணிக்கம், விவேகானந்தா குடில் நிர்வாகி சுவாமி பிரணவானந்தா, இலங்கை தேசிய மீனவர் தோழமை இயக்க பிரதிநிதி ஹேமன் குமார், அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், தமிழா தேசிய இயக்க தலைவர் நெடுமாறன், தமிழ் தேசிய பொது வுடைமை கட்சி செயலாளர் மணியரசன், த.மு.மு.க., மாநில பொது செயலாளர் ஹைதர் அலி, மதச்சார்பற்ற ஜனதாதளம் மாநில செயலாளர் ஜோன்மோசஸ், மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் ஞானவாசகம், மீனவர் சங்க தலைவர் போஸ் உட்பட பலர் பேசினர்.

ம.தி.மு.க., பொதுச் செயலாளர் வை.கோ பேசியவை வருமாறு:-

தமிழகத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மீனவர்களை மத்திய அரசு, கண்டுகொள்ளாமல் கொடுமையான சட்டத்தை இயற்றியுள்ளது. இதுபோன்ற கொடூரமான சட்டத்தை, எந்த நாடும் இதுவரை போடவில்லை. இந்திய அரசு உதவி செய்ததால் தான் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு யுத்தத்தில் பின்னடைவு ஏற்பட்டது. தமிழக மீனவர்கள் ஆயுதம் ஏந்தி படகில் கடலுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும். இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் எதிரான காங்கிரஸ் அரசை மக்கள் தூக்கியெறியும் காலம் விரைவில் வரும் என்றார்.

# இலங்கை அகதிகளுக்கு கலர் ரி.வி. அன்பளிப்பு

ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் 895 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் வழங்கினார்.

இந்த அகதிகள் முகாமிற்கு கடந்த மாதம் வந்த மாநில நெடுஞ்சாலை துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனிடம் தெரிவிக்கப்பட்ட குறைகளின் அடிப்படையில் தற்போது முகாமில் வசிப்பவர்களுக்கு கலர் டி.வி. வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்தரவுப்படி பவானிசாகர் அகதிகள் முகாமில் வசிக்கும் 895 குடும்பங்களுக்கு இலவச கலர் டி.வி. வழங்கப்பட்டது.

பவானிசாகர் எம்.எல்.ஏ. சுப்பிரமணியம், கோபசெட்டிபாளையம் கோட்டாட்சியர் மகேஸ்வரன் ஆகியோர் டி.வி.க்களை வழங்கினார்கள்.

மேலும் இங்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள 14 பேர் கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற அனுப்பி வைக்கப்பட்டனர்.

48 நபர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தை போக்குவரத்து அதிகாரி பாலன் வழங்கினார்.

## இந்தியச் செய்திகள்

# தமிழகத்தைப் பிரிக்கும் பேச்சுக்கே இடமில்லை

## முதல்வர் திட்டவட்டம்



தமிழ்நாட்டை இரண்டாக பிரிக்கும் கருத்துக்கு இங்கு இடமில்லை என்றும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அந்த எண்ணம் இல்லை என்றும் தமிழக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். சென்னை கோட்டூரில் மிகப் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்டு வரும் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகப் பணிகளை முதல்வர் கருணாநிதி நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். .

அப்போது செய்தியாளர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: இந்த நூலக கட்டிடப் பணிகள் எப்போது நிறைவுறும்?

பதில்: 2010ஆம் ஆண்டு மே மாதம் முடிவுறும்.

கே: முல்லைப்பெரியாறு, காவிரி பிரச்சினைகளில் நீங்கள் சரியாக செயற்படவில்லை என்று ஜெயலலிதா குற்றம் சாட்டியிருக்கிறாரே?

ப: அந்த கருத்துக்களுக் கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. மக்களுக்கே உண்மை தெரியும்.

கே:தனித் தெலுங்கானா பிரச்சினையை மத்திய அரசு சரியாக கையாளவில்லை என்று நினைக்கிறீர்களா?

ப: தாமதமான அறிவிப்பும், அதைத் தொடர்ந்த அவசரமான முடிவும் எடுக்கக் கூடாது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

கே: தமிழகத்தையும் இதுபோல பிரிக்க வேண்டும் என்ற கருத்து பற்றி?

ப: அதற்கெல்லாம் இங்கு இட மில்லை. அப்படிப்பட்ட ஒரு கருத்து தி.மு.கவில் இல்லை, தமிழ்நாட்டு மக்களுக்கும் இல்லை.

- இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.

# ஈழத் தமிழரைக் காப்பாற்ற தவறிவிட்டார் கருணாநிதி

## திருச்செந்தூரில் விஜயகாந்த் காட்டம்

திருச்செந்தூர், டிசெ.14

இலங்கைத் தமிழர்களைமுதல்வர் கருணாநிதி காப்பாற்றத் தவறிவிட்டார் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றஞ் சாட்டினார்.

திருச்செந்தூர் இடைத்தேர்தலில் தே.மு.தி.க. வேட்பாளராக போட்டியிடும் கோமதி ஆ.கணேசனுக்கு ஆதரவு திரட்டுவதற்காக அக்கட்சியின் நிறுவன தலைவர் விஜயகாந்த் நேற்று முன்தினம் மாலை 4.45 மணிக்கு ஆறுமுகநேரிக்கு வந்தார். அங்கு அவருக்கு தேர்தல் பொறுப்பாளர் ஆஸ்டின் தலைமையில் பட்டாசுகள் வெடித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கு திரண்டு இருந்த தொண்டர்களிடையே திறந்த வானில் நின்றபடி விஜயகாந்த் பேசினார்:-

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற தமிழக முதல்வர் கருணாநிதி தவறிவிட்டார் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றஞ்சாட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த தொகுதியில் ஏன் தேர்தல் வந்தது என்பதை சிந்திக்க வேண்டும். இந்த தேர்தலில் உங்கள் எதிர்ப்பை காட்டுங்கள். அப்போது தான் ஆளும் கட்சியினருக்கு பயம் ஏற்படும். உங்களுக்கு நல்ல ஆட்சி வரவேண்டும்.

தே.மு.தி.க. 21ஆவது கட்சி என்றார்கள். அப்படி சொன்னவர்களை இன்று காணவில்லை. தற்போது களத்தில் தி.மு.க., அ.தி.மு.க., தே.மு.தி.க. மட்டுமே உள்ளது. தைரியம் இருந்தால் அவர்களும் வந்து நிற்கலாம்.- என்றார்.

# ஆந்திராவை பிரிப்பதைஎதிர்த்து ராமராவின் மனைவி போராட்டம்

ஆந்திராவைப் பிரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து என்.டி.ராமாராவ் சமாதி முன்பு சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கப் போகிறார் என என்.டி.ஆரின் மனைவி லட்சுமி சிவபார்வதி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

ஆந்திர மாநிலத்தை பிரிக்கும் தவறான முடிவை எடுத்து விட்டனர். இதை தடுத்து நிறுத்த வேண்டும்.

மத்திய அரசு மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் முடிவு கண்டனத்துக்குரியது.

மாநிலப் பிரிவினையைத் தடுப்பதற்காக நான் என்.டி.ராமராவ் சமாதி முன் இன்று திங்கட்கிழமை முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன் என்று லட்சுமி சிவபார்வதிஅறிவித்துள்ளார்.

# ஈழத் தமிழருக்கான போராட்டங்கள் உரிய பயன்களைத் தரவே இல்லை

## இந்து மக்கள் கட்சி கவலை

கோவை,டிச.14

இலங்கை தமிழர்கள் சம உரிமை பெற்றிடவும், தனி ஈழம் மலர்ந்திடவும், தமிழக மீனவர்கள் வாழ்வுரிமை காத்திடவும், கச்சத்தீவை மீட்கவும், அரசியல்வாதிகள் பல போராட்டங்களை நடத்தி விட்டனர்-அறவழி போராட்டங்களும் நடந்துள்ளன - ஆனால் இவற்றால் எந்த பயனும் ஏற்படவில்லை என்று இந்து மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜூன் சம்பத் கவலை தெரிவித்தார். சமச்சீர் கல்வித் திட்டத்தில் இடம் பெற்றுள்ள இந்து மதத்துக்கு எதிரான கருத்துக்களை நீக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவர் கோவையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை தமிழர்கள் சம உரிமை பெற்றிடவும், தனி ஈழம் மலர்ந்திடவும், தமிழக மீனவர்கள் வாழ்வுரிமை காத்திடவும், கச்சதீவை மீட்கவும், அரசியல்வாதிகள் பல போராட்டங்களை நடத்தி விட்டனர். அறவழி போராட்டங்களும் நடந்துள்ளன. ஆனால் இவற்றால் எந்த பயனும் ஏற்பட வில்லை. எனவே இந்து மக்கள் கட்சியினர் ராமேஸ்வரம் கீழ் வாசலில் தமிழ் திருமுறை ஞானவேள்வி நடத்தி இறைவனிடம் முறையிட உள்ளோம். இதில் பழ.நெடுமாறன், இலங்கை தமிழ் எம்.பி. சிவாஜிலிங்கம், ம.தி.மு.க. மாநில செயலாளர் செந்திலதிபன் மற்றும் தமிழ் அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்து கொள்கிறார்கள். தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதற்கான பாட புத்தகங்களில் இந்து மதத்துக்கு விரோதமான கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. அவற்றை உடனடியாக நீக்க வேண்டும். இல்லையென்றால் அத்தகைய கருத்துக்களுடன் வரும் புத்தகங்களை நாங்கள் எரிப்போம் என்று எச்சரிக்க விரும்புகிறோம். பள்ளிப் பாடங்களில் இந்து மத கலாசாரம், யோகா, உடற்பயிற்சி, போக்குவரத்து விதிமுறைகள் ஆகியவற்றை பாடதிட்டத்தில் சேர்க்க வேண்டும். தமிழ்நாட்டில் மும்மொழி கல்வி திட்டத்தை கொண்டு வர வேண்டும். சச்சார் கமிட்டியின் பரிந்துரைகள் ஒரு தலைபட்சமானவை. எனவே அவற்றை அமுல்படுத்தக்கூடாது.

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுக்கு தமிழ் ஓதுவார்களை அழைக்கவேண்டும். மாநாட்டையொட்டி கோவையில் பாரதியார், வ.உ.சி. போன்ற தலைவர்களின் சிலைகளை வைக்க வேண்டும். கோவையில் அமைக்கப்பட உள்ள பூங்காவை மூலிகை பூங்காவாக அமைக்க வேண்டும் - என்றார்.

# போலி வைத்தியர்களை ஒழிக்கச் சட்டம்: திண்டுக்கல் மாநாட்டில் வலியுறுத்தல்

திண்டுக்கல்-14

தமிழகத்தில் 35000 போலி வைத்தியர்கள் ஒழிக்க தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று வைத்தியர்கள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.திண்டுக்கல்லில் அரசு வைத்தியர்கள் 12ஆவது மாநில மாநாடு நடந்தது. தமிழ்நாடு மருத்துவக்கவுன்சில் தலைவர் பிரகாசம் அங்கு பேசியதாவது: தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரிகளில் 15000 வைத்தியர்கள் உள்ளனர். வெளியே 35000 போலி வைத்தியர்கள் உலா வருகின்றனர். வைத்தியர்கள் மாதிரி மருந்து, மாத்திரைகளை எழுதி கொடுக்கின்றனர். இதனால் மக்களுக்கு ஏராளமான பாதிப்புகள் ஏற்படுகிறன. போலி வைத்தியர்கள், ஆரம்ப சுகாதார நிலைய வைத்தியர்களை செயல்பட விடுவதில்லை. ஆரம்ப சுகாதார நிலைய வைத்தியர்கள் மீது போலி புகார்களை கொடுத்து வெளியேற்றப் பார்க்கின்றனர்.

போலி வைத்தியர்கள், மூட்டுவலி, ஆண்மை கோளாறு சிகிச்சை என விளம்பரங்களை கொடுக்கின்றனர். இவர்களை நம்பி செல்பவர்களுக்கு கிட்னி உட்பட உடலியல் கோளாறு ஏற்படுகிறது. பாரம்பரிய வைத்தியத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. அதே நேரத்தில் பாரம்பரிய வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளை எழுதக்கூடாது. போலிகளை ஒழிக்க சரியான சட்டம் இல்லாததால், சட்டசபையில் போலி வைத்தியர்களை ஒழிக்க தனியாகச் சட்டம் கொண்டு வரவேண்டும். இவ்வாறு மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

# வேட்டைக்காரன் படத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் வேட்டு!

சென்னை-14

விஜயின் வேட்டைக்காரன் படத்தை புறக்கணிப்போம் என புலம்பெயர் ஈழத் தமிழர்கள் மின்அஞ்சல் மற்றும் துண்டு அறிக்கைகள் மூலம் உலகத் தமிழர்களுக்கு, அழைப்பு விடுத்துள்ளனர்.

ஈழப் போருக்கு இந்தியாவை ஆளும் காங்கிரஸ் நேரடியாக உதவி செய்ததை இலங்கை அரசே ஒப்புக் கொண்டுள்ளது. இது தெரிந்தும் ராகுல் காந்தியைச் சந்தித்து அவரது அரசியல் பரவேசம் குறித்து ஆலோசித்தார் விஜய்.

வெளியே ஈழத் தமிழருக்கு ஆதரவு போல் காட்டிவிட்டு, ராகுல் காந்தியை சந்தித்து அரசியல் பேரம் பேசிய விஜயின் படங்களை ஆதரிப்பதில்லை என அப்போதே ஈழத தமிழர்கள் வெளிப்படையாக அறிவித்தனர்.

வரும் பதினெட்டாம் திகதி வேட்டைக்காரன் திரைப்படம் வெளியாக இருக்கும் நிலையில் தங்களது எதிர்ப்பை வலுவாக காட்டி வருகிறார்கள் ஈழத் தமிழர்கள்.

மேலும், போர் நேரத்தில் இலங்கைப் படையினருக்கு உற்சாகமூட்டும் பாடல்களை புனைந்தளித்த, ராஜ்வீரரத்ன என்பவருடன் இணைந்து பணிபுரியும் விஜய் அன்டனி என்பவர் தான் வேட்டைக்காரன் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

சிங்கள பாடல்களின் மெட்டுக்களை வேட்டைக்காரன் படப் பாடல்களில் பயன்படுத்தி தமிழர்களை அவமானப்படுத்தியிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் காரணங்களால் வேட்டைக்காரன் படத்தை புறக்கணிப்போம் என ஈழத் தமிழர்கள் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 10, 20 ரூபா தாள்களுக்கும் சில்லறைக் குற்றிகளுக்கும் தட்டுப்பாடு

## பொதுமக்கள், வர்த்தகர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.14.

யாழ்.மாவட்டத்தில் சில்லறை நாணயக் குற்றிகளுக்கும், பத்து ரூபா, இருபது ரூபா நாணயத் தாள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் நாணயத் தாள்களும் அதிகளவில் பழுதடைந்த நிலையிலேயே புழக்கத்தில் உள்ளன.

இதேவேளை, ஆயிரம், இரண்டாயிரம் ரூபா நாணயத் தாள்கள் தற்போது அதிகளவில் புழக்கத்தில் இருப்பதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

இதனால் வர்த்தகர்களும் பொதுமக்களும் கொடுக்கல் வாங்கல்களின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

குடாநாட்டில் இயங்கிவரும் வங்கிகள் இந்த விடயத்தில் கவனம் எடுத்து, வர்த்தகர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் குறைந்த பெறுமதிமிக்க நாணயத் தாள்களையும், தேவையேற்படுவோருக்கு நாணயக் குற்றிகளையும் விநியோகித்தால் நிலைமை சீரடையும் என்று பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது. (ஒ-14-224)

# கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று மு.ப. 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் கலந்துரையாட லுக்கு சமுகம்தருமாறு வேலையற்ற பட்ட தா ரிகள் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-16-23)

# 'சிரமவாசனா' சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,டிசெ.14

தேசிய லொத்தர் சபையின் 'சிரமவாசனா' 207 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'S' என்ற ஆங்கில எழுத்தும் 11, 36, 49, 53 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் நான்கு இலக்கங்களையும் சரியாகப்பொருத்தி ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபா பரிசாகக்கிடைத் துள்ளது. மூன்று இலக்கங்களை சரியாகக் குறிப்பிட்ட 171 பேருக்கு ஆயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

இரண்டு இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிட்ட 6,094 பேருக்கு ஐம்பது ரூபா வீதமும் ஒரு இலக்கத்தைச் சரியாகக் குறிப்பிட்ட 66,330 பேருக்கு இருபது வீதமும் பரிசுகள் வழங்கப்படும்.

இதேவேளை, சுப்பர் பரிசு இம்முறை வெல்லப்படவில்லை. (04-16)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் நேற்று விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ.14

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்து வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் தேவநேசன், நிர்வாக அதிகாரி பத்மநாதன், வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

அங்கு யாழ்ப்பாணத்தில் ஒசுசல (அரச மருந்து விற்பனை நிலையம்) நிறுவனத்தின் கிளை ஒன்றினை அமைப்பதற்கு உரிய இடமொன்றையும் தெரிவுசெய்து வழங்க விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். மேலும் வைத்தியசாலையில் கழிவுகள், குப்பைகள் அகற்றப்படுதல் தொடர்பாக நேரில் பார்வையிட்டு தமது அதிருப்தியை வெளியிட்ட அமைச்சர் கூடவே வருகை தந்திருந்த யாழ்.மாநகரசபை பிரதி முதல்வர் துரை ராஜா இளங்கோவுக்கு உரிய பணிப்புரைகளையும் வழங்கினார். அத்துடன் வைத்தியசாலையில் நிலவும் பதவி வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப்படும் என்றும் தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதால் அதன் பின்னர் இந்தப் பதவிகள் அனைத்தும் நிரப்பப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கை மீனவரின் படகை இந்தியப் படையினர் எரிப்பு?

கொழும்பு,டிசெ.14

இந்தியக் கரையோரக் காவற்படையினரைப் பணயமாகப் பிடித்ததாகக்கூறப்படும் இலங்கை மீனவர்களின் படகுக்கு என்ன நேர்ந்தது என்பதில் சந்தேகங்கள் நிலவி வந்தன. ஆனால், தற்போது இந்தியக் கடற்படையினரே வின்ட் மலரன் என்ற அந்தப் படகைத் தீயிட்டு எரித்துவிட்டதாக இலங்கை மீனவர்கள் தரப்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்தப் படகிலிருந்தவர்களின் நிலைமை குறித்து முரணான தகவல்கள் வெளியாகியவண்ணமுள்ளன.

இந்தியக் கடற்படையினர் குறிப்பிட்ட படகை எடுத்துச் சென்று தீயிட்டு எரித்து விட்டனர் என அறிகிறோம்.- என்று இலங்கைக் கடற் தொழிலாளர் கூட்டுறவுச் ,சங்கத்தின் தலைவர் பேர்னாட் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்படை சர்வதேச கடற்பரப்பில் வைத்து இலங்கை மீனவர்களைக் கைது செய்ததாகவும் பெர்னாண்டோ குற்றம்சாட்டியுள்ளார். இவ்வாறு கைது செய்பவர்களை அவர்கள் ஆறு, ஏழு மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கின்றனர். இதனால் மீனவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் பெரும் துயரங்களை அனுபவிக்க நேர்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், படகிலிருந்தவர்களின் நிலை குறித்து அவர் எதனையும் தெரிவிக்கவில்லை.

இந்தியக் கரையோரக் காவற்படையினரைப் பணயக் கைதிகளாகப் பிடித்த படகு பின்னர் தீப்பிடித்து எரிந்துவிட்டதாகவும் இதன்போது உயிர் தப்பியவர்களைத் தாங்கள் தேடி வருகின்றனர் எனவும் இந்தியக் கடற்படை தெரிவித்துள்ளது. (சி)

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு 24 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.14.

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் அல்லது ஏதேனும் நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும். அல்லது ஏதேனும் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி, விண்ணப்ப முடிவு திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். தகுதி உடைய விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'தகவல் தொடர்பாடல் கற்கை நெறி (NCICT) க்கான விண்ணப்பம்' எனத் தவறாது குறிப்பிடப்படவேண்டும் எனவும் மாவட்ட முகாமையாளர் கி. கிருஷ்ண பவான் அறிவித்துள்ளார். (ஒ-14)

# பிரதி அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர் முடிவடைந்த பின்னரும் கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், அவர்கள் வாழும் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் உருப்படியாக எதுவும் செய்யப்படவில்லை.

முஸ்லிம், தமிழ் மக்களின் காணிகளின் ஆக்கிரமிப்பு உச்சக்கட்டத்தை நோக்கிச் செல்கிறது-

அம்பாறை மாவட்டத்துக்கு தமிழ்பேசும் அரச அதிபர் ஒருவரை நியமிப்பதில் அரசு அக்கறைகாட்டுவதாக இல்லை -

பலவித எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் புதிய பிரதேச சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது-

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்திலும் தமிழ், முஸ்லிம் மக்களுக்குபெறுமதியாக எதுவும் செய்யப்படவில்லை. -

இத்தகைய ஒரு நிலையிலேயே எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் பிரதி அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட முடிவு செய்துள்ளேன் - என்று நேற்றைய கூட்டத்தில் அவர் பேசினார்.

இவர் அனேகமாக இன்று அல்லது நாளை ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்துவார் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று தமது ராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இவர் ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடனேயே சுயேட்சையாகப் போட்டியிடுகிறார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-லீ)

# ஆயுதங்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்டுபண்ணியுள்ளது. வடகொரியாவிலிருந்து தென்னாசிய நாடொன்றிற்கு அல்லது மத்திய கிழக்கிற்கு ஆயுதங்களுடன் செல்லவிருந்த விமானமொன்றைத் தாம் தடுத்துள்ளார்கள் என்றும் அதிலிருந்த ஐந்து நபர்களையும் கைதுசெய்துள்ளார்கள் எனவும் தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த விமானத்திலிருந்து 35 தொன் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உட்பட நவீன வகையிலான பல ஆயுதங்கள் உள்ளன என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வடகொரியாவிலிருந்து புறப்பட்ட குறிப்பிட்ட விமானத்தை எரிபொருள் நிரப்புவதற்காகத் தாய்லாந்தில் இறக்குவதற்கு அனுமதி கோரப்பட்டதாகவும், அவ்வேளையே ஆயுதங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட விமானம் எங்கு சென்றுகொண்டிருந்தது என்பது குறித்து முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாய்லாந்து ஊடகங்கள், விமானம் இலங்கைக்குச் சென்றுகொண்டிருந்தது எனத் தகவல் வெளியிட்டுள்ளன. எனினும், இலங்கை அரசு இதனை மறுத்துள்ளது.

குறிப்பிட்ட விமானம் இலங்கையை நோக்கிப் பயணிக்கவில்லை எனத் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் குலுகல்ல தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிலிருந்து விமானம் ஆயுதங்களுடன் புறப்படுவது குறித்து அமெரிக்க அதிகாரிகளே தாய்லாந்திற்குத் தகவல் வழங்கினர் என ஒபாமா நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட விமானத்திலிருந்தவர்களில் நால்வர் கஜகஸ்தானைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் பெலாரஸ் பிரஜை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (சி)

# சரணடைய முன்வந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் தலைவர்கள் எவரும் சரணடைவதற்கு அனுமதிக்கக் கூடாது, அனைவரையும் கொல்லவேண்டும் என முக்கிய களத் தளபதிக்கு உத்தரவிட்டார் எனத் தமக்குத் தெரியவந்தது என்றும் ஜெனரல் பொன்சேகா அப்பேட்டியில் கூறியிருக்கின்றார்.

மோதலின் இறுதி நாள்களில் விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய தளபதிகள் உட்படப் பலர் சரணடையத் தயாராகவுள்ளனர் என்ற தகவல் தனக்குத் தெரிவிக்கப்படவேயில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடேசன் உட்பட மூன்று முக்கிய தலைவர்கள் சரணடைவது தொடர்பான தகவல் பரிமாற்றம் விடுதலைப் புலிகளின் தலைமை, நோர்வே, ஏனைய வெளிநாட்டுத் தரப்புகள் மற்றும்ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ஆகியோர் மத்தியில் மாத்திரம் இடம்பெற்றன என்று, தனக்கு இது குறித்துத் தெரிவிக்கப்படவில்லை என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ பின்னர் இந்த விடயத்தை கோத்தபாய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார். கோத்தபாய ராஜபக்ஷ சரணடைய முயலும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எவரையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம், அனைவரும் கொல்லப்பட வேண்டும் என இராணுவத்தின் 58 ஆவது பிரிவின் தளபதி சவீந்திர சில்வாவிற்கு உத்தரவிட்டார் என நான் அறிந்தேன் என்று சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

### உயர்மட்ட உத்தரவின் படி சுட்டுக்கொல்லப்பட்டனர்

மோதல் நடைபெற்ற பகுதிக்குள் சிக்கியிருந்த விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் சரணடைவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் எவ்வாறு தோல்வியடைந்தன என்பதை அவர் 'த சண்டே லீடர்' வார இதழுக்கு விவரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சரணடைய விரும்பினால் வெள்ளைக் கொடியுடன் வரலாம் என்ற அறிவிப்பை வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பஸில் ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவுமே தெரிவித்தனர். இது அவர்களின் திட்டம் என சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நடேசன், ரமேஷ், புலித்தேவன் மூவரும் வெள்ளைக் கொடியுடன் சரணடைய முன்வந்தவேளை அரச படையினரால் உயர்மட்ட உத்தரவின்படி சுட்டுக் கொல்லப்பட்டனர் என சரத் பொன்சேகா உறுதி செய்துள்ளார்.

அவ்வேளை, பிரிகேடியர் சவீந்திர சில்வாவின் படையணியுடன் இணைந்து சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் மூலமாகவே தனக்கு இது தெரியவந்ததாகவும் குறிப்பிட்ட பத்திரிகையாளர் தனக்கு இதனைத் தெரிவித்தார் எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

'த சண்டே லீடர்' இதனை உறுதி செய்வதற்காக மேஜர் ஜெனரலாகத் தற்போது பதவி உயர்த்தப்பட்டுள்ள சவீந்திர சில்வாவைத் தொடர்பு கொண்ட வேளை, அவர் அதிர்ச்சியடைந்தவராகக் காணப்பட்டார் என்றும், இராணுவப் பேச்சாளர் அனுமதி வழங்கும் வரை தன்னால் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்க முடியாது என அவர் தெரிவித்தார் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, இராணுவத் தளபதியின் அனுமதியைப் பெற்றபின்னரே இவ்விடயம் குறித்துத் தாம் கருத்துத் தெரிவிக்க முடியும் என்று 'த சண்டே லீடர்' சஞ்சிகைக்குக் கூறியிருக்கின்றார்.

பின்னர், இராணுவத் தளபதியும் சவீந்திர சில்வாவும் இவ்விடயத்தில் கருத்துக்கூற மறுத்துவிட்டனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார் என்று 'த சண்டே லீடர்' தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டிருந்தது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ சரக்கு விமானத்தில் கைதான ஐந்து பேருக்கு பிணை வழங்க மறுப்பு

கொழும்பு, டிச. 14

தாய்லாந்து விமான நிலையத்தில் ஆயுதங்களுடன் மீட்கப்பட்ட ஐ எல் 76 ரக இராணுவ சரக்கு விமானத்தில் இருந்து கைதான ஐந்து பேருக்கும் பிணை வழங்க அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்

இச்சம்பவம் தொடர்பில் தாய்லாந்து அதிகாரிகளால் ஐக்கிய நாடுகள் சபையிடம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியாவில் இருந்து வந்த விமானத்தில் இருந்த ஆயுதங்கள் அனைத்தும் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டதாக முன்னர் தகவல்கள் வெளியாகி இருந்தன.

எனினும் இந்த விமானத்திலிருந்த ஆயுதங்களுக்கும் இலங்கைக்கும் தொடர்பு இல்லை என இலங்கை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது. இந்த நிலையில் நான்கு கஸகஸ் தானியர்கள் உள்ளிட்ட 5 வெளிநாட்டவர்கள் இவ்விமானத்திலிருந்து கைது செய்யப்பட்டு தற்போது தடுத்து வைக் கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விசாரணைக்கான அனுமதி கோரி விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் அவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது என தாய்லாந்து அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பொலிஸ் குற்றக்கட்டுப்பாட்டுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் குற்றவியல் நீதிமன்ற அனுமதியின் பின்னர் பாங்கொக் விஷேட சிறைக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது

## வடக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றில் அடுத்த 36 மணித்தியா லங்களுக்கு விட்டு விட்டு மழை பெய்வதோடு பலத்த காற்றும் வீசக் கூடும்.

இதேவேளை மன்னார் வளைகுடாவிலும், வடக்கு,கிழக்கு மாகாணக் கடற்பரப்பிலும், கடற்கொந்தளிப்பும் காணப்படும்.

மேலதிக வானிலை பற்றிய தகவல்கள் உடனுக்குடன் வானொலி மூலம் அறியத் தரப்படும் என அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

கடற்றொழிலுக்குச் செல்பவர்களை கடலுக்குச்செல்லவேண்டாம் என இடர் முகாமைத்துவ மத்திய நிலைய மாவட்ட இணைப்பு அதிகாரி கே. விமலராஜா அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இப்புயல் வங்காள விரிகுடாவிலிருந்து கிழக்காக இந்தியாவின் நாகப்பட்டினத்துக்குச் செல்லலாம் என சென்னை வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது. (அ-04)

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அலரி மாளிகையில் விருந்துபசாரமொன்று வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே அரச சொத்துக்களை தேர்தல் பிரச்சாரங்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது என தேர்தல் ஆணையாளர் கடுமையாக எச்சரிக்கை விடுத்தார் எனவும் கூறப்படுகிறது. (அ-சி)

## அதிகாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரடங்கிய உயர்மட்டக்குழுவே இந்த ஆவணத்தைப் புதுடில்லியில் கையளித்திருக்கின்றது.

இந்த ஆவணத்தின் உள்ளடக்கம் பகிரங்கமாவது தற்போதைய இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுவதால், இது பற்றிய தகவலைப் பகிரங்கப்படுத்துவதில்லை என இரு தரப்புகளும் இணங்கிக்கொண்டன என்றும் அறியவந்தது.

எனினும், மேற்படி குழுவின் புதுடில்லி விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் 'இலங்கையில் அரசியல் தீர்வு நோக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் இரு தரப்புகளும் இணங்கிக் கொண்டன' - என்று மட்டும் குறிப்பிடத் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இருபக்க ஆவணத்தில் -

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் வகையில் தான் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ள உத்தேச விவரங்களின் அடிப்படைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தரப்பு கட்டமைப்பு ரீதியாக - மேலோட்டமாக - குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் என்ன, அவை குறித்து இந்தியத் தரப்பு திருப்தியடைந்துள்ளதா என்பவை குறித்து ஏதும் தெரியவரவில்லை. (அ-சி)

## சகல பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக அனுமதியின்போது வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களிலும் எந்தவித பேதங்களுமின்றி மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

பல்கலைகள் தோறும் புதிய பயிற்சி நெறிகள் பலவற்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் - என்றார்.

## சரத்பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற விழாவில் பேசிய ஜெனரல் சரத் பொன்சேகா, இறுதிக்கட்டப்போரை நிறுத்துமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும் தாமே அதனை முன்னின்று நடத்தி வெற்றிபெற்றதாகக் கூறினார்.

''உண்மைப் போர் வீரனாக நின்று நான் போரை வழிநடத்தினேன். குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து நான் முடிவுகளை எடுக்கவில்லை. போரின் இறுதிக் கட்டத்தில் கூட அதனை நிறுத்துமாறு அழுத்தம் தரப்பட்டது. வெள்ளைக் கொடிகளைக் கட்டிக்கொண்டு வருபவர்களைச் சுடவேண்டாம் என்று எனக்கு அறிவுறுத்தல்கள் கிடைத்தன'' -

'' போரை நடத்துபவர்கள் போர் வீரர்களே. தங்களுடைய உயிரைப் பணயம் வைத்தே அவர்கள் களமுனையில் நிற்கிறார்கள். ஆகையால் அவர்களே போர் சம்பந்தமான முடிவுகளை எடுக்க வேண்டும்; கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருப்பவர்கள் அல்லர். வெள்ளைக் கொடிகளைத் தாங்கி வருபவர் கள் அவ்வாறு வருவதற்கு முன்னர் எத்தகைய அழிவுகளைச் செய்தார்கள் என்பதை எமது வீரர்கள் நேரில் கண்டவர்கள்; அனுபவித்தவர்கள். ஆகையால் அவர்கள் தங்களுக்குரிய கடமையைச் செய்தார்கள். அவ்வாறு செயற்பட்டதனால் தான் எங்களால் போரில் வெற்றிபெறமுடிந்தது." - என்று பொன்சேகா அந்தப் பாராட்டுக் கூட்டத்தில் பேசியிருந்தார்.

ஜெனரல் பொன்சேகா அவ்வாறு கூறியதை சர்வதேச ஊடகங்களும் வெளியிட்டிருந்தன. அவற்றை மையமாக வைத்து அமெரிக்கா தனது செனட் சபைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

மேலும் பொன்சேகா தெரிவித்த கருத்துகள் குறித்து ஆறு நிபுணர்களை கொண்ட குழு ஒன்றை நியமித்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணித்திருந்தார்.

தயாமாஸ்ரர், பிரபாகரனின் பெற்றோர்கள் வெள்ளைக்கொடி ஏந்தி வந்தபோது அவர்கள் சுடப்படவில்லை. அவர் முதலில் கூறியதற்கு முற்றிலும் முரணாக இப்போது தெரிவிப்பது -

குறிப்பாக எங்கள் நாடு புதிய சவால்களை எதிர்நோக்கி இருக்கும் இந்த வேளையில் இவ்வாறு கூறுவது - மிகவும் வருந்தத்தக் கதாகும்.

இப்போது சரத்பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளர். இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் எதிர்மறையான கருத்தை இத் தருணத்தில் தெரிவித்திருப்பது உகந்ததென்று அவர் கருதுவது ஏற்புடையதல்ல. சர்வதேச நியமங்களை மீறாமல் தொழில்சார் முறையில் போரை நடத்திய இராணுவப் படையணிக்கு இவரது இந்தக் கூற்று பெரும் துரோகத்தனமானதாகும். வன்னிப் போரின் போது போர்க்குற்றங்கள் நடைபெற்றதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை இதுவரையும் எவராலும் நிரூபிக்க முடியவில்லை.- என்றார். (அ-16)


அதிரடி விலைக்கழிவு
எமது ஸ்ரூடியோவில் படம் பிடித்திட. ...
★ அடையாள அட்டைப்படம் 80/=
★ (4x6) அளவிலான படங்கள் 30/=
★ பிரதியாக்கம் (ஸ்ரூடியோமட்டும்) 9/=
★ பனர், ஸ்டிக்கர் 70/=
(சி/562927)
மூர்த்தி டிஜிட்டல் கலர்லாப்
யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது நிறுவனத்தின் முன்னோடியும் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியின் ஆசிரியையுமான
திருமதி ந.தேவராணி B.Ed., S.L.P.S - 2-I
அவர்கள் B.Ed. பரீட்சையிலும் அதிபர் சேவைப்பரீட்சையிலும் சித்தியடைந்தமையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். அத்துடன் அவர் உயர்ந்த பதவிகளை வகிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
நிர்வாகி
Raveens English Medium Classes
KARAVEDDY.
021 226 3321
021 320 5472
(சி/563256)






மாபெரும் மலிவு விற்பனை
30 வருட நிறைவை ஒட்டி சுந்தர்சன் நிறுவனத்தால் நடத்தப்படும் மாபெரும் மலிவு விற்பனை. வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க இன்னும் சில தினங்களுக்கு நடத்தப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.
சுந்தர்சன்
யாழ்.வீதி, மானிப்பாய்.
(சி/563258)

யாழில் கொழும்பு பிறின்டேர்ஸ்
666, கே.கே.எஸ். வீதி (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை) யாழ்.
உயர் தொழில்நுட்பத்திலான நவீன முறை அச்சுப்பதிப்பகம்.
சகலவிதமான கலண்டர்களும் பிறிண்டிங் செய்துகொள்ளலாம்
சகல அளவிலான நோட்டிஸ்கள், நினைவு மலர்கள், விலவலைகள், லேபல்கள், அழைப்பிதழ்கள், வாழ்த்துப்பாக்கள், கண்ணீர் அஞ்சலிகள், மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளையும்
ஓவ்செற் பிறிண்டிங்
1 கலர்
2கலர்
3கலர்
4கலர் (மல்ரிகலர்)
மலர் வெளியீடுகளுக்கு 20% விலைக் கழிவு வழங்கப்படும்.
கலண்டர் பிறின்ரிங் 3/= மட்டும்
தரத்திற்கு நாங்கள் உத்தரவாதம்

கணனிக் கற்கைநெறி கற்பிப்பதற்கு
அறிவு, அனுபவம் மிக்கவர்கள் தேவை
தகுந்த ஆவணங்களுடன்
14.12.2009
நேரில் சமுகமளிக்கவும்.





GATEWAY LANGUAGE & ICT CENTRE JAFFNA
347, KASTHURIAR ROAD,
JAFFNA.
T.P: 021 5675555

மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு...
80 பக்கம் - 12/=
120 பக்கம் - 18/=
160 பக்கம் - 24/=
200 பக்கம் - 30/=
உங்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் எழுது கருவிகளை மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்து மடல்கள், அலங்காரப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கௌ்ள
தரம் பார்த்து வாங்கவே அவசியமில்லை யாவும் முதற்தரமானவை
தரமான பொருள்கள் மலிவான விலையில்
வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்
லக்சுமி காகிதாதிகள்
இல. 02, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4375
அண்ணா கோப்பிக்கு அருகில்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org